போஸ்ட் மாஸ்டர்

(கதைகள்)

ரவீந்திரநாத் டாகுர்

மொழிபெயர்த்தோர்:

க. நா. குமாரஸ்வாமி, பி.ஏ.,

த. நா. சேனாபதி, எம், ஏ.,

அல்லயன்ஸ் கம்பெனி

தபால் பெட்டி 617, மயிலாப்பூர், சென்னை.

முதற் பதிப்பு
நவம்பர் ' 51
உரிமை பதிவு

பொருளடக்கம்

ரூ. *1-14-0*

அல்லயன்ஸ் பி
மயிலாப்பூ

முன்னுரை

ரவீந்திரரின் ஒவ்வொரு கதையும் ஏதாவது உண்மை நிகழ்ச்சியின் பேரிலேயே உருவாகி இருக்கும். கவியின் இலக்கிய மெருகில் தோய்ந்து புதுப் பொலிவுடன் இவருடைய கதாபாத்திரங்கள் விளங்குவதைக் காணலாம். 'ரவி'யின் கிரணம், நெடுவரை, உன்னத மாளிகை, வான் அளாவிய மரத்தின் உச்சி இவற்றின் மீது படிவதோடு நிற்காமல், ஏழைக் குடியானவனின் இருண்ட மண்குடிலையும், கடைசியர் களை வெட்டும் அகலிடை வயல்கள், கிராமப் பெண் குளிக்கும் குளத்தங்கரை, வெயிலுக்கு ஆயர் ஒதுங்கும் ஆலமரத்தடி, வீட்டு முற்றத்தில் உள்ள துளசிமாடம் இவை போன்ற இடங்களையும் ஒளியுறச் செய்தது.

கல்லாத, கபடற்ற எளிய மாந்தரின் சுக துக்கங்களை நேரில் கண்டு அவர்களுடன் இழைந்து பழகி, இந்தக் காட்சிகளைக் கலைஞனின் கண்கொண்டு உயர்ந்த சிற்பியின் கைவேலையுடன் அவர் வரைந்திருக்கிறார்.

ரவீந்திரர் மேலை நாகரிகத்தைப் பார்த்தவராயினும் அசல் வங்காளி. தம் வாழ்வின் நடுப்பகுதியை விசாலமான பத்மா நதியிலும், அதன் கரையிலுள்ள கிராமங்களிலும் கழித்தார். கிராமத்தாயின் செல்வப் புதல்வர் அந்த அன்னை மடியில் வீற்று உள்ளக் குதூகலிப்புடன் ஆண்டியைப்போல் அவர் பாடித் திரிந்திருக்கிறார்.

நகரத்தைத் துறந்து, படித்த இளைஞரை, "கிராமத்துக்கே திரும்புங்கள்" என்று அழைத்தார். புகழின் பளுவைத் தாங்க முடியாமல் திணறும்பொழுது, படித்தவர்கள் இழைக்கும் பல தொல்லைகளிலிருந்து மீளக் கிராம அன்னையின் தண்ணிழலை நினைத்துக்கொண்டு அவர் கல்கத்தாவை விட்டு ஓட்டம் பிடிப்பார். அடுத்தபிறவியில்

தாம் வேய்ங்குழல் இசைக்கும் ஆயர் சிறுவனகப் பிறக்க வேண்டுமென்பதே அவருடைய கோரிக்கை.

அவர் கதைகளில் வரும் பெண்கள் கோடையில் மலைவாசம் செய்யும்பொழுது இங்கிலீஷை பிதற்றும் துங்க நாகரிகர்கள் அல்லர். பையிலிருந்து வாடிய வெற்றிலைச்சுருளை எடுத்துமென்று தின்னும் மக்களே; இவர்கள் வெறுங்காலுடன் சதுப்பிலும் சேற்றிலும் நடப்பவர்கள். அந்தியில் அகல் விளக்கு ஏற்றித் தெய்வ வணக்கம் செய்வார்கள். அகவினம் பாடித் தானியத்தைத் தாமே குற்றும் நாட்டுப்புறத்தவர்கள்; பொய்ச் சாட்சி கூருத வெள்ளை மனத்தினர். கிழிந்த பாயில் சுருட்டிக் கொண்டு மலேரியாக் காய்ச்சலினுல் உடல் மெலிந்து கிடப்பவர்கள். ஒரு வேளைச் சோற்றுக்கே வழி இராதவர்கள். வான் துளியை நோக்கிப்பயிர் வைப்பவர்கள். பஞ்சம் வந்தபொழுது இடந்தெரியாமல் மடிந்து மறைந்துபோகும் ஜீவன்கள். இலக்கிய தர்பாரில் இடம் பெருதவர்கள். இத்தகையோரை டாகுர் தம் இதயத்துள் நெருங்கிய உறவினராகக் கொண்டாடுகிருர். அவர் தரும் அரிய சிறு கதை இலக்கியத்தை வாழவைக்க வந்த கற்பனைக் குழந்தைகள் இவர்கள். இவர்களைப்போல் தமிழ்நாட்டிலும் அநேகம் மக்களைக் காணலாம். இன்று இம்மாதிரி மக்களின் வாழ்க்கையைப்பற்றி அறிந்துகொள்வதே நமக்குத் தேவை என்ற நோக்குடன் இத் தொகுதியிலுள்ள கதைகளை மொழி பெயர்த்துள்ளோம். இந்தத்தொண்டில் எங்கள் நண்பரும் இளம் எழுத்தாளருமான **ஸ்ரீ ரங்கநாத ஆத்ரேயன்** எங்களோடு ஈடுபட்டதை இங்கே தெரிவிக்கக்கடமைப்பட்டுள்ளோம்.

த. நா. குமாரஸ்வாமி
த. நா. சேனுபதி

1 போஸ்ட் மாஸ்டர்

முதலில் வேலையில் சேர உலூபுர் கிராமத்திற்குப் போஸ்ட் மாஸ்டர் வர வேண்டியதாயிற்று. சாதாரண மான கிராமந்தான். அருகே ஓர் அவுரிக் கிடங்கு இருக் கிறது. அதன் துரை பலவாறு முயன்று இப்புதிய தபாலாபிஸை ஏற்படுத்திக்கொண்டார்.

எங்கள் போஸ்ட் மாஸ்டர் கல்கத்தாவைச் சேர்ந் தவர். ஜலத்திலிருக்கும் மீனை மேட்டில் எடுத்துப் போட் டால் எப்படித் துடிக்குமோ இந்தப் பட்டிக்காட்டுக்கு வந்ததும் போஸ்ட் மாஸ்டருக்கும் அதே நிலை ஏற்பட்டது. இருண்ட வீடு ஒன்றில் அவருடைய ஆபீஸ். சமீபத்தி லேயே பாசி பிடித்த ஒரு குளம். அதைச் சுற்றி நாலு பக் கமும் புதர். அவுரித் தொட்டி குமாஸ்தா போன்ற உத்தி யோகஸ்தர்களுக்குப் பேச அவகாசமே இராது. தவிர, பெரிய மனிதர்களோடு பழக அருகதை அற்றவர்கள்.

முக்கியமாகக் கல்கத்தா ஆசாமிகளுக்கு நாலுபேரோடு பழகத் தெரியாது. பழக்கமிராத இடத்துக்குப் போனால் மூஞ்சியைத் தொங்கப்போட்டுக்கொண்டு இருப்பார்கள். ஆகவே, இருக்கும் ஜனங்களோடு சேர்ந்து பழக அவரால் முடியவில்லை. வேலையோ அதிகமில்லை. எப்போதாவது ஒன்றிரண்டு கவிதைத் துணுக்குகள் எழுத முயல்வார். அதன் நடையைப் பார்த்தால், 'நாள் முழுவதும் இளந் தளிர்களின் சலசலப்பைக் கேட்டுக்கொண்டிருந் தாலும், வானிடை உலவும் மேகத்தைப் பார்த்துக்

கொண்டிருந்தாலும் போதுமே இந்த வாழ்க்கைக்கு! என்ன இன்பம்!' என்ற பாவனைகள் தொனிக்கும். ஆனால் அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும் அதன் உள்ளுறை உவமம்! அராபிக் கதையில் வரும் பூதம் ஏதாவது சட்டென ஒரே இரவிற்குள் தளிர் கொஞ்சிடும் மரக் கொம்பரையெல்லாம் வெட்டி வீழ்த்தி நல்ல ரஸ்தாவை உண்டாக்கி, வரிசை வரிசையாக மாடி வீடுகள் எழுப்பி, மேகங்களைக் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துவிடுமேயானால், வாடிச் சாகும் இந்த நகர இளைஞர் புத்துயிர் பெற்றுப் போவாரே!

போஸ்ட் மாஸ்டரின் சம்பளம் சொற்பந்தான். தாமே சமைத்துச் சாப்பிட வேண்டும். கிராமத்தில் கதியற்ற ஒரு சிறுமி அவருடைய வேலைகளையெல்லாம் செய்து தருவாள். சாப்பிடவும் கொஞ்சம் கிடைக்கும் அவளுக்கு. அவள் பெயர் ரதன். வயது பன்னிரண்டு பதின்மூன்று இருக்கும். கல்யாணம் ஆகவில்லை.

சாயங்காலம். கிராமத்தில் தொழுவங்களில் புகை சுழன்று எழும்; தோப்புக்களில் விட்டில்கள் இரைச்சலிடும். தொலைவில் கிராமத்துக் கஞ்சா அடிக்கும் ஆண்டிகளின் கூட்டம் கஞ்சிரா, ஜாலர்கள் கொட்டி உரக்கப் பாடும். இருண்ட வராந்தாவில் தனிமையாக உட்கார்ந்து மரங்களின் அசைவைக் கண்ணுற்றால் கவிஞரின் உள்ளமும் சற்றுத் திடுக்குறும். அச்சமயத்தில் உள்ளே ஒரு மூலையில் மெல்லிய ஒளி தரும் விளக்கை ஏற்றிவிட்டுப் போஸ்ட் மாஸ்டர், "ரதன்" என்று கூப்பிடுவார். ரதன் வாசலருகே உட்கார்ந்து இதற்காகத்தான் காத்திருப்பாள். ஆனால் முதல் தடவை கூப்பிடும்பொழுதே வர மாட்டாள்; "என்ன பாபு, கூப்பிட்டீர்களா?" என்பாள்.

போஸ்ட் மாஸ்டர்: என்னடி செய்கிறாய்?

ரதன்: அடுப்பு மூட்டப்போகவேணும் சமையலறைக்கு.

போஸ்ட் மாஸ்டர்: உன் சமையல் அறைக் காரியம்

எல்லாம் அப்புறம் ஆகட்டும். ஒரு தடவை ஹுக்காவை நிரப்பிக் கொடு.

சற்று நேரத்திற்கெல்லாம் ஹுக்காவில் தணலைப் போட்டு ஊதிக்கொண்டே ரதன் உள்ளே நுழைவாள். ஹுக்காவை வாங்கிக்கொண்டு போஸ்ட் மாஸ்டர், "ரதன், உங்கம்மாவை நினைவிருக்கிறதோ?" என்று கேட்டார். அது பெரிய விஷயம்; சில ஞாபகம் இருக்கும்; சில இரா. தாயைவிடத் தகப்பனார்தான் அவளை அதிகமாக நேசித்தார். அவரைப்பற்றி ஞாபகம் இருக்கிறது. நாள் முழுவதும் உழைத்துவிட்டு அவர் சாயங்காலமாக வீடு திரும்புவார். அக்காலத்தின் நினைவுகள் சில அவள் உள்ளத்தில் சித்திரம்போல் பளிச்செனப் பதிந்திருந்தன. பேசிக்கொண்டே ரதன் போஸ்ட் மாஸ்டரின் காலின் கீழே தரையில் உட்காருவாள். அவளுக்கு ஒரு சின்னத் தம்பி இருந்தான். வெகு நாளுக்கு முன் மழைக்காலத்தில் ஒரு நாள் ஒருகுட்டையின் கரையில் மரக்கிளையின் மிலாறு ஒன்றைப் பிய்த்துத் தூண்டிலாகப் பாவித்து மீன் பிடிப்பது போல விளையாடினார்கள். அந்த அற்ப விஷயமே அடிக்கடி அவள் உள்ளத்தில் மூண்டெழும். இவ்வாறு பேசுகையிலேயே சிலநாள் இரவு வெகுநேரமாகி விடும். பேச்சுச் சுவாரஸ்யத்தில் போஸ்ட் மாஸ்டருக்குச் சமையல் செய்து சாப்பிட வேண்டுமே என்ற நினைவே இராது. காலையில் சமைத்தது ஏதாவது இருக்கும். ரதன் பரபரவென்று அடுப்பை மூட்டி ரொட்டி தட்டித் தருவாள். இருவரும் அதைத் தின்று அன்றை இரவைக் கடத்துவார்கள்.

ஒரொரு நாள் அந்திப்பொழுதில், அந்தக் குடிசையின் வெளி வராந்தாவில் ஒரு மூலையில், மரக் கட்டிலில் உட்கார்ந்து போஸ்ட் மாஸ்டர் தம் வீட்டு விஷயத்தை எடுப்பார்- தம் சிறிய தம்பி, தாய், தமக்கை, இவர்களைப்பற்றி. வேறு இடத்தில் தனியாக இருக்கும்பொழுது இந்தக் கவனங்கள் துக்கத்தைக் கிளறிவிடும். நெருங்கிய நண்

பர்களிடங்கூட மனத்தை விட்டுச் சொல்லாத குடும்ப விஷயங்களைப்பற்றி, ஒன்றும் அறியாத இச் சிறுமியிடம் சொல்லுவார். இந்தப் பழக்கத்தினால் அவளும் அவருடைய விட்டு மனிதர்களை அம்மா அக்கா வென்று குறிப்பிட ஆரம்பித்தாள். அவர்களை அச்சிறுமி பார்த்த தில்லை. அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதை அவள் தன் கற்பனைத் திரையில் கண்டாள்.

மழைக் காலத்தில் ஒரு நாள், வானில் மேகங்கள் எங்குமே இல்லை. உஷ்ணமான காற்று வீசிக்கொண்டிருந்தது. வெயில் உறைக்கக் காய்ந்தது. ஈரப்புல் உலரும் வாசனையும் மரங்களில் ஒழுகும் பிசினுடைய மணமும் பரவியிருந்தன. மாநிலம் அலுப்புற்று விடும் மூச்சு உடம்பில் வந்து படுவதுபோல் இருந்தது. எங்கேயோ ஒரு பறவை நடுப் பகலில் விடாப்பிடியாகக் கூவிக்கொண்டிருந்தது. இயற்கையின் அம்பலத்தில் அம் முறையிடு நெஞ்சை உருக்கும் விதமாக ஒலித்தது. போஸ்ட் மாஸ்டருக்கு அச்சமயம் கையில் ஒரு வேலையும் இல்லை. அன்று மழையில் குளித்த மெல்லிய தளிர்களின் அசைவும், பங்கமுற்று மேக நிரை வெயிலில் வெண் மேனி பெற்று உலவும் காட்சியும் அநுபவிக்கத் தகுந்தவையே. போஸ்ட் மாஸ்டர் இந்த இயற்கையின் எழிலைக் கண்டு களிக்காமற் போகவில்லை. இந்த மாதிரி சமயங்களில் தம்முடன் அநுபவிக்க நெருங்கிய ஆத்மா ஒன்று பக்கத்தில் இல்லையே என்ற வருத்தந்தான். இதயத்துடன் ஒன்றி வாழும் ஓர் ஆள் இராத குறையே. விடாமல் கூவும் அப்பறவைக்கும் இவ்வேதனை தானே! மனிதர் இராத நிழல் கவிந்த இந்தப் பகற்பொழுதில் இலைகளின் சலசலப்பிலும் இந்த ஏக்கமே தொனிப்பதுபோல் இருந்தது. அந்தக் குக்கிராமத்தில் சொற்பச்சம்பளத்தில் காலங்கடத்தும் போஸ்ட் மாஸ்டரின் மனத்துள், ஓய்ந்த அப்பகல் வேளையில், இத்தகைய பாவனைகள் மெல்ல மிதந்து வந்தன.

போஸ்ட் மாஸ்டர் பெருமூச்செறிந்து, "ரதன்" என்று கூப்பிட்டார். அவள் அப்போது கொய்யா மரத்தின்கீழ்க் காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்து கொய்யாக்காய் தின்று கொண்டிருந்தாள். எஜமானன் கூப்பிடுவதைக் கேட்டு ஓடிவந்தாள். இரைக்க இரைக்க, "பாபு, கூப்பிட்டீர்களா?" என்றாள். போஸ்ட்மாஸ்டர், "உனக்குக் கொஞ்சங் கொஞ்சமாகப் படிக்க கற்றுக்கொடுக்கப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு மத்தியான்னம் அவளுக்கு 'அவன்ன' கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். இவ்வாறு சில நாட்களுக்குள்ளேயே அக்ஷராப்பியாசம் முடிந்துவிட்டது.

ஆவணி மாதத்தில் மழைக்கு ஓர் ஓய்வில்லை. வாய்க்கால், ஏரி, சாக்கடையிலெல்லாம் நீர் நிரம்பிக் கிடந்தது. நாள் முழுதும் மழையின் ஓசையும், தவளையின் இரைச்சலுந்தான். கிராமத்துச் சாலையில் ஜனங்களின் நடமாட்டம் அநேகமாக நின்று போய்விட்டது. படகில் தான் சந்தைக்குப் போகவேண்டியதாயிற்று.

ஒரு நாள் காலையிலிருந்தே மழை பலமாகப் பெய்தது. போஸ்ட் மாஸ்டரின் மாணவி வெகு நேரம் வாயிலருகே காத்துக்கொண்டிருந்தாள். ஆனால் வழக்கப்படி போஸ்ட் மாஸ்டர் கூப்பிடாமற் போகவே தன் புத்தகங்களுடன் உள்ளே நுழைந்தாள். போஸ்ட் மாஸ்டர் கட்டிலின் மேல் படுத்திருந்தார். இளைப்பாறுகிறாரோ என்று நினைத்து ஓசைப்படாமல் வெளியே செல்ல ஆரம்பித்தாள். "ரதன்" என்று போஸ்ட் மாஸ்டர் கூப்பிடவே படபடப்புடன், திரும்பி, "பாபு, தூங்கிக்கொண்டிருந்தீர்களா?" என்றாள். போஸ்ட்மாஸ்டர் நடுங்கும் குரலில், "உடம்பு சரியாக இல்லை. என் நெற்றியைத் தொட்டுப் பார்" என்றார். துணைக்குப் பக்கத்தில் எவரும் இராத அந்தத் தனி வாழ்வில், கொட்டு மழையினால் நோயுற்று உடல் மெலிந்திருக்கும் நிலையில், யாருடைய பணிவிடையையோ எதிர்பார்த்தது அவர் உள்ளம். ஜுரத்தால் கொதிக்கும் நெற்றிக்

கட்டில், சங்குவளை பூண்ட கரங்களின் மெல்லிய பரிசத்தை நாடியது அவர் உடல். இந்தத் தனிமையில் அன்னையோ தமக்கையோ அருகே உட்கார்ந்திருக்க மாட்டார்களா என எண்ணினார். இந்த இடத்தில், வெளி நாட்டில் தனிவாழ்வு நடத்தும் இவர் விருப்பம் வீணாகவில்லை. சிறுமி ரதன் சிறு பெண்ணாக இல்லை. அந்தக் கணமே அன்னையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள். வைத்தியரை அழைத்து வந்தாள்; குறித்த காலத்தில் மாத்திரை கொடுத்தாள். ராத்திரி முழுவதும் தலைமாட்டில் உட்கார்ந்திருந்தாள். கஞ்சிபோட்டுத் தந்தாள். "இப்போது, எப்படி இருக்கிறது, பாபு?" என்று அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தாள்.

போஸ்ட் மாஸ்டர் இளைத்துப் போய்ப் படுக்கையிலிருந்து எழுந்தார். எப்படியாவது இங்கிருந்து மாற்றலாகி விட்டால் போதும் என்று தோன்றியது அவருக்கு. இருப்பிடத்தின் நிலைமை உடல்நிலைக்கு ஒவ்வாது என்று எடுத்துக் காட்டி மேலதிகாரிகளுக்கு அன்றைய தினமே எழுதி மாற்றலுக்கு விண்ணப்பம் செய்துகொண்டார்.

ரதன் கதவுக்கு வெளியே தன் பழைய இடத்திற்கு வந்துவிட்டாள். ஆனால் முன்போல் போஸ்ட் மாஸ்டர் அடிக்கடி அவளைக் கூப்பிடுவதில்லை. நடுநடுவே எட்டிப் பார்ப்பாள். அவர் ஈஸிசேரிலாவது கட்டிலிலாவது யோசனையில் ஆழ்ந்து படுத்திருப்பார். ரதன் அவர் கூப்பிடுவதற்காகக் காத்திருப்பாள். அவர் தாம் போட்ட மனுவுக்கு என்ன பதில் வருமோ என்று திகிலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். சிறுமி தன் இடத்திலேயே உட்கார்ந்து பழையபாடத்தைத் திருப்பித்திருப்பிப் படித்துக்கொண்டிருப்பாள். அவர் கூப்பிட்டால் எல்லாம் மறந்து போய்விடுமே என்ற சந்தேகம் அவளுக்கு. பதினைந்து நாட்கள் கழித்து ஒரு நாள் சாயங்காலம் போஸ்ட் மாஸ்டர் அவளை அழைத்தார். பெருமையுடன் அவள்

உள்ளே நுழைந்து, "என்னைக் கூப்பிட்டீர்களா, பாபு?" என்றாள்.

போஸ்ட்மாஸ்டர், "நாளைக்கே நான் போகிறேன், ரதன்" என்றார்.

ரதன்: எங்கே போகிறீர்கள், பாபு?

போ. மா: வீட்டுக்குப் போகிறேன்.

ரதன்: திரும்பி எப்போது வருவீர்கள்?

போ. மா: வரவே மாட்டேன், இனிமேல்.

ரதன் மேலே ஒன்றும் கேட்கவில்லை. போஸ்ட் மாஸ்டர் தாமாகவே அவளுக்குச் சொன்னார்— தாம் மாற்றலுக்காக விண்ணப்பம் செய்தது, அதை அவர்கள் நிராகரித்தது எல்லாவற்றையும். ஆகவே, வேலைக்குச் சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டு வீட்டுக்குப் போகிறாராம். வெகு நேரம் இருவரும் பேசவில்லை. மினுக் மினுக் என்று விளக்கு எரிந்துகொண்டிருந்தது. ஓரிடத்தில் வீட்டின் ஓட்டைக் கூரை வழியாக மழைநீர் தரையில் டப்டப் என்று சொட்டிக்கொண்டிருந்தது.

சற்று நேரங் கழித்து ரதன் மெல்ல எழுந்து ரொட்டி தட்டச் சமையலறைக்குச் சென்றாள். மற்றைய நாட்களைப் போலப் படபடப்பு அவளிடம் காணவில்லை. நடுநடுவே ஏதேதோ சிந்தனைகள் எழுந்தன. போஸ்ட் மாஸ்டருக்கு ஆகாரம் தயாரானதும் சிறுமி அவரைச் சட்டென்று, "என்னையும் உங்கள் வீட்டிற்கு அழைத்துப் போகிறீர்களா, பாபு?" என்று கேட்டாள்.

போஸ்ட் மாஸ்டர் சிரித்து, "அது எப்படி முடியும்?" என்றார். என்ன விஷயம், ஏன் அவளை அழைத்துப் போக முடியாது என்றெல்லாம் சொல்லவேண்டியது அவசியமாகப் படவில்லை அவருக்கு.

இரவு முழுவதும் கனவிலும் நனவிலும் அச்சிறுமியின் காதில், "அது எப்படி முடியும்?" என்று அவர் சிரித்துக் கொண்டே சொல்வது கேட்டுக்கொண்டிருந்தது.

போஸ்ட் மாஸ்டர் காலையில் எழுந்து பார்க்கும் பொழுது, குளிக்க நீர் தயாராக இருந்தது. கல்கத்தா வழக்கப்படி அவர் தூக்கிய நீரில்தான் ஸ்நானம் செய்வார். அவர் எப்போது புறப்படுகிறார் என்று அவளால் கேட்க முடியவில்லை. ஒருவேளை விடியற்காலை யிலேயே வேண்டியிருக்குமோ என்று நினைத்து இரவோடு இரவாக ரதன் ஆற்றிலிருந்து நீர் கொண்டுவந்திருந் தாள். குளித்தானதும் ரதனைக் கூப்பிட்டார். ரதன் ஓசைப்படாமல் வந்து கட்டளையை எதிர்பார்த்து அவர் முகத்தை நோக்கினாள். அவர், "ரதன், என் இடத்திற்கு வரும் ஆளிடம் சொல்லிவிட்டுப் போகிறேன். அவர் என்னைப்போலவே உன்னிடம் பக்ஷமாக இருப்பார். நான் போகிறேனே என்று நீ யோசிக்க வேண்டாம்" என்றார். இந்த வார்த்தைகள் அன்பிலிருந்தும் இளக்கத்திலிருந் தும் எழுந்தவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒரு பெண்ணின் உள்ளத்தை யார் அறிவார்? ரதன் எத்தனை தடவை அவருடைய திட்டுக்களையெல்லாம் பொறுத்து வந்திருக்கிறாள். ஆனால் இன்று அவருடைய நயமான பேச்சுகள் அவளுக்குப் பொறுக்கவில்லை. ஒரேயடியாகத் துக்கம் பொங்கி எழ அழுதுகொண்டே, "வேண்டாம், என்னைப்பற்றி ஒருவரிடமும் ஒன்றும் சொல்ல வேண் டாம். நான் இங்கே இருக்கமாட்டேன்" என்றாள்.

ரதன் இப்படி இருப்பாள் என்று போஸ்ட் மாஸ்டர் நினைக்கவே இல்லை. பிரமித்துப் போனார்.

புதிய போஸ்ட் மாஸ்டர் வந்தார். அவரிடம் பொறுப்பை ஒப்பித்துவிட்டுப் பழைய போஸ்ட் மாஸ்டர் புறப்பட்டார். போகும் சமயம் ரதனைக் கூப்பிட்டு, "ரதன், உனக்கு ஒன்றும் தர முடியவில்லை. இருந்தாலும், போகும் போது கொஞ்சம் கொடுத்துவிட்டுப் போகிறேன். அதை வைத்துக்கொண்டு காலங் கடத்தம்மா" என்றார்.

வழிச் செலவுக்குக் கொஞ்சம் வைத்துக்கொண்டு, தம் சம்பளம் முழுவதையும் பையிலிருந்து வெளியே எடுத்தார். ரதன் தரையில் விழுந்து அவர் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "பாபுஜீ, உங்கள் காலில் விழுகிறேன். எனக்கு ஒன்றும் தரவேண்டாம்; எனக்காக ஒருத்தரும் கவலைப்படவேண்டாம்" என்று கூறியவாறு ஒரே தாவில் அங்கிருந்து ஓடிவிட்டாள்.

போஸ்ட் மாஸ்டர் பெருமூச்செறிந்து, கையில் கான்வாஸ் பையும், தோளில் குடையும், கையில் நீலம் வெளுப்புக் கோடுகள் போட்ட தகரப் பெட்டியும் எடுத்துக்கொண்டு மெதுவாகப் படகை நோக்கிச் சென்றார்.

படகில் ஏறிக்கொண்டார். 'படகும் நகர்ந்தது. மழையினால் பெருக்கெடுத்த நதியின் ஜலராசி, பொங்கி எழும் கண்ணீர்த்திரள் போல் ததும்பியது நாற்புறமும். அப்போது இதயத்துள் ஒரு வேதனை இருள் கவிந்திருந்தது. சாமானியமான ஒரு கிராமப் பெண்ணின் துயர் முகத்தில் உலகின் வருத்தமெல்லாம் திரண்டு இருந்தது. திரும்பிப் போய், உலகத்தின் மடியிலிருந்து நழுவிவிட்ட அந்த அநாதைச் சிறுமியைக் கூடவே அழைத்துச் செல்ல வேண்டுமென்ற ஓர் எண்ணம் வந்தது அவருக்கு. ஆனால் படகோட்டிகள் பாயை விரித்துவிட்டார்கள். நீர்த்திரள் கடுவிசையாக ஓடியது. படகும் துள்ளிக் கிராம மயானத்தைக்கடந்து ஏகியது. நதியோடு இழைந்து செல்லும் ஒரு பிரயாணியின் உள்ளத்தில் ஓர் உண்மை புலனாயிற்று: வாழ்வில் இதைப்போல் எத்தனையோ பிரிவின் துயரங்கள் ஏற்படுவது சகஜந்தானே! திரும்பித்தான் என்ன பலன்! இந்த உலகில் யார் யாருக்கு உறவு?

ஆனால் ரதனின் உள்ளத்தில் இந்த மாதிரி வேதாந்தம் எதுவும் தோன்றவில்லை. போஸ்ட் ஆபீஸைச் சுற்றி நாலு பக்கமும் கண்களில் நீர் ததும்ப அலைந்தாள். பாபுஜீ திரும்பி வருவார் என்ற ஒரு சிறு நம்பிக்கை. அந்த எண்

ணத்தில், அந்த இடத்தைவிட்டு நகர அவளால் முடிய வில்லை. அட பேதை மனமே! பிரமை கொஞ்சமும் விலக வில்லை. ஆறுதல்கள் நிதானமாகத்தான் மூளையில் ஏறு வது வழக்கம். பொய்யான மாயம், எதிரே அத்தாட்சி யிருந்தும் அதை நம்பாமல் நம்பிக்கையை இரு கையாலும் இதயத்தோடு தழுவிக்கொண்டுதான் நிற்கும். ஒரு நாள் இதய ரத்தத்தையெல்லாம் குடித்துவிட்டு அது ஓட்டம் பிடிக்கிறது. அப்பொழுது புத்தி வருகிறது. மீண்டும் பழைய பாசத்தின் மேலேயே நாட்டம் செல்கிறது - அந்த வலையில் சிக்கி மனம் அல்லலுறுகிறது.

2. டயரி

இரண்டு எழுத்துக் கற்றுக்கொண்டதுமுதல் உமா அதிக விஷமம் செய்ய ஆரம்பித்துவிட்டாள். வீட்டில் ஒவ்வொரு சுவரிலும் கரியால் வளைவாகக் கோடுகள் இழுத்து, படியாத எழுத்துக்களில், 'ஜலம் விழுந்தது. இலை அசைந்தது' என்றெல்லாம் கிறுக்கிவைப்பாள்.

அவளுடைய பாட்டியின் தலையணைக்குக்கீழே ஒரு புத்தகம் இருந்தது. அதைத் தேடி எடுத்து ஒவ்வொரு பக்கத்திலும், 'செங்கனி, கருநீர்' என்றெல்லாம் கிறுக்கி யிருந்தாள்.

வீட்டில் அடிக்கடி உபயோகிக்கும் புதுப் பஞ்சாங்கத் தில் திதிநக்ஷத்திரங்களைப் பார்த்து அவள் பெரிய அக்ஷ ரங்களில் கிறுக்கி இருந்ததில், ஒரேயடியாக ஒன்றுமே தெரியாமல் மறைந்துபோய்விட்டிருக்கும்.

அப்பாவின் கணக்குப் புத்தகத்தில் வரவு செலவுப் பத்தியில், "படித்து முன்னுக்கு வந்தவன்தான், குதிரை சவாரி போவான் காண்" என்று கிறுக்கி இருந்தது.

உமாவின் சகோதரன் கோவிந்தன் மிகவும் சாது. அவன் பத்திரிகைகளுக்கு எப்போதும் எழுதிக்கொண்டே

இருப்பான். அவன் பேச்சுவார்த்தைகளைக் கேட்டு அவனுடைய உறவினருக்கோ பழக்கமானவர்களுக்கோ அவன் மேதாவி என்ற விஷயத்தில் துளிகூடச் சந்தேகமில்லை. எதையும் ஆழ்ந்து யோசிப்பவன் என்ற அபவாதம் அவனுக்கு இல்லை.

உடற் கூற்றுப்பற்றி ஐரோப்பிய விஞ்ஞானக் கூட்டத்தாரிடையே சில பெரிய தவறுகள் விரவியிருந்தன. கோவிந்தன் தன் புத்தியைக் கொஞ்சங்கூட உபயோகப் படுத்தாமல் மயிர்கூச்செறியும் பாஷையில் அவைகளை எதிர்த்து ஓர் அருமையான கட்டுரை தயாரித்திருந்தான்.

சந்தடியற்ற பகலில் ஒருநாள் அண்ணனின் மசிப் புட்டியிலிருந்த பேனவினால் அந்தக் கட்டுரையின்மேல் பெரிது பெரிதாக, "கோபாலன் நல்ல பையன். கொடுப்பதைத் தின்பான்" என்று எழுதினாள்.

அண்ணனின் கோபம் எல்லையை மீறிவிட்டது. முதலில் அவளை அடித்தான். பிறகு அவளுடைய குட்டிப் பென்சில், இங்கி படிந்த மொட்டைப் பேனா, இன்னும் அவள் தலைகீழாய் நின்று சேர்த்த பொருள்களையெல்லாம் பிடுங்கிக்கொண்டுவிட்டான். அவமானம் அடைந்த சிறுமி இவ்விதம் அடிபடத் தான் செய்த தவறு என்ன என்று புரிந்துகொள்ள முடியாமல் ஒரு மூலையில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தாள்.

கோபம் தணிந்ததும் கோவிந்தன் கொஞ்சம் இளகி அவளுடைய சாமான்களையெல்லாம் கொடுத்தான். தவிர, கோடு போட்ட நல்ல டயரி (குறிப்புப் புத்தகம்) ஒன்றையும் தந்து தங்கையின் வேதனையை மாற்ற முயன்றான்.

அப்போது உமாவுக்கு ஏழுவயது. அப்போதிலிருந்து இரவில் தலையணைக்கடியிலும் பகலில் கையிலும் அந்த டயரி அவளை விட்டுப் பிரியாமல் இருக்கும்.

குட்டிப்பின்னலைப் பின்னிக்கொண்டு, சமையற்காரியுடன்கூடக் கிராமத்துப் பெண்கள் பள்ளிக்கூடத்துக்குச்

செல்லும்போதும் அந்த டயரியை எடுத்துப்போவாள் உமா. அதைக் கண்டு சிலருக்கு வியப்பு, சிலருக்கு வெறுப்பு, சிலருக்குப் பொறுமை.

முதல் வருஷம் மிகவும் பிரயாசைப்பட்டு அதில் "புள்ளினம் கூவின; பொழுது விடிந்தது" என்று எழுதினாள். படுக்கையறை மேஜைமேல் உட்கார்ந்து டயரியைப் பிடித்துக்கொண்டு உரத்த குரலில் படிப்பாள்; எழுதுவாள். இம்மாதிரி எவ்வளவோ வசனமும் கவிதைகளும் சேர்ந்தன.

இரண்டாவது வருஷத்தில் சுயரசனைகளும் இரண்டொன்று தலை காட்டின. சுருக்கமாயிருந்தாலும் ஆழ்ந்த கருத்துடையவை. முன்னுரையோ, பின்னுரையோ கிடையாது. மாதிரிக்கு இங்கே இரண்டு காட்டுகிறேன்:

கதாமாலையிலிருந்து 'புலியும் கொக்கும்' என்ற கதையைக் காப்பி அடித்திருந்தாள். அதன் கீழே ஓர் இடத்தில் ஒரு வரி இருந்தது. அதைக் கதாமாலையிலோ, தற்கால வங்க இலக்கியத்திலோ காண்பது அரிது. 'யசியின்மேல் ஆசை எனக்கு' என்ற வரிதான் அது.

இந்த இடத்தில் நான் ஏதோ காதல் கதை கட்டுவதாக எண்ணிவிடாதீர்கள், கிராமத்தில் இருக்கும் 10, 12 வயதுப் பையனல்ல யசி. வீட்டின் பழைய வேலைக்காரி பெயர்தான். அவளுடைய முழுப்பெயர் யசோதா.

ஆனால் யசியைக்குறித்துச் சிறுமிகொண்டுள்ள உண்மையான மனோபாவம் இந்த வரியால் சொல்லிவிட முடியாது. உண்மையை அறிய விரும்புபவன் இதே டயரியில் இரண்டொரு தாள் புரட்டினால் முன் சொன்ன வார்த்தைக்கு மாறான வாக்கியத்தைக் காண்பான்.

இந்த மாதிரி ஒன்றிரண்டல்ல: உமா எழுதும் ஒவ்வொரு வரியிலும் முரண்பாடான விஷயங்கள் இருக்கும். ஓர் இடத்தில் 'ஹரியோடு- டு- (ஹரிசரண் அல்ல. ஹரிதாஸி- பள்ளிக்கூடத்தோழி) என்று இருக்கும். அதற்

கருகிலேயே 'ஹரியைப்போல உயிர்த்தோழி மூன்று லோகத்திலும் இல்லை' என்பது போன்ற வரி இருக்கும்.

அதற்கடுத்த வருஷம்; அவள் வயது ஒன்பது. ஒரு நாள் காலையில் அவர்கள் வீட்டில் மேளம் கொட்டியது. உமாவுக்குக் கல்யாணம். மாப்பிள்ளை பியாரிமோஹன் உமாவின் அண்ணனை கோவிந்தனின் கூட்டாளி. அவனும் ஓர் எழுத்தாளன். வயது அதிகம் ஒன்றுமில்லை. கொஞ்சம் படித்தும் இருக்கிறான். என்றாலும் புதுமையான பாவங்கள் ஒன்றும் படியவில்லை. இதனால் எல்லோரும் அவனைக் கௌரவிப்பார்கள். கோவிந்தனும் அவனைப் பின்பற்ற முயன்றான். ஆனால் முடியவில்லை.

உமா காசிப் பட்டுப்புடைவை அணிந்து தன் சிறிய முகத்தை மறைத்துக்கொண்டு அழுதவண்ணம் புக்ககம் சென்றாள். அவள் தாய், "குழந்தை! மாமியார் சொல்வதைத் தட்டாதே. வீட்டுக் காரியங்களைச் செய்யக் கற்றுக்கொள். சதாகாலமும் படித்துக்கொண்டே இராதே" என்று புத்தி சொன்னாள்.

"பார், அங்கே சுவரிலெல்லாம் கிறுக்கிக்கொண்டு திரியாதே! அது நம்வீடு மாதிரி இல்லை. பியாரிமோஹன் எழுதியிருக்கிறதன் மேலே உன் கைச்சரக்கைக் காட்டாதே!" என்று கோவிந்தன் புத்தி கூறினான்.

சிறுமியின் மார்பு படபடத்தது. அவள் போகிற இடத்தில் யாரும் போனால் போகிறது என்று அவளை விடமாட்டார்கள் என்று தெரிந்துகொண்டாள். அவர்கள், "இது தவறு. இது பிசகு" என்று சொல்வதையெல்லாம் சில நாட்கள் திட்டு வாங்கிக்கொண்ட பின்னால்தானே திருத்திக் கொள்ள முடியும்!

அன்று காலையிலும் மேளம் கொட்டியது. ஆனால் காசிப் பட்டணிந்து முகத்தை முக்காட்டினால் மூடிக் கொண்டு நின்ற சிறுமியின் நடுங்கும் உள்ளத்தின் நினைவு தான் என்ன என்பதை அறிந்தவர் அந்த ஜனத்திர

ளில் ஒருவராகிலும் இருந்தனரா என்பது சந்தேகம்.

யசியும் உமாவுடன் சென்ருள். சில நாட்கள்கூட இருந்து உமாவைப் புக்ககத்தில் நிலைத்திருக்க விட்டுத் திரும்புவதாக ஏற்பாடு.

அன்பு நிறைந்த யசி எவ்வளவோ யோசனைகள் செய்து அந்த டயரியையும் எடுத்துச் சென்றிருந்தாள். அந்த டயரி உமாவின் பிறந்தவீட்டின் ஒரு பகுதி; பிறந்த வீட்டின் ஓர் இனிய நினைவின் சின்னம். பெற்ருேர்களின் மேல் உள்ள அன்பின் வரலாற்றைக் கோணல் மாணல் எழுத்துக்களில் அதில் காணலாம். இளம் பாவையின் மனத்துள் ஊறியிருந்த அன்பு, சுயேச்சை, இன்பம், இவற்றை வெளிப்படுத்தியது அது. அகாலத்தில் குடும்பப் பொறுப்பைத் தலைமேல் ஏற்றுக்கொண்ட ஒரு சிறுமியின் மனநிலைக்கேற்ப அமைந்த ஓர் இனிய சுதந்தரத்தின்சுவை அதில் திகழ்ந்தது.

புக்ககம் சென்ற புதிதில் சில நாட்கள் அவள் ஒன்றுமே எழுதவில்லை; அவகாசமும் இல்லை. கடைசியில் சில நாட்கள் கழித்து வேலைக்காரி யசி தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்தாள்.

அன்று மத்தியான்னம் உமா படுக்கையறைக் கதவைத் தாழிட்டுக்கொண்டு தகரப் பெட்டியிலிருந்து டயரியை எடுத்து அழுதுகொண்டே, "யசி வீட்டுக்குப் போய் விட்டாள். நானும் அம்மாவிடம் போகவேண்டும்" என்று எழுதிஞள்.

இப்பொது பழைய பாட புத்தகத்திலிருந்து பார்த்து எழுத அவகாசமில்லை; அந்தமாதிரி ஆசையும் அவளுக்கு இல்லை. இப்போது அந்தச் சிறுமி எழுதிய வரிகளில் முரண்பாடு அவ்வளவாகத் தென்படவில்லை. மேலே சொன்ன வரிக்குக் கிழே இந்த வரி தென்பட்டது.

"அண்ணு மாத்திரம் ஒரு தடவை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனுல், நான் அவன் எழுதினதில் கிறுக்க

மாட்டேன்.''

உமாவின் தகப்பனுர் நடுநடுவே வீட்டுக்கு அழைத்து வர முயற்சிகள் செய்தார். ஆனுல் கோவிந்தன் பியாரீ மோஹனுடன் கலந்து அதைத் தடுத்து வந்தான்.

உமா கணவனோடு இழைந்து பழக வேண்டிய சமய மல்லவா இது? அடிக்கடி அவளைப் பிறந்தவீட்டுக்கு அழைத்து வந்து செல்லம் கொடுப்பது பின்னுல் கஷ்டத் தைத் தரும் என்பான் கோவிந்தன். ஒரு கட்டுரையும் வரைந்து தள்ளியிருந்தான். அதில் ஏளன யுக்திகள் அதிகமாக இருந்தன.

ஊரார் வாயில் அதைக் கேட்ட உமா தன் டயரியில், ''அண்ணு, உன் கால்களில் விழுகிறேன். என்னை உன் வீட்டிற்கு அழைத்துப் போ. இனிமேல் நான் உனக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டேன்'' என்று எழுதினுள்.

ஒரு நாள் கதவைத் தாழிட்டு இந்த மாதிரி அர்த்த மற்ற ஒரு வரியை டயரியில் எழுதிக்கொண்டிருந்தாள். இவளுடைய நாத்தனுர் திலகமஞ்சரிக்கு இவள் என்ன செய்கிருள் என்று பார்க்க ஆவல். கதவின் இடுக்கு வழியாக இவள் எழுதுவதைப் பார்த்ததும் பேச்சற்று நின்ருள். அவர்களுடைய அந்தப்புரத்தில் படிப்பு என்பதே இதுவரை தலை காட்டியதில்லை.

அவள் தங்கை கனகமஞ்சரியும் பூட்டுத்துளை வழியாக உள்ளே பார்த்தாள். அவளையும்விடச் சின்னவளான அனங்கமஞ்சரி விரல்மேல் எழும்பி நின்று சிரமத்துடன் உள்ளே நடக்கும் ரகசியத்தை அறியமுற்பட்டாள்.

உமா எழுதிக்கொண்டிருக்கும்போது பழக்கமான மூன்று குரல்கள் கதவுக்கு வெளியே பகபகவென்று சிரிப்பது கேட்டது. விஷயம் தெரிந்துவிட்டது. டயரி யைப் பரபரப்புடன் மூடிப் பெட்டியில் வைத்துவிட்டு வெட்கத்துடனும் பயத்துடனும் படுக்கையின்மேல் முகத்தை மூடிக்கொண்டு படுத்துவிட்டாள் உமா.

பியாரிமோஹனுக்கு இந்த விஷயம் எட்டியதும் அவன் கவலை கொண்டான். எழுதப்படிக்கத் தெரிந்தால் நாவல், நாடகம் கொண்டு தரவேண்டுமே! அப்புறம் வீட்டுவேலை அந்தரத்தில்தானே நிற்கும்!

தவிர, வெகுநேரம் யோசனைசெய்து அவன் இதைப் பற்றி ஓர் உண்மையையும் கண்டுபிடித்திருந்தான். "ஸ்திரீ சக்தி, புருஷசக்தி இவைகளின் கூட்டுறவால் தாய்மை யான தாம்பத்திய சக்தி உண்டாகிறது. ஆனால் எழுதப் படிக்கத் தெரிந்து, அதனால் ஸ்திரிசக்தி மடிந்து புருஷ சக்தியானால், அப்போது புருஷசக்தியோடு புருஷசக்தி மோதி அதனால் தாம்பத்திய சக்தி நாசமாகிறது. பெண் ணும் விதவையாகிறாள்."- இதுவரை இந்த உண்மையை யாரும் மறுத்ததாகத் தெரியவில்லை.

சாயங்காலம் பியாரிமோஹன் வீட்டுக்கு வந்ததும் உமாவைத் திட்ட ஆரம்பித்தான். "காலம் மாறிவிட்டது. காதிலே பேனாவைச் செருகிக்கொண்டு எந்த ஆபீஸுக்குப் போவதாக இருக்கிறாய்?" என்று ஏளனமாகக் கேட்டான்.

உமாவுக்கு நன்றாகப் புரியவில்லை. பியாரிமோஹனின் கட்டுரையை அவள் படித்ததில்லையே! சுவைப்பற்றும் அவ்வளவு இருப்பதாகத் தெரியவில்லை. உள்ளுக்குள்ளே கூசிப்போய்விட்டாள். அவமானம் பொறுக்க முடியவில்லை. செத்துப்போய்விடலாம் போல் இருந்தது.

அதற்கப்புறம் பல நாட்கள் அவள் எழுதவில்லை. ஆனால் இலையுதிர் காலத்தில் ஒருநாள் காலை ஒரு பிச்சைக் காரப்பெண் 'ஆகமனி' * பாடிக் கொண்டிருந்தாள். உமா ஜன்னல் கம்பியின்மேல் முகத்தை வைத்துக்கொண்டு மௌனமாக அதைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

மெல்லிய வெயிலில் இளமையின் நினைவுகள் ஒவ்வொன்றாக அவள் மனத்துள் வந்தன. உருக்கமான

---

* தேவியை வரவேற்கும் பாட்டு.

அந்த இன்னிசையைக் கேட்டதும் அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

உமாவுக்குப் பாடத் தெரியாது. ஆனால் எழுதத் தெரிந்ததுமுதல், ஒரு பாட்டைக் கேட்டால் அதை எழுதிக்கொண்டு பாடமுடியாத குறையைத் தீர்த்துக்கொள்வாள். இன்று பிச்சைக்காரி பாடிக்கொண்டிருந்தாள்:

"உமையின் தாயே, கேட்டாயோ
ஊரார் சொல்லும் சொல்லதனை?
'எமையாள் அரசி! அங்கே உன்
இன்மகள் தாரை வருகின்றாள்?'
அம்மையும் சிறப்புடைத் தாய்தானும்
ஆவல் மீறி விரைகின்றாள்.
'இமையப் பெருங்கோன் மகளே வா'
என்றே மகளை அழைத்திடுவாள்.
'வந்தென் மடிமீ தமர்ந்திடுவாய்.
வாராய்' என்றே முகமலர்வாள்.
அந்தண் ணுமையவள் பிணங்கித் தன்
அன்னை தன்னைக் கேட்டிடுவாள்.
'சிந்தும் கண்ணீ ருடனிற்கும்
சின்னஞ் சிறுமகள் தன்னை நீ
வந்தென் றேனும் அழைத்தனையோ
மகளே பிறந்தகம் வாவென்றே?"

உமா ரோஷத்தினால் மனம் புழுங்கிக் கண்ணீர் உகுத்தாள். ரகசியமாக அந்தப் பிச்சைக்காரியைக் கூப்பிட்டுக் கதவைத் தாழிட்டுக்கொண்டு அந்தப் பாட்டைத் தன் டயரியில் எழுத ஆரம்பித்தாள்.

திலகமஞ்சரி, கனகமஞ்சரி, அனங்கமஞ்சரி மூவரும் கதவின் துளைமூலமாக இதைக் கவனித்தார்கள். உடனே கை தட்டிக்கொண்டு, "மன்னி! நீ செய்யறதெல்லாம் எங்களுக்குத் தெரியாதா என்ன!" என்று கூச்சலிட்டார்கள்.

பரபரப்புடன் உமா கதவைத் திறந்து வேண்டிக் கொள்ளும் பாவனையில், "என் கண்ணே இல்லையோ? சொல்லாதே, அம்மா. உன்காலிலே விழுகிறேன். இனிமேல் எழுதவே மாட்டேன்" என்றாள், ஒவ்வொருவரிடமும்.

டயரியின்மேல் திலகமஞ்சரி கண் வைப்பதைப் பார்த்து உமா விரைவாகச் சென்று அதை மார்பில் அழுத்திக்கொண்டாள். நாத்தனார்கள் பலாத்காரமாக அதைப் பிடுங்க முயன்றார்கள். முடியாமற் போகவே அனங்கமஞ்சரி அண்ணனை அழைத்து வந்தாள்.

பியாரீமோஹன் கம்பீரமாக வந்து கட்டிலில் அமர்ந்தான். இடிக் குரலில், "டயரியைக் கொண்டா இப்படி" என்றான். கட்டளை பலிக்காமற் போகவே குரலைக் கொஞ்சம் தாழ்த்தி, "கொடுன்னு!" என்றான்.

சிறுமி டயரியை மார்பில் அழுத்திக்கொண்டு கணவனின் முகத்தைத் தீனப்பார்வையுடன்நோக்கினாள். பியாரீமோஹன் அதைப் பிடுங்கிக்கொள்ள எழுந்திருப்பதைப் பார்த்ததும் அதைக் கீழே எறிந்துவிட்டுக் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு பூமியில் விழுந்தாள்.

பியாரீமோஹன் டயரியை எடுத்துக்கொண்டு உரத்த குரலில் அதில் இருந்ததைப் படித்தான். உமா இன்னும் அழுத்தமாக முகத்தை மூடிக்கொண்டாள். கேட்டுக் கொண்டிருந்த மூன்று சிறுமிகளும் கலகலவென்று சிரித்தார்கள்.

அன்று போன டயரி உமாவிடம் வரவே இல்லை. பியாரீமோஹனின் உண்மை நிரம்பிய கட்டுரைகள் எழுதிய புத்தகம் ஒன்று இருக்கிறது. ஆனால் அதைப் பிடுங்கிக் கிழிக்க உதவி செய்யும் ஆளே உமாவுக்குக் கிடைக்கவில்லை, பாவம்!

3. வாழ்வும் சாவும்

-க-

ராணீஹாட் ஜமீன்தார் சாரதாசங்கரரின் வீட்டு விதவை மருமகளுக்குப்பிறந்த வீட்டு உறவினர் எவருமே இல்லை. ஒவ்வொருவராக எல்லோரும் பரலோகம் போய் விட்டார்கள். புக்ககத்திலும் தன்னுடையவர் என்று சொல்லிக்கொள்ளப் புருஷனோ பிள்ளையோ இல்லை. மைத்துனரின் பிள்ளை ஒருவன்-சாரதாசங்கரரின் சிறிய பிள்ளை-அவன்தான் அவளுடைய கண்மணி. பிறந்ததுமுதல் அவன் தாய் ஒரே படுக்கையாக இருந்ததால் விதவையான சித்தி காதம்பினியே அவனை எடுத்து வளர்த்தாள். பிறருடைய பிள்ளையை எடுத்து வளர்த்தால், அதிகப் பாசமே ஏற்படுகிறது அவன்மீது. இதைவிட வேறு என்ன உரிமை இருக்கிறது அவளுக்கு? சமூக உரிமையும் இல்லை. அன்பின் பிணை மட்டுந்தான். ஆனால் வெறும் அன்புமட்டும் இருந்தால் சமூகத்திற்கு ஏற்காது. தனக்குச் சொந்தமல்லாத செல்வனை இரு மடங்கு ஆவலுடன் நேசிப்பதோடு நிற்கவேண்டியதுதான்.

விதவை காதம்பினி உள்ளத்தில் அடக்கியிருந்த அன்பு அனைத்தையும் இச்சிறுவனின்மேல் பொழிந்து விட்டு ஆவணிமாதத்தில் ஓரிரவு திடீரென்று மரணமடைந்தாள். எதனாலோ அவள் இருதயம் நின்றுவிட்டது. அன்பு குடிகொண்ட அந்த மென்மையான இதயத்துள் ஏனோ காலத்தின் விசை ஓடாமல் நின்றுவிட்டது!

பின்னால் போலீஸாரின் உபத்திரவம் நேரும் என்று அதிக ஆடம்பரமில்லாமல் ஜமீன்தாரின் வேலைக்காரர் நால்வர் பிணத்தைப் பொசுக்க எடுத்துச் சென்றனர்.

ராணீஹாட்டின் சுடுகாடு ஊருக்கு வெகு தொலைவில் இருந்தது. குளத்தங்கரையில் ஒரு குடிசை, அருகே ஒரு

பெரிய ஆலமரம், விசாலமான வெளி இவைகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. முன்பு இதன் வழியாக ஓர் ஆறு ஓடும். இப்போது அது வற்றிக் கிடந்தது. அதன் பக்கத்தில் ஓர் இடத்தில் குளம் வெட்டியிருந்தார்கள். இங்குள்ள மக்கள் இந்தக் குளத்தைத்தான் புண்ணியநதியாக எண்ணி வந்தார்கள்.

பிணத்தைக் குடிசையில் கிடத்திவிட்டுச் சிதைக்கு வேண்டிய விறகுக்காக நால்வரும் காத்திருந்தனர். நாழிகை ஆக ஆகப் பொறுமையை இழந்த நால்வருள் நிதாயியும் குருசரணனும், "கட்டை வர ஏன் தாமதம்?" என்று பார்க்கச் சென்றனர். விதுவும் வனமாலியும் பிணத்துக்குக் காவலாக இருந்தனர்.

ஆவணி மாதத்து இருண்ட இரவு. மழை மேகங்கள் அடர்ந்திருந்தன. ஒரு நக்ஷத்திரங்கூடக் கண்ணில் படவில்லை. அந்த இருளில் இருவரும் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். ஒருவன் மேல் போர்வையில் தீப்பெட்டி கட்டி வைத்திருந்தான். மழையில் நமுத்துப்போய் அது பற்றவேயில்லை. கூட இருந்த லாந்தரும் அணைந்து போய்விட்டது.

வெகுநேரம் சும்மா இருந்தபின் ஒருவன், "அண்ணு! ஹுக்கா ஓர் இழுப்பு இழுத்தா நல்லா இருக்கும். அவசரத்திலே ஒண்ணும் கொண்டு வரவில்லை" என்ருன்.

மற்ருெருவன், "நானசட்டுன்னு ஓடிப்போய் எல்லாத்தையும் கொண்டு வரட்டுமா?" என்ருன்.

வனமாலி ஓடுவதாகச் சொன்னதன் காரணத்தைத் தெரிந்துகொண்ட விது, "அட ராமா! என்னைத் தனியாக இங்கே விட்டு விட்டா!" என்ருன்.

மறுபடியும் மௌனம் நிலவியது. ஐந்து நிமிஷம் கழிவது ஒரு மணிபோல் இருந்தது. கட்டை கொண்டுவரச் சென்றவர்களை உள்ளூறத் திட்டிக்கொண்டார்கள். அவர்கள் சொஸ்தமாக எங்கேயாவது உட்கார்ந்து கஞ்சா குடித்

துக்கொண்டு வம்பு அளந்துகொண்டிருப்பார்கள் என்று இவர்களுக்குச் சந்தேகம் உதித்தது.

ஓர் ஓசையும் இல்லை. குளத்தங்கரையிலிருந்து மட்டும் தவளைகளின் அரவமும் விட்டில்களின் இரைச்சலும் கேட்டன. இந்தச் சமயத்தில் பாடை சற்று நெளிந்து கொடுத்துப் பிணம் திரும்பிப் படுப்பதுபோலத் தோன்றியது.

விதுவும் வனமாலியும் நடுங்கிக்கொண்டே ராம நாமத்தை ஜபிக்க ஆரம்பித்தார்கள். சட்டென்று உள்ளே ஒரு பெருமூச்சுக் கேட்டது. விதுவும் வனமாலியும் ஒரே குதியில் வெளியே வந்து ஊரை நோக்கி ஓட்டம் பிடித்தனர்.

சுமார் ஒன்றரைமைல் தூரம் வந்ததும் தங்கள் தோழர்கள் விளக்குடன் வருவதைப் பார்த்தார்கள். நிஜமாகவே, அவர்கள் கஞ்சா குடிக்கத்தான் சென்றிருந்தார்கள்; கட்டை விஷயமே அவர்களுக்குத் தெரியாது. இருந்தாலும், மரத்தை வெட்டிக் கட்டை பிளந்துகொண்டிருப்பதாகவும், சிக்கிரமே வந்து விடுமென்றும் சொன்னார்கள். விதுவும் வனமாலியும் குடிசையில் நடந்தவற்றை விவரித்தார்கள். குருசரணனும் நிதாயியும் அதை நம்பாமல், காரியத்தைக் கைவிட்டு வந்ததற்காகக் கோபங்கொண்டு அவர்களைத் திட்டினார்கள்.

தாமதம் ஆக்காமல், நால்வரும் சுடுகாட்டில் குடிசையை அடைந்தார்கள். உள்ளே நுழைந்து பார்த்தால் பிணத்தைக் காணவில்லை. வெறும் பாடை மட்டுந்தான் கிடந்தது.

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். நரி ஏதாவது தூக்கிக்கொண்டு போயிருக்குமோ? ஆனால் போர்த்திருந்த துணியைக்கூடக் காணவில்லையே! வெளியே வந்து தேடும்பொழுது வாயிலுக்கருகே, சேற்றில் ஒரு பெண்ணின் காலடையாளம் பதிந்திருந்தது.

சாரதாசங்கரர் சாதாரணப் பேர்வழி அல்ல, பூதக் கதைகள் சொன்னால் நம்புவதற்கு. ஆகவே, நால்வரும் கூடிப் பிணத்தைத் தகனம் செய்தாகிவிட்டது என்று சொல்வதுதான் சரி என்று தீர்மானித்தார்கள்.

விடியற்காலையில் கட்டை கொண்டு வந்தவர்களிடம், நாழிகை ஆகவே, குடிசையில் இருந்த கட்டையைக் கொண்டு தகனக்கிரியை செய்தாகிவிட்டதென்று செய்தி சொல்லிவிட்டனர். இதில் எளிதில் யாருக்கும் சந்தேகம் ஏற்படாது. ஏனென்றால், பிணம் விலையுயர்ந்த பொருளா, பிறர் ஏமாற்றித் திருடிக்கொண்டு போக!

-உ-

இருதயத் துடிப்பு இராது போனாலும், அநேக சமயங்களில் உயிர் அசையாமலிருந்து, மறுபடியும் குறித்த நேரத்தில் இருதயம் வேலை செய்ய ஆரம்பிப்பது எல்லாருக்கும் தெரியும். காதம்பினி சாகவில்லை. என்ன காரணத்தாலோ அவளுடைய இருதயம் தன் ஓட்டத்தை நிறுத்திக்கொண்டது.

நினைவு வந்து எழுந்தபொழுது நாலு பக்கமும் ஒரே இருள். வழக்கம்போல் படுத்துக்கொள்ளும் இடமல்லவே இது! "அக்கா" என்று ஒரு முறை கூப்பிட்டாள். இருண்ட குடிலில் யாரும் பதில் தரவில்லை. பயத்துடன் எழுந்த சமயம், படுக்கையாகக் கிடந்தது நினைவுக்கு வந்தது. திடீரென்று மார்பில் ஒரு வேதனை- மூச்சுத் திணறுவது- அவளுடைய ஓரகத்தி குழந்தைக்காகப் பால் காய்ச்சிக்கொண்டிருப்பது-தான் நிற்க முடியாமல் கட்டிலின்மேல் தொபீலென்று விழுந்தது - தொண்டை அடைக்க, "அக்கா, குழந்தையைக் கொண்டுவாயேன்; எனக்கு என்னவோ செய்கிறது" என்று தான் சொன்னது- அதற்கப்புறம் எல்லாம் மங்கலாகிவிட்டன. எழுதின தாளின்மேலே மொத்த மசியும் கொட்டினாற்போல்

காதம்பினியின நினைவு, அறிவு எல்லாம் ஒரேயடியாகக் குழம்பிவிட்டன. குழந்தை தன்னைக் கடைசித் தடவையாக இன்மழலையால், 'தித்தி' என்று அழைத்தானே என்னவோ! பழக்கமான உலகிலிருந்து அறிவுக்கெட்டாத ஒரு மரணலோகத்திற்குச் செல்லும்பொழுது அன்பின் இந்தக் கடைசிச் செலவைப் பெற்றதுகூட அவளுக்கு நினைவில்லை.

எமலோகமும் இதேபோல் இருண்டு தனிமையாக இருக்குமோ! பார்ப்பதற்கு அங்கே ஒன்றுமே இல்லை; கேட்பதற்கும் இல்லை; செய்ய அலுவலும் இல்லை. இந்த மாதிரிதான் எந்தக் காலமும் விழித்து உட்கார்ந்திருக்க வேண்டுமோ?— இவ்வாறெல்லாம் அவள் நினைத்தாள்.

அப்புறம் திறந்த வாயிலினூடே திடீரென்று குளிர் காற்று வீசியது. கார்காலத்தில் தவளையின் குரல் காதில் கேட்டது. கணப்பொழுதில் அந்த அற்பாயுளின் சிறு வயது தொட்டு அவள் கண்ட மழைக்கால நினைவெல்லாம் திரண்டெழுந்து வருவதுபோல் இருந்தது. பூமி நெருங்கித் தொடுவதுபோல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. ஒரு முறை மின்னல் வெட்டியது. எதிரே குளம்,ஆலமரம், மைதானம், தொலைவில் மரங்களின் வரிசை எல்லாம் இமைப்பொழுது கண்முன் தோன்றி மறைந்தன. நடுநடுவே புண்ணிய தினங்களில் ஸ்நானம் செய்ய இங்கே குளத்திற்கு வருவது ஞாபகத்திற்கு வந்தது. அப்போதெல்லாம் வேகும் பிணத்தைக் கண்டால் சாவு பயங்கரமானதென்று தனக்குத் தோன்றுமே என்று எண்ணினாள்.

முதலில் வீட்டுக்குத் திரும்பிவிடலாம் என்று எண்ணினாள். உடனே, 'நான்தான் உயிருடன் இல்லையே! என்னை ஏன் வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டும்? அங்கே அதனால் அமங்களம் நேரலாம். ஜீவராசியிலிருந்துதான் என்னைப் பிரஷ்டம் செய்தாகிவிட்டதே! நான் வெறும் பிரேதந்தானே!' என்று சிந்தித்தாள்.

இல்லாவிட்டால். சாரதாசங்கரர் இந்த நடுநிசியில் பாதுகாப்பான அந்தப்புரத்திலிருந்து நெடுந்தூரம் இந்தச் சுடுகாட்டிற்கு எதற்காக எடுத்துக்கொண்டு வரப் போகிறார்? இன்னும் தன்னை எரித்திராவிட்டால், அதற்காக வந்த ஆட்கள் எங்கே? சாரதாசங்கரரின் வெளிச்சமான அறையில் தான் மரணத்தறுவாயில் இருந்தது நினைவுக்கு வந்தது. அடுத்தாற்போல, வெகு தொலைவில் ஜன சந்தடியற்ற இந்த இருண்ட சுடுகாட்டில் தன்னந் தனியே தான் இருப்பதை உணர்ந்தாள். 'நான் இனி மனித சமூகத்தில் ஒருத்தி அல்ல.நான் பயங்கரமானவள். அமங்களமானவள். நான் வெறும் பேயே!' என்று அவள் சொல்லிக்கொண்டாள்.

இதை நினைத்தமாத்திரம், நாலு பக்கங்களிலிருந்தும் உலகத்தின் தொடர்பு அறுபட்டுவிட்டதுபோல் அவளுக்குத் தோன்றிற்று. அவளுக்கு அற்புதமான சக்தியும் அடங்காத சுதந்திரமும் உண்டு. நினைத்த இடத்துக்குச் செல்லலாம். எதை வேண்டுமானாலும் செய்யலாம். முன்பின் தோன்றாததொரு புது பாவம் உதிக்கவே,வெறிபிடித்துத் திடீரென்று வீசும் ஒரு காற்றுச்சுழல் போலக் குடிலிருந்து கிளம்பி இருண்ட மயானத்தினூடே சென்றாள். உள்ளத்தில் பயமோ வெட்கமோ சிந்தனையோ லவலேசமும் அவளுக்கு ஏற்படவில்லை.

போகப்போக அவளுடைய கால்கள் தள்ளாடின. தேகமும் சோர்ந்துவிட்டது. மாளாது சென்றது வழி. நடுவே வயல்கள். சில இடங்களில் முழங்கால் அளவு நீர் தேங்கி இருந்தது. கிழக்கு மெல்ல வெளுத்த சமயம், அருகில் வீட்டுக்கூரைகள் மேலிருந்து ஓரிரண்டு பறவைகளின் குரல் கேட்டது.

அவளுக்கு ஒரு மாதிரியான அச்சம் மூண்டது. உலகத்தில், உயிருள்ள மனிதருடன் தனக்கு இருக்கும் புது உறவென்ன என்பது அவளுக்குத் தெரியவில்லை. விடர்

வெளியில் இருந்திருக்கிருள்; சுடுகாட்டில் இருந்திருக்கிருள். அப்பொழுதெல்லாம் பயமே தோன்றவில்லை. அவளுக்குச் சொந்த இடத்தில் இருப்பது போல் பட்டது. பகல் ஒளியில் மனிதர் இருக்கும் இடம் அவளுக்குப் பயத்தை உண்டு பண்ணியது. மனிதன் பிசாசுக்குப் பயப்படுகிருன்; பிசாசும் மனிதனைக் கண்டு அஞ்சுகிறது. மரணத்தின் இரு புறங்களிலும் இவர்கள் வசிக்கிருர்கள்.

-ரு-

துணியில் சேறு படிய, அலங்கோலமான உடையுடன், இரவு கண் விழித்திருந்ததனுல் பைத்தியக்களை வழியக் காதம்பினி வருவதைக் கண்டால், ஜனங்கள் பயப்படாமல் இருப்பார்களா? சிறுவர்களும் தொலைவில் ஓடிக் கல்லை வீசி எறிவார்கள்!-நல்ல காலம், ஒரு வழிபோக்கன் முதலில் அவளை இந்த நிலையில் கண்டான்.

"அம்மா, உன்னைப் பார்த்தால், பெரிய இடத்தில் புகுந்தவள் போல் தோன்றுகிறது. இந்த நிலையில் ஒன்றியாக எங்கே போகிருய்?" என்று கேட்டான்.

காதம்பினி முதலில் ஒன்றும் பேசவில்லை. என்ன சொல்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. அவள் இவ்வுலகில்தான் இருக்கிருள்; தவிரப் பெரிய இடத்தில் புகுந்தவள் போல் தோன்றுகிருள் என்றெல்லாம் இந்த வழிப்போக்கன் பேசுகிருனே! இது உண்மையில் நடக்கிறதா என்ற ஐயம் பிறந்தது அவளுக்கு.

அவன் மறுபடியும், "வா, அம்மா, உன்னை வீட்டில் சேர்த்துவிட்டு வருகிறேன். உங்கள் வீடு எங்கே? சொல்" என்றுன்.

காதம்பினி யோசிக்கத் தொடங்கினுள். புக்ககத்திற்குச் செல்ல மனமில்லை. பிறந்த வீடோ இல்லை. இளவயதுத் தோழி ஒருத்தியின் நினைவு வந்தது.

அந்த யோகமாயாவை விட்டுச் சிறுவயதிலேயே பிரிந்திருந்தபோதிலும் கடிதப் போக்குவரத்து உண்டு. ஒருவர் மேல் ஒருவருக்கு இருக்கும் அன்பைக் குறித்துச் சண்டையும் நடக்கும். காதம்பினி தனக்கு அவள் மேல் ஆசை அதிகமென்பாள். யோகமாயா, தன்மேல் காதம்பினி நேசமாக இல்லை என்று வாதாடுவாள். எப்போதாவது இருவரும் ஒன்று கூடினால் கண நேரங்கூட ஒருவரையொருவர் பிரிந்திருக்க மாட்டார்கள்.

காதம்பினி வழிப்போக்கனிடம், "நிச்சிந்தாபுரத்தில் ஸ்ரீபதி பாபுவின் வீட்டிற்குப் போகவேண்டும்" என்றாள்.

அவன் கல்கத்தாவுக்குச் சென்றுகொண்டிருந்தான். நிச்சிந்தாபுரம் அருகில் இராவிட்டாலும் அவன் போகும் வழியில்தான் இருந்தது. தானே பொறுப்பு ஏற்று, ஸ்ரீபதி பாபுவின் வீட்டில் கொண்டுவிட்டான்.

இரு தோழிகளும் ஒன்று கூடினர். முதலில் அடையாளம் தெரிந்துகொள்ளச் சற்றுத் தாமதம் ஆகியது. பின்னரே, இளவயது நினைவுகள் வந்தன.

யோகமாயா, "அடியம்மா, என்ன அதிருஷ்டமடி! திடீரென்று உன்னைப் பார்ப்பேன் என்று நான் நினைக்கவில்லையே! ஆனால் நீ எப்படியடி வந்தாய்? உன் புக்ககத்தார் உன்னை உதறிவிட்டார்களா?" என்றாள்.

காதம்பினி சற்று மௌனமாயிருந்தபின், "என் புக்ககத்து விஷயமெல்லாம் கேட்காதே. உன் வீட்டின் மூலையில் வேலைக்காரியைப்போல் ஓர் இடம் தா. உனக்காக வேலைகள் எல்லாம் செய்கிறேன்" என்றாள்.

யோகமாயா, "என்னடி பேச்சு இது? வேலைக்காரிபோல இருப்பானேன்? நீ என் தோழி; என்னுடையவள் தானே நீ!" என்றெல்லாம் சொன்னாள்.

இதே சமயத்தில் ஸ்ரீபதி உள்ளே நுழைந்தான். காதம்பினி சற்று நேரம் அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தபின் மெதுவாக வெளியே சென்றாள்.

தலையை முக்காட்டினால் மறைத்துக்கொள்ளவோ கூச்சப் படவோ இல்லை.

ஸ்ரீபதி தன் தோழியைப்பற்றி விரசமாக ஏதாவது எண்ணிக்கொள்ளப் போகிருனே என்று படபடப்பாக யோகமாயா பலவிதமான சமாதானங்கள் சொன்னாள். தான் சொன்னதை ஸ்ரீபதி இவ்வளவு சீக்கிரத்தில் நம்பி விட்டது யோகமாயாவுக்கு அவ்வளவாக மகிழ்ச்சியை உண்டாக்கவில்லை.

காதம்பினி தன் தோழி வீட்டில் வந்து அடைந்தாள். ஆனால் அவளுடன் பழக முடியவில்லை. நடுவே சாவு குறுக்கிட்டது. தன்னைப்பற்றியே ஒரு சந்தேகம் அவளுக்கு. அந்த உணர்வில் பிறருடன் பழகுவது கடினம். காதம்பினி யோகமாயாவின் முகத்தைப் பார்த்தவாறு யோசிப்பாள்; வீட்டில் கணவனுடன் சம்சாரம் நடத்தியதென்ன, இப்போது தான் இருக்கும் நிலை என்ன! 'அன்பு, கடமைகளுடன் உலகத்தவர் வாழ்கிறார்கள்; நானோ வெறும் நிழல்தானே! அவர்கள் இருப்பது உண்மையான உலகத்தில். நானோ ஆனந்தமான உலகில் சஞ்சரிக்கிறேன்' என்று எண்ணுவாள்.

யோகமாயாவுக்கும் என்ன என்னவோ தோன்றின. ஒன்றுமே புரியவில்லை அவளுக்கு. பெண்களுக்கு ஒளிவே சகிக்காது. நிச்சயமில்லாததைக் கொண்டு காவியம் புனையலாம்; வீரம் காட்டலாம்; சாமர்த்தியத்தை வெளிப் படுத்தலாம். ஆனால் சம்சாரம் நடத்த முடியுமா! இதனாலேயே பெண்கள், ஒன்று அப்படி இருப்பதை அறவே மறந்து விடுவார்கள்; இல்லையென்றால், அதற்குப் புது உருக் கொடுத்துச் சொந்தக் காரியங்களுக்கு ஏற்ப அதை அமைத்துக்கொள்வார்கள். இரண்டும் முடியாவிட்டால் எரிந்து விழுவார்கள்.

காதம்பினியின் விஷயம் புரிபடாமல் இருக்க இருக்க, யோகமாயாவின் கோபம் அதிகமாகிக்கொண்டே வந்தது.

'இதேதடா உபத்திரவம், என்னை வந்து அடைந்ததே!' என்று எண்ணினாள்.

மற்றொரு சங்கடம்; காதம்பினிக்குத் தன் மேலேயே ஒரு பயம். பிசாசுக்குப் பயப்படுபவர்கள் எல்லாரும் தங்கள் பின்புறத்தைப் பார்ப்பார்கள். கண் எங்கே செல்லத் தயங்குகிறதோ அங்கேதான் பயம் உலவுகிறது. ஆனால் காதம்பினிக்குத் தன்னிடத்திலேயே பயம். வெளிப்பயம் அவளுக்குத் துளிகூட இல்லை.

இதனால்தான் பிற்பகலில் தனியாக அறையிலிருக்கும்பொழுது ஒரொரு சமயம் கூச்சல் போடுவாள். அந்திமங்கலில் விளக்கொளியில் தன் நிழலைப் பார்க்கும்போது அவள் உடல் நடுங்கும்.

அவள் இப்படித் தன்னைக் கண்டே மருள்வது, வீட்டிலுள்ளவர்களுக்கெல்லாம் ஒரு மாதிரி திகிலை மூட்டிவிட்டது. வீட்டு வேலைக்காரர்கள்- யோகமாயாகூட- கண்டபொழுதெல்லாம், எங்கே பார்த்தாலும் பேயைக் காண ஆரம்பித்தார்கள்.

ஒரு நாள் காதம்பினி நடுராத்திரியில் தன் அறையிலிருந்து அழுதுகொண்டே வெளியேறி யோகமாயாவின் அறைக்கருகில் வந்து, "அக்கா, உன் கால்களில் விழுகிறேன். என்னைத் தனியாக விட்டுப் போகாதே" என்றாள்.

யோகமாயாவுக்குப் பயம், கோபம் இரண்டும் வந்தன. 'இந்த நிமிஷமே காதம்பினியை வெளியேற்றி விடலாமா?' என்று எண்ணினாள். தயை மேலிட்டு ஸ்ரீபதி பலவாறாக அவளைத் தேற்றி, பக்கத்து அறையில் அவளுக்கு இடம் அளித்தான்.

மறுநாள் அகாலத்தில் அந்தப்புரத்தில் ஸ்ரீபதி வந்தான். யோகமாயா திடீரென்று அவனை அதட்ட ஆரம்பித்தாள். "என்ன மனுஷர் நீங்கள்? ஒரு பெண் புக்ககத்தை விட்டு வந்து உங்கள் வீட்டிலே இருக்கிறாள். ஒரு மாதமாகிறது; வெளியே போகிற வழியாகக் காணோம். நீங்

களோ கொஞ்சங்கூட ஆட்சேபிப்பதாகத் தெரியவில்லை. என்னதான் எண்ணம் உங்கள் மனசுக்குள்ளே என்கிறேன்! புருஷர்களே இந்தமாதிரிதான் போல் இருக்கிறது'' என்றாள்.

உண்மையிலேயே பெண்ணினத்தின்மேல் புருஷர்கள் இரக்கம் கொள்கிறார்கள். ஆகவேதான் பெண்கள் அவர்கள்மேல் அதிகமாகக் குற்றம் சாட்டுகிறார்கள். திக்கற்ற அந்த அழகிய காதம்பினியின்மேல் அளவு மீறி ஸ்ரீபதி காட்டிய கருணையை யோகமாயா தவறாக எடுத்துக் கொண்டாள். அவள்மேல் ஆணையிட்டுச் சொன்ன போதிலும், அவனுடைய நல்ல எண்ணத்தை யோகமாயா நம்பவில்லை.

'பாவம், குழந்தைகளற்ற விதவையாயிற்றே; புக்ககத்தில் என்ன கொடுமையாக நடத்தினார்களோ, அது தாளாது அவள் நம்மிடம் வந்திருக்கலாம். தாய்தகப்பன் கிடையாது! இவளை எப்படி நாம் நிர்க்கதியாக விடலாம்?' என்று எண்ணி இதை அவன் விசாரிக்கவே இல்லை. இதையெல்லாம் காதம்பினியின் வாய்மூலம் அறிந்து கொள்ள அவன் துளிகூட இஷ்டப்படவில்லை.

யோகமாயா அவனுடைய நிதான புத்தியைப் பார்த்து அவனைப் பலவாறாகத் தூண்ட ஆரம்பித்தாள். காதம்பினியின் புக்ககத்தாருக்கு விஷயம் தெரிவித்து விட்டால்தான் வீட்டில் அமைதி நிலவும் என்று அவன் நினைத்தான். திடீரென்று கடிதம் எழுதினால் நல்ல பலன் விளையாது. ராணீஹாட்டிற்குத் தானே நேரில் சென்று, விஷயத்தை அறிந்து வந்து செய்யவேண்டியதைச் செய்ய நிச்சயித்தான்.

ஸ்ரீபதி போய்விட்டான். இந்தப் பக்கம் யோகமாயா காதம்பினியிடம் வந்து, "இங்கே நீ இனிமேல் இருப்பது நன்றாக இல்லை, அம்மா. நாலுபேர் என்ன சொல்லுவார்கள்?'' என்றாள்.

காதம்பினி கவலையில் ஆழ்ந்து யோகமாயாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டே, "எனக்கும் நாலு பேருக்கும் என்ன சம்பந்தம்?" என்றாள்.

யோகமாயா இதைக் கேட்டு வாயடைத்துப்போனாள். சற்றுக் கோபமாக, "உனக்கு இராவிட்டால் எங்களுக்கு இல்லையோ! பிறர் வீட்டில் புகுந்தவளை எங்கள் வீட்டில் எப்படி வைத்துக்கொள்ள முடியும்?" என்றாள்.

"எனக்குப் புக்ககம் எங்கேடி?" என்றாள் காதம்பினி.

"அடி, நீ நாசமாய்ப் போக! என்னடி சொன்னாய், சனியன் பிடித்தவளே!"

காதம்பினி மெதுவாக, "உனக்கு நான் யார்? நான் இந்த உலகத்தைச் சேர்ந்தவளா? நீங்கள் சிரிக்கிறீர்கள், அழுகிறீர்கள், உங்கள் காரியங்களைக் கவனிக்கிறீர்கள்; அன்பு பாராட்டுகிறீர்கள். நான் சும்மா பார்த்துக்கொண்டு மட்டும் இருக்கிறேன். நீங்கள் மனிதர்கள், நானோ நிழல். உங்கள் உலகின் நடுவே பகவான் என்னை ஏன் வைத்திருக்கிறான் என்று எனக்குப் புரியவில்லையே? உங்கள் ஆனந்தத்தின் நடுவே நான் எங்கே அமங்களம் ஏற்படுத்தி விடுகிறேனோ என்று நீங்கள் அஞ்சுகிறீர்கள்- உங்களுக்கு நான் எந்த விதத்தில் உறவு என்று எனக்கும் புரியவில்லை. ஆனால் பகவான் எனக்கென்று ஓர் இடமும் படைக்கவில்லையே! என் பந்தங்கள் அறுபட்டும் உங்களைச் சுற்றிச் சுற்றித்தான் திரிகிறேன்" என்றாள்.

இவ்வாறு அவள் சொல்லிக்கொண்டே போனது யோகமாயாவுக்கு மொத்தத்தில் ஒன்றிரண்டு புரிந்ததே ஒழிய மூலக்கருத்து இன்னதென்று விளங்கவில்லை. பதிலும் சொல்ல முடியவில்லை. இரண்டாந்தரம் கேட்கவும் முடியவில்லை. கவலையில் ஆழ்ந்து மெதுவாக எழுந்து சென்றாள்.

-ரா-

இரவு சுமார் பத்து மணிக்கு ஸ்ரீபதி ராணீஹாட்டி லிருந்து திரும்பினன். பெரும் பாரலாக மழை பெய்ததில் எங்கேயும் ஒரே வெள்ளம். சோவென்று கொட்டும் மாரிக்கும் ஒரு முடிவில்லை. அந்தப் பயங்கர இரவும் முடிகிற வழியாக இல்லை.

"என்ன ஆச்சு?" என்று யோகமாயா கேட்டாள்.

"அது பெரிய விஷயம். பிற்பாடு சொல்கிறேன்" என்று சொல்லி உடை மாற்றிக்கொண்டு சாப்பிட்டு விட்டுப் படுக்கச் சென்ருன். அவனுக்கு ஏதோ ஆழ்ந்த சிந்தனைபோல் இருக்கிறது.

யோகமாயா வெகுநேரம் ஆவலை அடக்கிக்கொண்டிருந்துவிட்டுப் படுக்கையில் படுத்ததுமே, "என்ன விஷயம், சொல்லுங்களேன்" என்ருள்.

ஸ்ரீபதி, "நிச்சயமாக நீ ஒரு தவறு செய்துவிட்டாய்" என்ருன்.

யோகமாயாவுக்கு உள்ளுக்குள்ளே ஆத்திரம் வந்தது. பெண்கள் தவறே செய்யமாட்டார்கள்; செய்தாலும் நல்ல புத்திமான்களான புருஷர்கள் அதை எடுத்துச் சொல்வது உசிதமல்ல. தங்கள் மேலேயே போட்டுக்கொள்வது தான் சரி. சற்றுச் சூடாகவே யோகமாயா, "எப்படியாம்?" என்ருள்.

ஸ்ரீபதி, "நீ இடம் தந்திருக்கிருயே, அந்தப் பெண் உன் தோழி காதம்பினி அல்ல" என்ருன்.

இந்த மாதிரியான பேச்சைக் கேட்டால்- முக்கியமாகப் புருஷனின் வாயால் கேட்டால் பெண்களுக்குச் சுலபமாகவே கோபம் வந்துவிடும். யோகமாயா, "என்தோழியை எனக்குத் தெரியாது! உங்கள் மூலமாகத்தான் தெரிந்துகொள்ளவேண்டுமாக்கும்! என்ன அழகு"! என்ருள்.

ஸ்ரீபதி, "பேச்சின் அழகைப்பற்றி இங்கே ஒரு விவாதமும் இல்லை. பிரமாணத்தைத்தான் எடுத்துக்கொள்ள

வேண்டும்'' என்றான். யோகமாயாவின் தோழி காதம்பினி செத்துப் போய்விட்டாள் என்பதில் சந்தேகமில்லை.

யோகமாயா, "இதோ பாருங்கள். நிச்சயமாக ஏதோ குழப்பிவிட்டு வந்திருக்கிறீர்கள். ஓர் இடத்திற்கு மற்றோரிடம் போய்விட்டீர்களோ என்னவோ? என்ன கேட்க எதைக் கேட்டீர்களோ? அதற்கு ஒரு வழியைக் காணோம். உங்களை யார் போகச் சொன்னார்கள்? ஒரு கடிதம் எழுதினால் எல்லாம் தெளிவாகிவிட்டிராதா?'' என்றாள்.

தன் திறமையில் மனைவிக்கு இருக்கும் நம்பிக்கைக் குறைவைக் கண்டு ஸ்ரீபதி வருத்தமுற்று, விவரமாக எல்லாவற்றையும் பிரமாணங்களுடன் சொன்னான். ஆனால் பலன் ஒன்றுமில்லை. இரு கட்சியினரும் உண்டு, இல்லை என்று இரண்டு ஜாமம்வரை வாதம் புரிந்தனர்.

காதம்பினியை இந்தக் கணமே வெளியேற்ற இருவருக்கும் சம்மதந்தான். அவர்களுடைய விருந்தாளி மாறு வேஷத்தில் தன் மனைவியை ஏமாற்றிவிட்டாள் என்பது ஸ்ரீபதியின் எண்ணம். அவள் ஓடிவந்தவள் என்பது யோகமாயாவின் தீர்மானம். இருந்தாலும் இந்தத் தர்க்கத்தில் இருவரும் தோற்றுப் போக விரும்பவில்லை.

இருவருடைய குரலும் ஓங்க ஆரம்பித்தது. காதம்பினி அடுத்த அறையில் படுத்திருப்பதை மறந்தனர்

"நல்ல சங்கடத்திலே மாட்டிக்கொண்டேன். என் காதாலே கேட்டுவிட்டு வந்தேனே!'' என்றான் ஸ்ரீபதி.

"அதைக் கேட்டு என்ன பலன்? என் கண்ணாலேயே பார்க்கிறேனே இதோ!'' என்றாள் யோகமாயா.

கடைசியில் அவள், "சரி, காதம்பினி எப்போ செத்தாள், சொல்லுங்கள்?'' என்றாள்.

காதம்பினியின் ஏதாவது ஒரு கடிதத்துடன் ஸ்ரீபதி சொல்லிய தேதி ஒத்துப்போய் விடும், அவன் பிழையை எடுத்துக் காட்டலாம் என்று எண்ணினாள் யோகமாயா.

ஸ்ரீபதி சொன்ன தேதியைக் கணக்கிட்டபொழுது அது அவள் வீடு வந்து சேர்ந்த முதல் தினமே! இதைக் கேட்டதும் யோகமாயாவின் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. ஸ்ரீபதிக்கும் என்னவோபோல் ஆகிவிட்டது.

இதே சமயம் அறைக்கதவு திறந்துகொண்டது. மழைக்காற்றுச் சட்டென்று வீசவே தீபம் அணைந்துவிட்டது. வெளியிலிருந்த இருட்டு உள்ளேயும் பரவியது. காதம்பினி ஒரேயடியாக உள்ளே வந்து நின்றாள். மணி ஒன்றரை இருக்கும். வெளியே மழை பெய்தபடி இருந்தது.

காதம்பினி, "உன் தோழி காதம்பினிதானடி நான். ஆனால் நான் உயிரோடே இல்லை. நான் செத்துப்போய் விட்டேன்" என்றாள்.

யோகமாயா பயந்து கூக்குரலிட்டாள். ஸ்ரீபதிக்கு நா எழவில்லை.

"ஆனால், நான் செத்துப்போனது தவிர, உங்களுக்கு என்ன தவறு செய்திருக்கிறேன்? இங்கே எனக்கு இடம் இல்லையானால், பரலோகத்திலும் இடமில்லை.— ஐயோ! நான் எங்கே போய் நிற்பேன்" என்று காதம்பினி கூவி அந்த இருண்டு, மழை சொட்டும் இரவில் கண்ணுறங்கும் கடவுளை நோக்கி, "ஐயோ! நான் எங்கே போவேன்?" என்றாள். ஸ்ரீபதியும் அவன் மனைவியும் மூர்ச்சையாகி விழுந்தார்கள்.

அவர்களை அப்படியே விட்டுவிட்டுக் காதம்பினி பரந்த உலகிடைத் தன் இடத்தைத் தேடிச் சென்றாள்.

காதம்பினி எவ்வாறு ராணிஹாட்டிற்குத் திரும்பிச் சென்றாள் என்று கூறுவது கடினம். ஆனால் முதலில் யாரையும் பார்க்கவில்லை. நாள் முழுதும் ஓர் இடிந்த கோவிலில் பட்டினியாகக் கிடந்தாள்.

மழை இருட்டினால் சீக்கிரம் அஸ்தமித்துவிட்டது சங்கடம் வருமென எதிர்நோக்கி, ஊரார் வீட்டில் அடைத்

துக்கொண்டதும், காதம்பினி வெளியே வந்தாள். புக்ககத்து வாயிலுக்குச் சென்றதும் ஒரு முறை அவள் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. முக்காட்டை இழுத்து விட்டுக்கொண்டு உள்ளே சென்றாள். வேலைக்காரியென நினைத்து வாயில் காப்போர் தடை செய்யவில்லை. அச்சமயம் மழை பெரும் பாரலாகப் பெய்தது; காற்றும் வேகமாக வீசியது.

வீட்டுக்காரி-சாரதா சங்கரின் மனைவி விதவை நாத்தனாருடன் சீட்டாடிக்கொண்டிருந்தாள். சமையற்காரி உள்ளே போயிருந்தாள். குழந்தை ஜுர வேகத்தால் அயர்ந்து தூங்கிக்கொண் டிருந்தான். எல்லாருடைய கண்களிலும் படாமல் தப்பிக் காதம்பினி படுக்கையறைக்குள் நுழைந்தாள். என்ன யோசனையுடன் புக்ககத்திற்கு வந்தோம் என்று அவளுக்கே தெரியாது. குழந்தையை ஒருமுறை கண்ணாரக் காண வேண்டுமென்கிற ஓர் ஆசைதான் அவளுக்குத் தெரியும். பின்னர் எங்கே செல்வது என்று அவள் யோசிக்கவே இல்லை.

விளக்கொளியில், நோயில் மெலிந்த குழந்தை கையை மூடிக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தான். அன்பு ஊற்றெடுத்தது. அவனை ஒருமுறை மார்பில் அணைத்துக் கொள்ளாவிட்டால் தன்னால் இருக்க முடியாது போல் அவளுக்குத் தோன்றியது. 'நான் இல்லாவிட்டால், யாரிருக்கிறார்கள் இவனை அக்கறையாகப் பார்த்துக்கொள்ள! இவன் அம்மாவுக்குப் பேச்சுப் பராக்குத்தான். என் கையில் கொடுத்துவிட்டு அவள் இவ்வளவு நாள் கவலையற்று இருந்தாளே! பிள்ளையைப் பெரியவனாக வளர்க்கும் கவலை அவளுக்கு ஏது? இன்று அவனை நம்மைப் போல் சீராட்டி வளர்ப்பவர்கள் யார் இருக்கிறார்கள்?' என்று எண்ணினாள்.

அதே சமயம் குழந்தை படுக்கையில் திரும்பி அரைத் தூக்கத்தில், "சித்தி, தூத்தம்" என்றான். "நான் என்ன

பாவி, தங்கக் கண்ணே! இன்னுங்கூடச் சித்தியை மறக்கவில்லையா!'' என்று பரபரவென்று கூஜாவிலிருந்து ஜலம் எடுத்துக் குழந்தையை மார்பில் அணைத்தவாறு அதைப் புகட்டினாள்.

தூக்கம் இருந்தவரையில், வழக்கம் போல் குழந்தை சித்தியின் கையிலிருந்து தீர்த்தம் குடிப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. கடைசியில் காதம்பினி தன் பல நாள் ஆசை தீர அவன் முகத்தை முத்தமிட்டு அவனைப் படுக்க வைக்கும்போது தூக்கம் கலைந்தது. குழந்தை சித்தியைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "சித்தி, நீ செத்தா பூட்டே?'' என்றான்.

"ஆமாண்டாப்பா'' என்றாள் காதம்பினி.

"நீ என்னண்டே திரும்பி வந்தூட்டையா! இனிமே செத்துப்போக மாட்டியே?'' என்றான்.

இதற்குப் பதில் சொல்வதற்குள்ளேயே ஒரு கலவரம் ஏற்பட்டது. சமையற்காரி கையில் கஞ்சியுடன் உள்ளே நுழைந்தவள், "அம்மாடீ!'' என்று அலறிப் போட்டுக் கொண்டு கீழே விழுந்துவிட்டாள்.

கூக்குரலைக் கேட்டு, சீட்டை எறிந்துவிட்டு உள்ளே நுழைந்த வீட்டுக்காரி, மரம் போல விறைத்து நின்று விட்டாள். ஓடவும் முடியவில்லை; பேசவும் நா எழவில்லை.

இதையெல்லாம் கண்ட குழந்தையும் பயந்து அழுதுகொண்டே, "சித்தி, நீ போயேன்'' என்றான்.

வெகு நாள் சென்று தான் சாகவில்லை என்ற நினைவு வந்தது காதம்பினிக்கு. அதே பழைய வீடு வாசல், அதே குழந்தை, அதே பாசம். எல்லாம் உயிருடனிருப்பதாகவே தோன்றின அவளுக்கு. நடுவே ஒரு மாறுதலும் தென்படாதது போலவே தோன்றியது. தோழியின் வீட்டுக்குச் சென்றிருந்த பொழுது தான் செத்து ஒழிந்து விட்டதாகப் பட்டது. குழந்தையின் அறைக்குள் வந்த

தும் அவனுடைய சித்தி துளிகூடச் சாகவில்லை என்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது.

வருத்தத்துடன், "அக்கா, என்னைக் கண்டு ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? நான் அதே மாதிரிதானே இருக்கிறேன்!" என்றாள்.

வீட்டுக்காரியால் நிற்க முடியவில்லை; மூர்ச்சை ஆகி விழுந்தாள்.

தங்கையிடம் சமாசாரம் கேட்டுச் சாரதாசங்கரர் தாமே அந்தப்புரத்திற்கு வந்தார். கை கூப்பிக்கொண்டு காதம்பினியை நோக்கி, "சின்னம்மா! இதெல்லாம் உனக்கு அடுக்குமா? சதீசன் எனக்கு ஒரே பிள்ளை. ஏன் அவன் மேல் உன் கண்ணைப் போடுகிறாய்? உனக்கு என்ன தவறு செய்தோம் நாங்கள்? நீ போனதிலிருந்தே அவன் சுக்காய் வற்றி வருகிறான். நோய் பிடித்துக்கொண்டே இருக்கிறது. இராப்பகலாக 'சித்தி, சித்தி' என்றே கத்துகிறான். உலகிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டாயோ இல்லையோ, இந்தப் பாசங்களையும் ஒழித்து விடு—நான் உனக்கு முறைப்படி கருமாதிகள் செய்கிறேன். விலகிப் போ, அம்மா" என்றார்.

காதம்பினியால் பொறுக்கமுடியவில்லை. உரக்க, "நான் சாகவில்லையே! நான் சாகவில்லை என்று எப்படி நிரூபிப்பேன் உங்களுக்கு! இதோ பாருங்கள். நான் பிழைத்திருப்பதை—" என்றவாறு அங்கிருந்த வெண்கல டம்ளரைத் தரையிலிருந்து எடுத்துத் தலையில் அடித்துக்கொண்டாள். ரத்தம் தாரை தாரையாக ஒழுக்கெடுத்தது.

காதம்பினி, "இதோ நான் பிழைத்திருக்கிறேன்" என்றாள்.

சாரதாசங்கரர் பதுமை போல் நின்றிருந்தார். குழந்தை பயத்துடன் தந்தையை அழைத்தான். மயக்கமுற்று இரு பெண்களும் கீழே கிடந்தனர்.

அப்படியே அந்தமழை இருட்டில் வெளியே புறப்பட்

டுப் போனாள் காதம்பினி. சற்று நேரத்துக்கெல்லாம் அருகிலிருந்த குட்டையில் தொபீல் என்று ஒரு சத்தம் கேட்டது.

காலை மழை ஓய்ந்ததும் வந்து பார்த்தால் காதம்பினியின் சவம் மிதந்துகொண்டிருந்தது. தன் உயிரைத் தானே மாய்த்துக்கொண்டதன்மூலம் காதம்பினி தான் சாகவில்லை என்பதை நிரூபித்துவிட்டாள்!

4. கடைசி இரவு

"சித்தி!"

"தூங்குடாப்பா, ஜதீன்! ராத்திரி ஆகிவிட்டதே!"

"ஆகட்டுமே; நானென்னவோ அதிக நாள் இருக்கப் போவதில்லை. மணியை அவள் பிறந்தவீட்டுக்கு... அவள் அப்பா எங்கே இருக்கிறாரோ,மறந்துபோய்விட்டது...."

"சீதாராமபுரத்தில்..."

"ஆமாம். சீதாராமபுரந்தான்; அங்கே அனுப்பி விடு மணியை. இன்னும் எத்தனை நாள்தான் நோயாளிக்குப் பணிவிடை செய்வாள்? அவள் உடம்பில் வலு ஏது?"

"நான் சொல்வதைக் கேள்! இந்த நிலையில் புருஷனை விட்டுவிட்டு எந்தப் பெண்தான் பிறந்த வீடு போவாள்?"

"டாக்டர்கள் சொல்வது அவளுக்கு..."

"தெரியாது. கண்ணால் பார்த்தாலே தெரிகிறதே! அன்று பிறந்த வீடு போகிறாயா என்று ஜாடையாகக் கேட்டபொழுது சட்டென்று அழுதுவிட்டாள்."

சித்தியின் வார்த்தைகளில் பொய்யும் இருந்தது. மணியுடன் அவள் அன்று இந்த விஷயமாகப் பேசியது இதுதான்:—

"உன் பிறந்த வீட்டிலிருந்து ஏதாவது சமாசாரம் வந்ததா, அம்மா? உன் பெரியப்பா பிள்ளை அநாதனைப் பார்த்தேனே!"

"ஆமாம்; வருகிற வெள்ளிக்கிழமை என் சின்னத்தங்கைக்கு அன்னப்பிராசனமாம். அதுதான்."

"சரிதான். தங்கச் சங்கிலி ஒன்று பண்ணி அனுப்பினால் உங்கம்மா சந்தோஷப்படுவாள்."

"நானே போகலாம் என்றிருக்கிறேன். தங்கையைப் பார்த்ததேயில்லை. பார்க்க வேண்டும்போல் இருக்கிறது."

"அதென்ன, ஜதீனை ஒன்றியாக விட்டுவிட்டா? டாக்டர் சொன்னதைக் கேட்டாயா?"

டாக்டர்தான், 'இப்போது ஒன்றும் அப்படி இல்லை' என்றாரே?"

"அவர் என்னதான் சொன்னாலும் அவனைப் பார்: இந்த நிலையில் நீ எப்படிப் போவாய்?"

"மூன்று தம்பிகளுக்குப் பின் ஒரே தங்கை எனக்கு; செல்லப்பெண். தடபுடலாக அன்னப் பிராசனம் நடக்கும். நான் போகாவிட்டால் அம்மா...."

"உங்கம்மாவின் மனசெல்லாம் எனக்குத் தெரியாதா, அம்மா? ஆனால் ஜதீனை இந்தமாதிரி விட்டுவிட்டுப் போனாயோ உன் அப்பா கோபித்துக்கொள்வார், பாரேன்!"

"தெரியும். நீங்கள் ஒரு வரி எழுதிக் கொடுத்துவிடுங்கள், சித்தி, இங்கே அப்படி ஒன்றும் கவலைக்கு இடமில்லை என்று. நான் போனால் அப்படி ஒன்றும்......"

"நீ போவதனால் கஷ்டம் ஒன்றும் இல்லை. எனக்குத் தெரியாதா என்ன? ஆனால் உங்கப்பாவுக்கு எழுதுவதானால் எல்லாவற்றையும் தெளிவாகத்தான் எழுதுவேன்."

"சரி, நீங்கள் எழுத வேண்டாம். நான் அவரிடம் சொல்லிவிட்டு......"

"பாரம்மா, எத்தனையோ பொறுத்தாயிற்று. ஆனால் நீ மட்டும் ஜதீனிடம் இந்தப் பேச்சை எடுத்தாயோ அதை என்னால் சகிக்க முடியாது. உங்கப்பாவுக்கு உன்னை நன்றாகத் தெரியும். அவரை ஏமாற்ற உன்னால் ஆகாது" என்று

சொல்லிவிட்டுச் சித்தி எழுந்து வந்துவிட்டாள். மணி கோபத்துடன் கொஞ்சநேரம் படுக்கையில் கிடந்தாள்.

பக்கத்து வீட்டுத் தோழி வந்து, "இதென்னடீ அம்மா, யார்மேல் கோபம்?" என்றாள்.

"பாரேண்டீ! எனக்கு ஒரே தங்கை: அவளுக்கு அன்னப் பிராசனம். என்னைப் போக விடமாட்டேன் என்கிறார்களே!"

"அடியம்மா! எங்கேடீ போவாய்! உன் புருஷரோ படுத்த படுக்கையாகக் கிடக்கிறார்."

"நான் ஒன்றும் செய்கிறதில்லை. செய்யவும் முடியாது. வீட்டிலே யாரும் பேசுகிறதில்லை. திணறுகிறதடீ எனக்கு! என்னாலே இந்த மாதிரி இருக்க முடியாது."

"நீ என்னவோ புண்ணியம் செய்தவளடீ!"

"உங்களைப் போல் மனிதர்களுக்குத் தகுந்தாற்போல நடிக்கத் தெரியாது. யாராவது பார்த்து என்னவாவது எண்ணிக்கொள்ளப் போகிறார்களே என்று வீட்டு மூலையில் முகத்தை மூடிக்கொண்டிருக்க எனக்குத்தெரியாது!"

"பின் என்ன செய்வதாம்?"

"போகத்தான் போகிறேன் - யார் தடுத்தாலும் சரிதான்."

"உன் சொரூபத்தைக் கண்டாலே எனக்குப் பயமாக இருக்கிறது. நான் வருகிறேன். எனக்கு வேலைகிடக்கிறது."

பிறந்தவீடு போகச் சொன்னபோது மணி அழுதாள் என்றதும் ஜதினுக்கு இருப்புக்கொள்ளவில்லை. தலையணையை முதுகுப்புறம் இழுத்துக்கொண்டு அதன் மேல் கை ஊன்றி எழுந்து உட்கார்ந்தான். "சித்தி, அந்த ஜன்னலைக் கொஞ்சம் திறந்துவிடேன். இந்த விளக்கு உள்ளே வேண்டியதில்லை" என்றான்.

ஜன்னலைத் திறந்ததும், இரவு, நீண்ட வழியில் செல்லும் யாத்திரிகனைப் போல அந்த நோயாளியின் ஜன்ன

லண்டை நின்றுகொண்டிருந்தது. எத்தனையோ யுகங்களின் மறைவுக்குச் சாட்சியான விண்மீன் கூட்டம் ஐதினின் முகத்தை நோக்கியது.

ஐதீன், இப் பெரிய இருண்ட திரையில் தன் மணியின் முகத்தைக் கண்டான். அந்த முகத்தில் விசாலமான இரு விழிகளிலும் நீர் வற்றாத கண்ணீர் என்றும் துடித்துக்கொண் டிருக்கும்.

வெகுநேரம் அவன் பேசாமல் இருப்பதைக் கண்டு சித்திக்கு நிம்மதி ஏற்பட்டது. ஐதின் தூங்கிவிட்டான் என்று நினைத்தாள்.

அதே சமயம் ஐதீன், "சித்தி, மணிக்கு இந்த விட்டில் மனம் நிலைக்கவில்லை என்றெல்லாம் நினைக்கிறாயே; ஆனால் பாரேன்" என்றான்.

"ஆமாம், அப்பா! நினைத்தது தவறுதான். சமயம் வரும்போது தெரிகிறதப்பா எல்லாம்."

"சித்தி!"

"தூங்குடாப்பா, ஐதின்."

"கொஞ்சம் யோசனை செய்யவிடேன். ஏதாவது பேச வேண்டும் போல் இருக்கிறது. வீணைக் கவலைப்படாதே, சித்தி!"

"சரி, சொல்லப்பா."

"நான் சொல்கிறேன். மனிதனுக்குத் தன் மனத்தை அறிந்துகொள்ளவே வெகு நேரம் பிடிக்கிறது. ஒரு நாள் நாம் ஒருத்தரும் மணியின் மனத்தை அறிந்துகொள்ள வில்லை என்று நினைக்கும்போது பொறுத்துக்கொண்டே போனேன். அப்போது நீங்கள் எல்லாம்........."

"வேண்டாம், அந்த மாதிரியெல்லாம் பேசாதேடா. நானும் எவ்வளவோ பொறுத்துக்கொண்டுதான் போனேன்!"

"கையில் திரட்டி எடுப்பதற்கு மனம் மண் உருண்டையா என்ன! மணிக்குத் தன் போக்கே புரியவில்லை

என்று எனக்குத் தெரியும். என்றைக்காவது அதிர்ச்சி ஏற்பட்டால்தான்........."

"நீ சொல்வது சரி, ஜதீன்!"

"அதனால்தான் அவளைக் குழந்தையாக நினைத்து, ஒன்றும் சொல்வதில்லை."

இதற்குச் சித்தி பதில் ஒன்றும் சொல்லாமல் பெருமூச்சு விட்டாள்-எத்தனையோ நாள் ஜதீன் வராந்தாவில் இரவைக் கழித்திருக்கிறான். மழைச்சாரல் அடித்தும் உள்ளே சென்றதில்லை. அதைச் சித்தி கவனித்திருக்கிறாள். எத்தனை நாள் தலைவலியுடன் படுக்கையில் படுத்துக்கொண்டு மணி வந்து தன் தலையைப் பிடிக்கமாட்டாளா என்று ஏங்கிக் கிடந்திருக்கிறான்! மணி அன்று தோழிகளுடன் சினிமாவுக்குப் போகத் தயார் செய்துகொண்டிருந்தாள்-ஜதீனுக்கு விசிற வந்தபோது அவளை வெறுப்புடன் அனுப்பினான். அந்த வெறுப்பிலும் எத்தனை வேதனை என்று சித்திக்குத் தெரியும். எத்தனை தடவை சித்தி, "அப்பா, இந்தப் பெண்மேல் அவ்வளவு தூரம் மனம் வைக்காதே. அவளும் உன்னைக் கவனிக்கக் கற்றுக்கொள்ளட்டுமே; கஷ்டம் இன்னதென்று தெரிய வைக்கவேண்டும்" என்று சொல்லியிருக்கிறாள். ஆனால் இதெல்லாம் சொல்லக்கூடாது; சொன்னாலும் இன்னொருத்தருக்குப் புரியாது. ஜதீனின் உள்ளத்தில் பெண் தெய்வத்திற்கேற்ற ஒரு பீடம் இருந்தது. அதில் மணியை அமர்த்தியிருந்தான். அந்தப் புனிதமான இடத்தில் பெண் அமிர்த கலசம் போன்றவள். ஆனால் தன் அதிருஷ்டத்தில் அது வெற்றுக் குடம் என்று நினைக்க அவன் மனம் துணியவில்லை. ஆகவே, பூஜை நடந்துகொண்டிருந்தது. அர்க்கியங்கள் நிரம்பின. வரம் தரும் என்று எதிர்நோக்கியிருந்தான். மறுபடியும், ஜதீன் தூங்கிவிட்டான் என்று சித்தி நினைத்தபோது அவன் பேச ஆரம்பித்தான்:

"எனக்குத் தெரியும். மணியுடன் நான் சுகமாக வாழ

முடியாதென்று நினைத்தாய். அதனால்தான் அவள்மேல் உனக்குக் கோபம். ஆனால், சித்தி, சுகம் இருக்கிறதே-அது இந்த நக்ஷத்திரங்களைப்போல், இருட்டு நீங்காவிட்டாலும் நடுநடுவேதான் வெளிச்சம் காட்டும். வாழ்வில் எத்தனையோ தவறுகள் செய்கிறோம்; தப்பாக எண்ணிக் கொள்கிறோம். இதன் நடுவிலும் சொர்க்கத்தின் வெளிச்சத்தைக் காணவில்லையா? எங்கிருந்தோ என் மனத்துக்கு இன்று தெம்பு ஏற்பட்டிருக்கிறது.''

சித்தி ஜதீனின் தலையைத் தடவிக் கொடுத்தாள். அவள் கண்களிலிருந்து நீர் வடிவது யார் கண்ணிலும் படவில்லை.

"சின்னவளாச்சே! அவளால் எப்படி இருக்க முடியும் என்றுதான் யோசிக்கிறேன், சித்தி.''

"சின்னவளா! இதுதானே அவளுக்கு வயசுக் காலம். நாங்கள் எல்லாம் சின்ன வயசிலேயே கணவனைத் தெய்வமென்று மனசுக்குள்ளே வழிபட்டு வந்தோம். அதனால் என்ன குறைந்து போய்விட்டோம்? இதையும் கேட்கிறேன். இதற்குமேல் என்ன சுகம் வேண்டிக் கிடக்கிறது?''

"சித்தி, மணியின் மனம் மலரும் சமயத்தில் நான்...''

"என்ன யோசிக்கிறாய், ஜதீன்? மனம் தெரிந்துவிட்டால் அது குறைவா என்ன?''

வெகு நாட்களுக்குமுன் கேட்ட ஆண்டியின் பாட்டு ஒன்று, ஜதீனுக்குச் சட்டென நினைவு வந்தது:

"மனமே, நீ கண்ணதனை விழிக்காத அப்பொழுது
மனத்திற்குகந்தவன் உன்வாயிலிலே வந்தனன்காண்
இனிமேல் நீ எழுந்திரா யென்றவன் போனபின்
இருளில்உன் பாழான தூக்கந்தான் கலைந்ததுவே.''

"சித்தி, மணி என்ன இருக்கும்?''

"ஒன்பது அடிக்கப் போகிறது.''

"ஒன்பதுதானா? இரண்டோ, மூன்றோ ஆகிவிட்டது என்றல்லவா நினைத்தேன். இருட்டானதுமே எனக்கு

நடுநிசி போலத் தோன்றுகிறது. அப்போது ஏன் என்னைத் தூங்கு, தூங்கென்று தொந்தரவு செய்கிறாய்?"

"நேற்றுக்கூடச் சாயங்காலத்திலிருந்து பேசிக்கொண்டே இரவு வெகுநேரம் வரை உனக்குத் தூக்கமே வரவில்லை. அதுதான் இன்று உன்னைப் பொழுதோடே தூங்கச் சொல்கிறேன்."

"மணி தூங்கிவிட்டாளோ?"

"இல்லை. உனக்காகப் பயத்தங் கஞ்சி போட்டுவிட்டுத் தூங்கப் போவாள்."

"என்ன சொல்கிறாய், சித்தி! மணி அப்போ........."

"அவள்தான் உனக்காகப்பத்தியம் செய்வதெல்லாம். ஓய்வு இருக்கிறதா என்ன, அவளுக்கு?"

"நான், மணிக்கு ஒரு வேலை........."

"பெண்களுக்கு இதெல்லாம் கற்றுக்கொடுக்க வேண்டுமா? அவசியம் வந்தால் தாங்களாகச் செய்வார்கள்."

"இன்று பகல் குழம்பு நன்றாக இருந்தது வாய்க்கு. நீ செய்திருப்பாய் என்று நினைத்தேன்."

"என் தலையெழுத்து! என்னை ஏதாவது செய்ய விடுகிறாளா என்ன? உன் துண்டு, துப்பட்டியை எல்லாம் அவளே தன் கையால் துவைத்து உலர்த்துகிறாள். கொஞ்சங்கூட அழுக்கு இருக்கக் கூடாது என்று தெரியும் அவளுக்கு. உன் வெளி அறையைப் பார்த்தால் தானே தெரியும்! இரண்டு தடவை பெருக்கி என்ன பளபளவென்று வைத்திருக்கிறாள், தெரியுமா! இந்த அறையில் அடிக்கடி வரவிட்டால் அவளை யாரால் பிடிக்க முடியும்? வரவேண்டுமென்றுதான் அவளும் ஆசைப்படுகிறாள்."

"மணியின் உடம்பு ஏதாவது........."

"நோயாளியின் அறைக்குள் அவளை வர விடுவதில் ஆபத்து ஒன்றுமில்லை என்று டாக்டர் சொன்னார். அவ

ளுக்கு இளகிய மனசோ இல்லையோ! நீ படுகிற கஷ்டத்தைப் பார்த்தால் அவள் உடம்பு இரண்டே நாளில் வதங்கிப் போய்விடும்."

"சித்தி, நீ அவளை எப்படித் தடுக்கிறாய்?"

"என் சொல்படி அவள் கேட்பதனால்தான். இருந்தும் அடிக்கடி போய்ச் சமாசாரம் சொல்ல வேண்டும். இது எனக்கு இன்னொரு வேலை."

ஆகாயத்தில் மின்னும் தாரகைகள் வேதனையில் கண்ணீர்த்துளிகள் போல் ஜொலித்துக்கொண்டிருந்தன. வாழ்வை விட்டுக் கடைசியாக விடை பெற்றுக் கொள்ளும் அளவிற்குத் தான் வந்திருப்பதை நினைத்து நன்றியுடன் ஜதீன் வணங்கினான். எதிரே மரணம் தன் வலக்கரத்தை இருளினூடே நீட்டியது. ஜதீன், அசையாத நம்பிக்கையுடன் நோயால் மெலிந்த தன் கையை அதன்மேல் வைத்தான்.

ஒரு முறை பெருமூச்சு விட்டு, 'உஸ் உஸ்' என்று இப்படியும் அப்படியும் புரண்டு, "சித்தி மணி விழித்துக் கொண்டிருந்தால் அவளைக் கொஞ்சம்........." என்றான்.

"இதோ கூப்பிடுகிறேனப்பா, ஜதீன்."

"நான் அவளை வெகு நாழிகை இந்த அறையில் இருக்கச் சொல்லவில்லை. ஐந்தே நிமிஷம். இரண்டு வார்த்தை சொல்லவேண்டி இருக்கிறது."

சித்தி பெருமூச்சு விட்டு, மணியை அழைக்கச் சென்றாள். ஜதீனின் நாடி வேகமாக அடித்தது. இன்றுவரை மணியுடன் அந்தரங்கமாகப் பேச முடியவில்லை. இரண்டு வாத்தியங்கள் வெவ்வேறு சுருதியில் அமைந்திருந்தன. அவை ஒன்றோடொன்று இழைவது கடினம் அல்லவா? மணி தன் தோழிகளுடன் பேசிச் சிரித்துக்கொண்டிருப்பாள். தொலைவிலிருந்து இதைக் கேட்டு ஜதீனின் உள்ளம் பொறாமைத் தீயில் பொரியும். ஜதீன் தன்னையே வெறுத்துக்கொண்டான். தன்னால் ஏனோ இந்த

மாதிரி வேடிக்கையாகப் பேச முடியவில்லை! தெரியாமல் இல்லை. தன் நண்பர்களுடன் இந்த மாதிரி பேசுவதில்லையா என்ன! புருஷர்களுடன் பேசுவது ஒன்றுதான்; பெண்களுடன் பேசுவது வேறுதான். இரண்டும் எப்படி ஒத்துப் போகும்? பெரிய விஷயங்களை ஒருவனே சொல்லிக் கொண்டு போகலாம். அவள் கவனிக்கிறாளா இல்லையா என்று பார்க்காவிட்டால் போகிறது. ஆனால் அற்ப விஷயங்களுக்கு இரு சாராரும் ஒத்துப் போக வேண்டுமே! புல்லாங் குழலில் தனியாக ஆலாபனம் செய்யமுடியும். ஆனால் இரண்டுபேர் சேர்ந்தால்தானே தாளத்துக்கு ஒத்துப் போகும்! இதற்காக எத்தனையோ நாள் திறந்த வராந்தாவில் கம்பளி விரித்து உட்கார்ந்திருப்பான். பல சின்ன விஷயங்களைப்பற்றிப் பேசியபின் சம்பாஷணைக்கு விஷயம் இராது. அந்தி நேரம் வீணாகப் போய் விடும். மணி போய்விட்டாலே போதும் என்று ஜதினுக்குத் தோன்றும். மூன்றாவது ஆள் யாராவது வர மாட்டார்களா என்று எண்ணிக்கொள்வான். ஏனென்றால், இரண்டுபேர் பேசுவது கஷ்டம். மூன்றுபேர் பேசுவது சகஜம்.

இன்று மணி வந்தால் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்ற சிந்தனையே ஜதினுக்கு. அநாவசியமாகப் பெரிய விஷயங்களை எடுக்கக்கூடாது. இந்த ஐந்து நிமிஷங்கூட வீணாகப் போகிறதே என்று பயந்தான். இந்தமாதிரி தன்னந்தனியே அவளுடன் பேசும் சந்தர்ப்பம் அவன் வாழ்வில் இன்னும் எத்தனை தான் வரப் போகின்றன!

"இதென்னடியம்மா, எங்கே புறப்படுகிறாய்?"

"சீதாராமபுரத்துக்குப் போகிறேன்."

"அதென்னடி? யாரோடு போகிறாய்?"

"அநாதன் அழைத்துக்கொண்டு போகிறான்."

"மகராஜியாகப் போ. நான் உன்னைத் தடுக்கவில்லை. ஆனால் இன்றைக்கு வேண்டாமே."

"டிக்கெட் வாங்கி வண்டியில் இடங்கூட 'ரிஸர்வ்' செய்தாகிவிட்டதே."

"அதென்ன, பிரமாத நஷ்டமா! நாளைக்கு விடியற் காலையில் போகலாமேடி."

"சித்தி, உங்கள் திதி, வாரம் இதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. இன்றைக்குப் போவதில் என்ன தவறு?"

"ஜதின் உன்னைக் கூப்பிட்டான். உன்னிடம் ஏதோ பேசவேண்டுமாம்."

"ரொம்ப சரி, இன்னும் கொஞ்ச நாழிகை இருக்கிறது. அவரிடமே சொல்லிவிட்டு வருகிறேன்."

"கூடாது! போகிறேன் என்று நீ அவனிடம் சொல்லக் கூடாது."

"அதுவும் சரி. ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் எனக்கு நேரம் இல்லை. நாளைக்கு அன்னப்பிராசனமாம்; நாளைக்குப் போய் என்ன பிரயோஜனம்?"

"கைகூப்பி வேண்டிக்கொள்கிறேன். இன்று மாத்திரம் கேளடியம்மா, நான் சொல்வதை. மன அமைதியுடன் போய் ஜதினின் பக்கத்தில் உட்காரு. அவசரப் படாதே."

"என்னை என்ன பண்ணச் சொல்கிறீர்கள்? வண்டி எனக்காகக் காத்திருக்குமா! அநாதன் போய்விடுவான். பத்து நிமிஷங்களுக்கெல்லாம் வந்து என்னை அழைத்துக் கொண்டு போவான். அதற்குள் வேண்டுமானால் அவரைப் பார்த்துவிட்டு வருகிறேன்."

"அப்படியானால் வேண்டாம்; நீ போ. இந்த மாதிரி நீ அவன் அருகில் போக விடமாட்டேன். அடி துரதிருஷ்டம் பிடித்தவளே! அவன் மனசுக்கு இவ்வளவு கஷ்டம் தருகிறாயே! அவன் நாளைக்கே எல்லாவற்றையும் விட்டு விட்டுப் போகப் போகிறானே! நான் சொல்வது மட்டும் எப்போதும் உன் மனத்தில் பதிந்து இருக்குமடி. பகவான்

இருக்கிறான். அந்த வார்த்தை ஒருநாள் உனக்குத் தெரியும்.''

''சித்தி, அப்படியெல்லாம் சாபம் கொடுக்காதீர்கள்.'

''அடியம்மா, வேறு எதற்காக உயிரை வைத்துக் கொண்டிருக்கிறாய்? பாவத்துக்கும் ஒரு முடிவு இல்லையா! எனக்குத் தாங்காது, அம்மா.''

சித்தி, சிறிது நேரம் கழித்தே நோயாளியின் அறைக்குள் சென்றாள். ஜதீன் தூங்கிவிட்டிருப்பான் என்று நினைத்தாள். ஆனால் உள்ளே நுழைந்ததும் ஜதீன் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான். ''அவள் செய்த காரியத்தைப் பார்த்தாயா?'' என்றாள் சித்தி.

''என்ன! என்ன! மணி வரவில்லையா? ஏன் இவ்வளவு நேரம்?''

''போய்ப் பார்க்கிறேன்- உனக்குப் பால் காய்ச்சப் போனவள்; அது பொங்கி வழிந்துவிட்டதே என்று அழுகிறாள். 'என்ன பிரமாதம்! இன்னும் வேண்டிய பால் இருக்கிறதே' என்றேன்! அஜாக்கிரதையாக நீ குடிக்க வேண்டிய பாலைப் 'பொங்க விட்டோமே' என்ற மனத் தாங்கல். எப்படியோ சமாதானம் செய்து படுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வந்தேன். இங்கே வரச் சொல்லவில்லை. பாவம், தூங்கட்டும்.''

மணி வராதது ஜதீனின் மனத்தை மிகவும் வாட்டியது. இருந்தும் ஓர் ஆறுதலும் ஏற்பட்டது. மணி நேராக வந்துவிட்டால், அவளைப்பற்றிய இனிய நினைவுகள் மறைந்துவிடுமோ என்ற பயமே அவனுக்கு. இந்த மாதிரி அவன் வாழ்வில் எத்தனையோ தடவை நடந்திருக்கிறது. பால் பொங்கி வழிந்ததற்காக அவளுடைய இளகிய நெஞ்சம் வேதனைப்பட்டது என்பதை எண்ணி எண்ணி அவன் உள்ளம் குளிர்ந்தான்.

''சித்தி!''

''ஏண்டாப்பா?''

"நான் அதிக நாள் இருக்கமாட்டேன். ஆனல் எனக்கு எந்த விதமான வருத்தமும் இல்லே. எனக்காக நீ கவலேப்படாதே."

"இல்லேயடா, நான் வருத்தப்பட மாட்டேன். வாழ்வு என்பதைப் போல் சாவும் இருக்கிறதோ இல்லேயோ!"

"சித்தி, நிச்சயமாகச் சொல்கிறேன். என் மனசுக்குச் சாவு இனிமையாகவே இருக்கிறது."

இருண்ட ஆகாயத்தை நோக்கினன் ஐதின். மணியே இன்று மறலியின் வடிவத்தில் வந்து நிற்பது போல் தோன்றிற்று. அவள் இன்று அழியா இளமையுடன் விளங்குகிருள். வீட்டுக்காரி, தாய், கட்டழகி, மங்களரூபிணியாக அவள் காட்சியளித்தாள். அவள் விரிகுழலின் மேல் படிந்திருக்கும் நக்ஷத்திரமணிகள் லட்சுமி தன் கையாலே ஆசிர்வாதம் செய்து கொடுத்த மணி மாலே. இந்த இருண்ட மேலார்ப்பின் கிழ் அன்றே தாங்கள் இருவரும் புதிதாக ஒருவரை ஒருவர் பார்த்தது போல அவனுக்குப் பட்டது. கங்குலின் படர்ந்த இருளெங்கும் மணியின் காதல் ஊறும் நேர்க்கே தென்பட்டது. இந்த விட்டின் மருமகள் மணி அந்தத் துளியளவுச் சிறுமி, இன்று விசுவரூபம் கொண்டிருந்தாள். வாழ்வும் சாவும் கூடும் இடத்தில் இந்த நக்ஷத்திர பீடத்தில் அவள் விற்றிருந்தாள்-மோனம் நிரம்பிய அந்த இரவு மங்கலகலசம் போல் தூய நீர் நிரம்பியிருந்தது. ஐதின் கைகூப்பித் தனக்குள் சொல்லிக்கொண்டான்: "இத்தனே நாட்களுக்குப் பின் முகத்திரையைத் திறந்தாள். இந்தப்பயங்கர இருளில் அவளே மூடியிருந்த மாயை விலகியது. எவ்வளவோ அழ வைத்தாகி விட்டது. அழகிய வடிவமே! அழியாப் பேறே! இனி என்னே ஏமாற்ற முடியாது!" என்ருன்.

"என்னவோ கஷ்டமாக இருக்கிறது, சித்தி. ஆனல் நீ எண்ணுவது போல ஒன்றும் இல்லே. என் கஷ்டங்கள் எல்லாம் ஒவ்வொன்ருக என்னேவிட்டு விலகுகின்றன.

சுமை தாங்கும் ஓடம்போல் இத்தனைநாள் என் வாழ்க்கையோடு அவை கட்டுண்டிருந்தன. இன்று அந்தத் தளை அறுபட்டுவிட்டது. என்னை வருத்திய சுமைகளுடன் இன்று அது மிதந்து சென்றுவிட்டது. இன்னும் என் கண்களில் அடிக்கடி படுகிறது. ஆனால் அது எனக்குச் சொந்தமானது என்ற எண்ணம் இல்லை. இரண்டு நாளாக மணியைப் பார்க்கவே இல்லை, சித்தி.''

''முதுகுப்பக்கம் இன்னொரு தலையணை வைக்கிறேனே! நன்றாகச் சாய்ந்துகொள்ளேனப்பா, ஜதீன்.''

''எனக்குத் தோன்றுகிறது, மணி போய்விட்டிருப்பாள் என்று - துயர் நிரம்பிய அந்த ஓடம் போச்சே அந்த மாதிரி.''

''கொஞ்சம் மாதுளை ரசம் சாப்பிடேண்டா, நெஞ்சு வறண்டு போகிறதே!''

''நான் நேற்றே உயில் எழுதி வைத்துவிட்டேன்— அதை உனக்குக் காட்டினேனோ? சரியாக ஞாபகம் இல்லை.''

''நான் எதற்கடா, அப்பா அதைப் பார்க்கவேண்டும்?''

''அம்மா போகும்போது என்னிடம் ஒன்றுமே கிடையாது. நீ கொடுத்ததைச் சாப்பிட்டு உன் கையாலேயே வளர்ந்தேன், சித்தி. அதுதான் சொன்னேன்...........''

''அதெல்லாம் எதற்கடா? எனக்கு இந்த வீடும், கொஞ்சம் சொத்தும் தவிர வேறு என்ன இருந்தது? எல்லாம் நீயாகச் சம்பாதித்ததுதானே!''

''ஆனால் இந்த வீடு....''

''எனக்கு எதற்கடா அப்பா வீடு? மேலே மேலே நீ நீ எவ்வளவு கட்டியிருக்கிறாய்? எதை என்னுடையது என்று சொல்வது?''

''ஆனால் இந்த வீடு?''

''அது எனக்குத் தெரியாதா, ஜதீன்! நீ தூங்குடாப்பா.''

''மணிபேரில் எழுதியிருக்கிறேனே பொழிய எல்லாம்

உன்னுடையதுதான், சித்தி. உன்னை அவள் அவமதிக்க மாட்டாளென்றே நினைக்கிறேன்."

"அதற்காக நீ ஏன் இவ்வளவு கவலைப்படுகிருய், அப்பனே?"

"உன் ஆசீர்வாதந்தான் எனக்கு எல்லாம். என் உயிலைப் பார்த்து ஒன்றும் எண்ணிக்கொள்ளாதே!"

"இதென்னபேச்சடா, ஜதின்! உன் சொத்தை மணிக்குக் கொடுத்துவிட்டுப் போகிருய். அதனால் நான் என்ன எண்ணிக்கொள்வேன்? எனக்கென்ன அவ்வளவு கெட்ட மனசா? உன்னுடையதை அவளுக்கு எழுதி வைக்கிறாயே என்று சந்தோஷப்படுகிருயே, அதுவே எனக்குப் போதுமடா."

"ஆனால் உனக்குக்கூட நான்......"

"பார், ஜதின். எனக்குக் கோபம் வரும். நீ போனதுக்கப்புறம் எனக்குப் பணம் எதற்கடா?"

"சித்தி, பணத்தைக் காட்டிலும் மேலானது ஏதாவது......"

"கொடுத்திருக்கிருய், ஜதீன். ஏராளமாகக் கொடுத்திருக்கிருய். வெறிச்சென்றிருந்த என் வீட்டில் விளக்கேற்றினையே! அதுவே என் பாக்கியமடா. இத்தனை நாட்கள் உன்னை மனமார வளர்த்தேன். அது என் கடமை- எனக்கு ஒரு குறையும், இல்லையடா! அவள் மேலேயே எழுதிவை. எல்லாவற்றையும் எழுதி வை. வீடு வாசல், குதிரை வண்டி, நிலம் நீர் எல்லாவற்றையும் மணியின்பேரில் எழுதி வைத்துவிடு. இந்தப் பளு எல்லாம் எனக்கு வேண்டாமடா."

"உனக்கு இதெல்லாம் அநுபவிக்க இஷ்டமிராது. ஆனால் மணி சின்னவளாச்சே; அதுதான்."

"அப்படியெல்லாம் பேசாதே! சொத்துக் கொடுப்பதானால் கொடு, ஆனால், அநுபவிப்பது..."

"ஏன் அநுபவிக்க முடியாது, சித்தி?"

"முடியாதடா, அப்பா, முடியாது. அதெல்லாம் அவள் வாய்க்கு ருசிக்காது. தொண்டை வற்றிச் சுக்காகி விடுவாள். ஒன்றும் எட்டாது, அவளுக்கு."

ஜதீன் வாயை மூடிக்கொண்டான். தான் இராது போனால் மணிக்குச் சம்சார வாழ்க்கை வெறுப்பையே தரும். இது உண்மையா, இல்லை பொய்யா! சுகத்தைத் தருமா, இல்லை மனசுக்குக் கஷ்டந்தானா! ஒன்றும் அவனுக்குச் சரியாக விளங்கவில்லை. வானில் மின்னும் நக்ஷத்திரங்கள் அவன் இதயத்துள் மெல்ல, "அப்படித்தான் நாங்களும் கோடி கோடி வருஷங்களாகப் பார்த்து வருகிறோமே, இந்த உலகத்தில் சம்சாரமே வெறும் சூனியந்தான்" என்றன.

ஜதீன் ஆழ்ந்து பெருமூச்சுவிட்டு, "மனப்பூர்வமாகக் கொடுக்க வேண்டியதைத் தர முடியாது போகிறதே" என்றான்.

"குறைச்சலாக ஏதாவது கொடுத்தாயா? நீ கொடுக்கும் இந்த வீடுவாசல் நில புலன்களுக்கு மதிப்பில்லையா? அது அவளுக்குத் தெரியாதா? நீ கொடுத்ததைத் தலைமேல் தாங்கும் சக்தியை அவளுக்குத் தெய்வம் தரட்டும். அதுதான் நான் செய்யும் ஆசிர்வாதம்."

"இன்னும் கொஞ்சம் பழரசம் கொடு, சித்தி. தொண்டை வறண்டு போகிறது. மணி நேற்று வந்திருந்தாளோ? எனக்குச் சரியாகக் கவனம் இல்லை."

"வந்திருந்தாளே. அப்போது நீ தூங்கிக்கொண்டிருந்தாய். உன் தலைமாட்டில் உட்கார்ந்து வெகு நேரம் விசிறிக்கொண்டிருந்தாள். அப்புறம் உன் துணிதுப்புகளை எல்லாம் வண்ணானுக்குக்கூட எடுத்துப் போட்டாளே!"

"என்ன ஆச்சரியம்! அதே சமயத்தில்தான் நான், ஒரு கனாக் கண்டேன். மணி என் அறையில் வர ஆசைப்படுவது போல் இருந்தது. கதவு கொஞ்சந்தான் திறந்திருந்தது. தள்ளி அசைத்துப் பார்த்தாள். அதற்குமேல்

கதவைத் திறக்க முடியவில்லை. ஆனால், சித்தி, நீ கொஞ்சம் வளர்த்தியே சொல்கிறாய்; அவளைப் பார்க்க விடேன். இல்லாவிட்டால் மரணம் எனக்குப் பயத்தையே மூட்டுகிறது.''

"இந்தக் கம்பளியைக் கால்மேல் இழுத்துப் போர்த்து விடுகிறேன். காலெல்லாம் சில்லிட்டுப் போகிறதே!''

"வேண்டாம், சித்தி. உடம்பின்மேல் எது போர்த்தாலும் எனக்குப் பிடிக்கவில்லையே!''

"இந்தப் போர்வை மணியே பின்னினதடா, ஜதின். இத்தனை நாள் ராத்திரியெல்லாம் கண்விழித்து உனக்காகச் செய்திருக்கிறாள். நேற்றுத்தான் முடித்தாள்.''

ஜதின் தன் கைகளால் போர்வையைத் தடவினான். அதன் மென்மை மணியின் மனத்தைப் போன்றது என அவனுக்குப் பட்டது. தன்னை நினைத்துக்கொண்டு இரவெல்லாம் தூங்காமல் அதைப் பின்னியிருக்கிறாள்,பாவம். அவள் மனத்தில் ஊறிய காதல் இதனுடன் பின்னிக் கிடந்தது. வெறும் கம்பளியைக் கொண்டு மட்டுமல்ல; மணியின் மெல் விரல்கள் பட்டு இது உருவானதல்லவா! ஆகவே, போர்வையை அவன் கால்மேல் போர்த்த பொழுது, மணி இரவெல்லாம் கண் விழித்துத் தன் கால்களைப் பிடிப்பது போலத் தோன்றியது.

"ஆனால், சித்தி, மணிக்கு இதெல்லாம் பின்னத் தெரியாதே!—அவளுக்குப் பிடிக்காதே!''

"மனசு வைத்தால் கற்றுக்கொள்ள எவ்வளவு நேரமாகும்? அவளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியிருந்தது—அதில் தையல் தாறுமாறாகவும் இருக்கும்.''

"இருந்தால் என்ன! அதைப் பாரிஸ் எக்ஸிபிஷனுக்கு அனுப்பப்போகிறதில்லையே! தாறுமாறாகத் தைத்தால் என்ன? கால் போர்க்கப் போதும்.''

தையலில் எவ்வளவோ தவறுகள் இருப்பதை எண்ணி ஜதினுக்கு மேலும் ஆனந்தம் உண்டாயிற்று.

பாவம், மணியால் முடியாது. அவளுக்குத் தெரியாது; எவ்வளவோ தப்புகள் செய்வாள். இருந்தாலும் பொறுமையுடன் இராத் தூக்கமிராமல் இதைச் செய்தாளே! இவ்வாறான கற்பனைகள் அவன் மனத்தை உருக்கின; இனிமையைத் தந்தன. தவறுகள் கூடிய அந்தப் போர்வையை மறுபடியும் தொட்டுப் பார்த்தான்.

"சித்தி, டாக்டர் கீழேதான் இருக்கிறாரா?"

"ஆமாம், ஜதீன். இன்று ராத்திரி இங்கேயே இருப்பார்."

"ஆனால் எனக்கு வீணாகத் தூக்க மருந்தைக் கொடுக்கச் சொல்லாதே. எனக்குத் தூக்கமே வருவதில்லை. கஷ்டந்தான் அதிகமாகிறது. நான் இன்று நன்றாக விழித்துக்கொண்டிருக்கும்படி செய்யுங்களேன். சித்தி, வைகாசி மாதம் துவாதசி அன்றுதானே எனக்குக் கல்யாணமாயிற்று! நாளைக்கு அந்த நாள்—நாளைக்கு இந்த நக்ஷத்திரங்களெல்லாம் ஆகாயத்தில் அழகாக எரிந்து கொண்டிருக்குமோ இல்லையோ? மணிக்குக் கவனம் இராது. அவளுக்கு ஞாபகமூட்ட வேண்டும்; சித்தி, அவளை இரண்டே நிமிஷம் அனுப்பி வையேன்—ஏன் வாயை மூடிக்கொண்டிருக்கிறாய்? டாக்டர் என் உடம்பு பலவீனமாகிவிடும், அதனால் என் மனசுக்குச் கஷ்டம் என்று சொல்கிறாரா என்ன! ஆனால் நான் நிச்சயமாகச் சொல்கிறேன்: சித்தி, இன்று ராத்திரி அவளோடு இரண்டு வார்த்தை பேசினால்தான் என் மனசு நிம்மதியாக இருக்கும். இப்போது தூக்க மருந்து வேண்டாம். இந்த இரண்டு ராத்திரியாக அவளிடம் என்னவோ சொல்ல வேண்டும் போல் இருக்கிறது—அதனால்தான் தூக்கம் இல்லை. சித்தி, நீ ஏன் அப்படி அழுகிறாய்? நான் நன்றாகத்தானே இருக்கிறேன்! எனக்கு இன்று இருக்கிற தெம்பு என்றைக்குமே இல்லை. அதனால்தான் மணியைக் கூப்பிடுகிறேன். என் மனம் சந்தோஷத்தில் பொங்குகிறது.

அவள் கையில் அதைக் கொடுத்துவிட்டுப் போகவேண்டுமே!' எத்தனையோ நாள், பேச வேண்டுமென்ற ஆசை; ஆனால் முடியவில்லை. இனி ஒரு கணமும் பொறுக்க மாட்டேன்—அவளை இப்போதே கூப்பிடேன்.— அப்புறம் பேச எனக்குச் சமயம் ஏது! வேண்டாம், சித்தி. அப்படி அழுதாயானால் எனக்கு என்னவோ போல் இருக்கிறது. இத்தனை நாள் கவலையின்றி இருந்தாயே! இன்று உனக்கு என்ன, சித்தி?''

''அடே ஜதீன்! என் அழுகையெல்லாம் ஓய்ந்துவிட்டது என்று நினைத்திருந்தேன்—ஆனால் இன்னும் பாக்கி இருப்பதை எண்ணி என்னால் தாங்க முடியவில்லையடா!''

''மணியைக் கூப்பிடேன்— நாளைக்கு ராத்திரி......''

''போறேண்டா—சம்பு கதவாண்டை இருக்கிறான். ஏதாவது வேண்டுமானால் அவனைக் கூப்பிடு.''

சித்தி மணியின் அறைக்குள் போய் மேஜையின் மேல் விழுந்து கூப்பிடலானாள்: ''அடி வாயேன்—அடி ராக்ஷஸி! வந்து தொலையேன்; உனக்குத் தன் சொத்து எல்லாவற்றையும் கொடுத்துவிட்டுப் போகிறானே! ஒரு வார்த்தையாவது அவனுடன் பேசேன்—அவன்தான் சாகப் போகிறானே!—இன்னும் ஏண்டி அவனை வதைக்கிறாய்?''

ஜதீன், காலோசை கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தான். ''மணி'' என்றான்.

''இல்லை, நான் சம்பு; கூப்பிட்டீர்களா?''

''போய் அவளை அழைத்து வா.''

''எவளை?''

''மணியைத்தான்.''

''இன்னும் திரும்பி வரவில்லையே!''

''எங்கே போயிருக்கிறாள்?''

''சீதாராமபுரத்துக்கு.''

"இன்றைக்கா போனாள்?"

"இல்லை, மூன்று நாளாச்சு, போய்."

கனப் பொழுது ஜதீனின் உடம்பு முழுவதும் விண் விண்ணென்று வலித்தது. கண்கள் இருண்டுவிட்டன. இவ்வளவு நேரம் தலையணையில் சாய்ந்து உட்கார்ந்து இருந்தவன் படுத்துவிட்டான். கால்மேல் கம்பளி போர்த்திருந்தது. அதைத் தூர உதைத்துத் தள்ளினான்.

வெகுநேரம் கழித்துச் சித்தி உள்ளே நுழைந்த பொழுது ஜதீன் மணியைப்பற்றிப் பேச்சே எடுக்கவில்லை. அதை மறந்துவிட்டிருப்பான் என்று நினைத்தாள். "சித்தி, அன்று நான் கண்ட கனவைச் சொன்னேனே, உன்னிடம்?" என்றான் ஜதீன்.

"எந்தக் கனுடா?"

"மணி உள்ளே வரக் கதவைத் தள்ளினாள். கதவு கொஞ்சந்தான் திறந்தது. மேலே திறக்க முடியவில்லை. வெளியிலேயே நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். உள்ளே நுழைய முடியவில்லை. எவ்வளவோ தடவைகள் கூப்பிட்டேன். இருந்தாலும் இந்த அறைக்குள் வர இடம் இராது போய்விட்டது அவளுக்கு."

சித்தி பேசாமல் இருந்தாள். பொய் சொல்லி ஜதீனுக்கு இவ்வளவு நாள் ஆறுதல் அளித்தது இனி முடியாது என்று தெரிந்தது. துயரம் வரும்போது அதைத் தாங்குவதே மேல். பொய் கூறி விதியின் அதிர்ச்சியைத் தடுக்க முயல்வது வீண்.

"சித்தி, உன்னிடம் நான் பெற்ற அன்பு ஏழு ஜன்மத்துக்கும் வழித்துணை புரியும். என் வாழ்வு இன்று நிரம்பி இருக்கிறது. அடுத்த ஜன்மத்தில் நீ என் பெண்ணாகவே பிறப்பாய். உன்னை அன்போடு வளர்ப்பேன்."

"என்ன சொல்கிறாய், ஜதீன்? திரும்பவும் பெண்ணாகப் பிறக்க வேண்டுமா? வேண்டுமானால் பிள்ளையாக வளருகிறேனடா. அதையே நீயும் வேண்டிக்கொள்."

"வேண்டாம். பிள்ளையாக வேண்டாம். இளமையில்

இருந்தது போலவே அபூர்வ அழகுடன் என் வீட்டுக்கு நீ பெண்ணாகவே வரவேண்டும். எப்படியெல்லாம் உன்னைச் சிங்காரிப்பேன், வளர்ப்பேன், தெரியுமா?''

''பேசாதேடாப்பா, ஜதீன்; தூங்கு.''

''உனக்கு லக்ஷ்மீ ராணி என்று பெயரிடுவேன்.''

''அது இந்தக் காலத்துப் பெயரல்லவே!''

''வேண்டாம். இந்தக் காலத்துப் பெயர் வேண்டாம்! சித்தி, நீ அந்தக் காலத்துப் பெண். அந்த மாதிரியே என் வீட்டுக்கு வா.''

''உன் வீட்டில் பெண்ணாகப் பிறந்து கல்யாணத்துக்காகக் கஷ்டப்படுத்த வேண்டும் என்ற ஆசை எனக்கு இல்லையடா, ஜதீன்.''

''சித்தி, என்னைக் கையால் ஆகாதவன் என்று நினைக்கிறாயா? என்னைக் கஷ்டத்திலிருந்து மீட்கப் பார்க்கிறாயா?''

''பெண் மனசுதானேடப்பா எனக்கு? நான்தான் கையாலாகாதவள். அதனால்தான் பயந்து பயந்து உன்னைக் கஷ்டத்திலிருந்து மீட்கப் பார்க்கிறேன். ஆனால் அது என்னால் ஆகிற காரியமா?''

''சித்தி, இந்த வாழ்க்கையில் நான் அறிந்ததை உபயோகிக்கச் சமயம் இல்லை. ஆனால் இதையெல்லாம் சேர்த்து அடுத்த தடவை மனிதனால் முடியுமா, முடியாதா என்று காட்டி விடுகிறேன்.''

''என்ன சொன்னாலும் சரி, ஜதீன். நீ ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை. எல்லாவற்றையும் பிறருக்கே கொடுத்தாய்.''

''சித்தி, எனக்கு ஒரு பெருமை. நான் சுகத்துக்கு ஆசைப்பட்டு டம்பமாக இல்லை. எனக்கு உரிமை இருந்த இடத்திலும் நான் பலாத்காரமாக அதைச் செலுத்த விரும்பியதில்லை. கிடைக்காததற்காக நான் சண்டைபோட வில்லை. என் வாழ்வு முழுவதும் கரங்குவித்து எதிர்நோக்

கினேன். பொய்யான ஒன்றின்மேல் நாட்டமே என்னை இவ்வளவு நாள் களிக்க வைத்தது. இதோ இந்தத் தடவை உண்மையைக் காணக் கடவுள் அருள் புரிவார். அது யார் சித்தி, அங்கே?''

''யாரையும் காணோமேடா.''

''அந்த அறையிலே ஒரு தடவை பார்த்துவிட்டு வாயேன், சித்தி. எனக்கு என்னவோ.........''

''இல்லையேடாப்பா, ஒருத் தரும் இல்லையே!''

''எனக்குத் தெளிவாகத் தெரிகிறதே.''

''ஒன்றுமில்லையடா, ஜதின் - இதோ டாக்டர்தான் வருகிறார்.''

டாக்டர்: பாருங்கள். நீங்கள் பக்கத்திலிருந்தால் அவர் அதிகமாகப் பேசுகிறார். எத்தனை ராத்திரியாகத் தூங்காமல் இருக்கிறார்! நீங்கள் தூங்கப் போங்கள். என் ஆள் இங்கே இருப்பான்.

''வேண்டாம். சித்தி, நீ போகாதே.''

''சரி அப்பா, நான் இந்த மூலையிலேயே உட்காருகிறேன்.''

''வேண்டாமே, என் பக்கத்திலேயே உட்காரேன். உன் இந்தக் கையைக் கடைசி மட்டும் விடவே மாட்டேன். உன் கையாலேயே என்னை வளர்த்தாய். உன் கையிலிருந்தே என்னைப் பகவான் அழைத்துக்கொள்ளட்டும்.''

டாக்டர்: சரி, அப்படியே இருக்கட்டும். ஆனால் அதிகமாகப் பேசக் கூடாது. ஜதின் பாபு, அந்த மருந்து குடிக்கிற வேளை...

''வேளையா? பித்தலாட்டங்கள்! என் காலம் எல்லாம் முடிந்துவிட்டது. இப்போது எனக்கு மருந்து எதற்கு? சாகப் பயந்தவனல்ல, சித்தி, நான். யமனே எனக்கு வைத்தியம் பார்க்கிறானே! அவன் வைத்தியத்துக்கு மேலா இவருடையது! அனுப்பிவிடு இவரை! எனக்கு

யாரும் வேண்டாம். எந்த மாயமும் வேண்டாம். நீ ஒருத்தி இருந்தால் போதும்."

டாக்டர்: நீங்கள் படபடப்பாகப் பேசுவது எவ்வளவோ கெடுதல்...

"சரி; நீங்கள் போய்விடுங்கள். எரிச்சலைக் கிளப்பாதீர்கள். (டாக்டர் போகிறார்) சித்தி, டாக்டர் போய்விட்டாரா? சரி, வா. கட்டிலின்மேல் உட்கார். உன் மடியில் என் தலையை வைத்துப் படுக்கிறேன்."

"படுத்துக்கொள்ளடா, அப்பா. என் கண்ணே, தூங்கு."

"சித்தி, என்னைத் தூங்கச்சொல்லாதே! தூங்கவேண்டுமென்றால் என் தூக்கம் அப்புறம் கலையவே கலையாது. இன்னும் கொஞ்சநேரம் நான் விழித்திருக்க வேண்டும். உனக்கு ஓசை கேட்கவில்லையா? இதோ வந்துவிட்டது."

* * *

"அப்பா, ஐதீன். கண்ணைத் திறந்து பார். இதோ வந்திருக்கிறளே!"

"யார் வந்துவிட்டது? கனு!"

"கனு இல்லையடா; மணியும் உன் மாமனும் வந்திருக்கிறர்களடா."

"நீ யார்?"

"தெரியவில்லையா? உன் மணிடா இவள்."

"மணி! அந்தக் கதவு திறந்துவிட்டதோ?"

"எல்லாம் திறந்துவிட்டதடா, என் செல்வமே!"

"இல்லை, சித்தி, கால்மேல் இருப்பது கம்பளி இல்லை. இல்லை, அது மாயம். வெறும் பொய் அது."

"கம்பளி இல்லையடா, ஐதீன். மணிதாண்டா, உன் கால்மேல் கிடக்கிறள். தலைமேல் கைவைத்து அவளை ஆசீர்வாதம் செய். அப்படி அழாதேடியம்மா! அழ வேண்டிய வேளை பின்னல் வருகிறது. கொஞ்சம் அழாமல் இரு.

5. பாட்டையின் கதை

நான் ஒரு பாட்டை. ரிஷி சாபத்தால் அகலிகை கல்லாய்ச் சமைந்தாள்; நானும் யார் சாபத்தினாலோதான் நீள நெடும்பாதையாக மாறிவிட்டேன். மலைப்பாம்பைப் போல் வளைந்து வளைந்து காடு மலையெல்லாம் கடந்து, இருண்ட மரநிழலிலும் வெட்டவெளியினுள்ளும் புகுந்து, ஊர் ஊராக, நாடு நாடாகச் சுற்றி அலைந்து பழமையானதோர் ஜடப்பொருள்போல் இங்கு விழுந்துகிடக்கிறேன். பொறுமையுடன் புழுதிப் படுக்கையில் புரண்டு சாபம் தீரும் காலத்தை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேன். நான் நகராமல் ஒரே இடத்தில் இருந்தாலும், உண்மையில் எனக்கு ஏது ஓய்வு? கடினம் பாய்ந்த என் உடல்மீது பசும்புல் காண்பது அரிது. ஒரு சின்னஞ்சிறு காட்டுப் பூகூட என் இதயத்தின்மீது மலரவில்லையே! பேசும் சக்தி எனக்கில்லை. ஆனால் எல்லாவற்றையும் குருட்டுத்தனமாக உணர்ந்துமட்டும் வருகிறேன். இரவும் பகலும் என் மேல் படும் காலடிகளின் சத்தம், ஜடமான என் உறக்கத்திடையே லட்சக்கணக்கான கனவுகள்போல் உலவுகிறது. காலடியை உணர்வதிலிருந்து ஒருவருடைய உள்ளத்தை எளிதாக உற்றுநோக்கும் சக்தி எனக்கு உண்டு. வீட்டை நோக்கிச் செல்பவர்கள் யார், வேலைக்குப் போகிறவர்கள் யார், விழாவுக்கு விரைவோர் யார், இடுகாட்டிற்கு ஏகுவோர் யாரென்றெல்லாம் நான் அறிவேன். இன்பத்தில் வாழ்பவர்கள், ஆதரவின் நிழலில் வளருபவர்கள் இவர்கள் என்மீது ஒற்றிச்செல்லும் பாதபரிசம் யாவும் என் வரைக்கும் அழியாச் சித்திரங்கள். அந்தக் காலடி வைப்பு என்னுள் நம்பிக்கை வித்தை ஊன்றுகிறது. அதிலிருந்து இளங்கொடி வளர்ந்து மலர்வதுபோல எனக்குத் தோன்றும். வீடற்றோர், அகதிகள் இவர்களின் நடையில்

உற்சாகமும் இல்லை; ஒரு நோக்கமும் இல்லை. வலது இடது என்பது இவர்கள் கால்வைப்பிலே இல்லை. நடந்தால்தான் என்ன, நின்றால்தான் என்ன என்று சொல்வதுபோல் இருக்கும். இவர்கள் நடந்துசெல்வதனால் என்மீது இருக்கும் வறண்ட புழுதி வறட்சி அடைகிறது.

உலகத்து விஷயங்கள் என் செவிக்கு முழுவதும் எட்டுவதில்லை. இன்றுவரை நூற்றுக்கணக்கான வருஷங்களாக லட்சக்கணக்கான ஜனங்களின் கூத்தும் களிப்பும் கேட்டிருக்கிறேன். அவை யாவும் சில கணமே. மிகுதியைக் கேட்க நான் ஆவலுடன் செவி சாய்க்கும் போது வழிப்போக்கர்கள் மறைந்தே விடுகின்றனர். இந்த மாதிரி எத்தனை அரைகுறையான கதைகளும் பாட்டுக்களும் தூசியோடு தூசியாகப் போயினவோ, அவை யாருக்குத் தெரியும்! அதோ கேளுங்கள், ஒருவன் பாடுகிறான்: 'எவ்வளவு சொன்னாலும், மனத்திலுள்ளதைக் கூற முடியவில்லையே'— இப்படிப் பாடிக்கொண்டே போகிறான். "ஆகா! யாரோ நீ? கொஞ்சம் நில்! மீதி அடியையும் பாடிவிட்டுப் போ நான் முழுவதையும் கேட்டு ஆனந்திக்கிறேன்!..." என்றேன். எங்கே, அவன் நின்றால் தானே! பாடிக்கொண்டே போய்விட்டான். கடைசிச் சரணம் காதில் விழவே இல்லை. இந்த ஓர் அடிமட்டும் நள்ளிரவு தொடங்கியதும் என் அந்தரங்கத்துள் ஒலித்துக்கொண்டே இருக்கும். 'எவ்வளவு சொன்னாலும்...' போனவன் எவனோ? போக்கிடம் எனக்கு என்ன தெரியும்? 'கூற முடியாத வார்த்தையை ஒருவேளை தன் காதலியிடம் சொல்லத்தான் போகிறானோ! அவள் இன்முகம் காட்டும்போதாவது மனத்தில் உள்ளதை அவன் சொல்லுவானோ? அப்படித் தன் ஆருயிர்க் காதலியைச் சந்தித்த பிறகும்,'எவ்வளவு சொன்னாலும் மனத்திலுள்ளதைக் கூறமுடியவில்லையே' என்று பாடியவாறு திரும்புவானோ?' இவ்வாறு பாவனைகள் என்னுள் செல்லும்.

உலகின் அழிவோ, அதன் நிலையான தன்மையோ எவ்வாறு இருக்கும் என்பதை நான் அறியேன். ஓய் வின்றி எத்தனையோ கால்களின் அடையாளங்கள் என் மீது படிகின்றன. அவற்றுள் ஏதாவது ஒன்றைமட்டும் என்னல் எப்படி நிரந்தரமாகப் பிடித்து வைத்துக்கொள்ள முடியும்...? புதியன புகுந்தவுடன பழையன மறைந்து விடுகின்றன. சென்ற எதுவும் பின்னல் தன் குறி ஒன்றை யும் விட்டுச் செல்லவில்லை. அப்படித்தான் தலைச்சுமையி லிருந்து ஏதாவது விட்டுச் சென்றாலும் பின்னல் வரும் ஆயிரக்கணக்கான அடிச்சுவட்டின் கீழ் அது புழுதியுள் புகுந்துவிடும். என்மேல் ஊர்ந்த புண்ணியவான்கள் விட்டுச்சென்ற அழியா வித்துக்களே என் மண்ணில் கலந்து குருத்துவிட்டு ஓங்கி வளர்ந்து இருமருங்கிலும் தண்ணிழலைப் பரப்பி வழியில் போவோர்க்கு உதவிபுரியும் மரங்களாகத் திகழ்கின்றன.

நான் யாருடைய இலக்கும் அல்ல. அவரவர் தம் பலனை எய்துவதற்குச் சித்தமாக நிற்கும் வெறும் வழியே நான். நான் எவருடைய உறைவிடமும் அல்ல. ஆனல் எல்லோரையும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத் திற்குக் கொண்டு சேர்ப்பதே என் வேலை. நிரந்தரமாக என் மேல் யாரும் நிற்பதில்லை. அவர்கள் ஏனே நிற்ப தில்லை என்பதே எனக்குள்ள துயர். தொலைவில் என்னைத் திட்டுகிறார்களே ஒழிய வழித்துணையாகி வீட்டு வாசல் வரைக்கும் கொண்டுவிடுகிறேனே என்று எள்ளளவாகிலும் நன்றி பாராட்டுகிறார்களா? வீட்டுக்குப் போய்க் களைப்பாறுகிறார்கள்; பிரிந்தவரோடு கூடிப் பேசி மகிழ்கிறார்கள். ஆனல் என்மேல் களைப்பின் சுமையைத் தான் போடுகிறார்கள். என்னை வெறுக்கத்தான் செய் கிறார்கள். "அப்பா, மாளாத வழியாயிருக்கிறதே!" என்கி ருர்கள். என்மேல் ஆசை கொள்வார் இந்த அவனியில் இல்லையே! வீடுகளிலிருந்து வரும் மெல்லிய சிரிப்பின்

அலைகள் சிறிது நேரமே என் செவியில் அமுதைப் பாய்ச்சும். அதை நீண்ட நேரம் செவியாரக் கேட்கும் பாக்கியந்தான் இந்தப் பாழும் பாட்டைக்கு இல்லையே!

ஒரொரு சமயம் அதுவும் கிடைக்கும். சிறுவர் குதூகலமாகக் கூச்சலிட்டுக்கொண்டே என்னிடம் விளையாட வருவார்கள். வீட்டினுள் திகழும் இன்பத்தின் வாடையை என்னிடம் கொண்டுவருவார்கள். அன்னையின் அன்பும், தந்தையின் ஆசியும் அவர்களுடன் வெளியேறிப் பாதையின் நடுவேயும் வீட்டு நினைவை எழுப்பும். என் புழுதிமேல் பற்றுடையவர்கள் இந்தக் குழந்தைகளே. சிற்றில் அமைத்து விளையாடுகிறார்கள். என்னை இவர்கள் தொட்டுப் பூசிக்கொள்ளும்போது இன்பத்தால் என் உள்ளம் சிலிர்க்கிறது. என்னுடன் உறவு கொண்டாடும் கபடமற்ற சிறு உள்ளங்கள் இவை. ஐயோ! என் தலை எழுத்தே! இவ்வளவு அன்பைப் பெற்றும் என் ஆசையை அவர்களுக்குத் தெரிவிக்க முடியவில்லையே! நான் ஊமைப்பாதை அல்லவா!

சிற்றடிகள் என்மீது படும்போது என் கடினத்தை நினைந்து வெறுத்துக்கொள்வேன். 'குழந்தைகளின் தளிரடிகள் நோவுமோ என்னவோ? என் உள்ளம் பூவின் இதழ்போல் மென்மையுடன் ஏனோ இல்லை?' என்று ஏங்குவேன்.

அன்றாடம் வழக்கமாக என்மீது செல்பவர்களை நான் அறிவேன். அவர்கள் பொருட்டு நான் காத்திருப்பது அவர்களுக்குத் தெரியாது. என் மனத்துள்ளேயே கற்பனை செய்து அவர்கள் உருவைக் காண்பேன். வெகு நாட்களுக்குமுன் இதேபோல் ஒருத்தி மெல்லிய பாதங்களை என்மேல் இருத்தி ஒவ்வொரு நாளும் பிற்டகலில் தொலைவிலிருந்து வருவாள். அவள் காலில் சிலம்பு கலீர் கலீர் என்று ஒலிக்கும். பேசுவதற்கெனப் படைக்கவில்லை கடவுள், அவள் இலவிதழை. வேறு எதற்குப்

படைத்தானோ? அந்திவானைப்போல் விரிந்த இருவிழிகள் என்னையே துயருடன் நோக்கும். இதோ இந்த ஆல மரத்தின் இடதுபுறமாக என் கிளைப்பாதை ஒன்று ஊரை நோக்கிப் பிரிகிறதே, இந்த இடத்தில்தான் அவள் உடல் தளர்ந்து உள்ளம் வெதும்பி மௌன வடிவாக நின்றுகொண் டிருப்பாள். இன்னும் யாரோ ஒருவன் வேலை முடிந்ததும் பாடிக்கொண்டே உல்லாசமாக அதே சமயம் தன் வீட்டை நோக்கி வருவான். அவன் ஒரு பக்கமும் பார்ப்பதில்லை; ஓரிடத்திலும் தயங்குவதில்லை. நேராக வீட்டு வாசலை அடைந்துதான் தான் பிடித்த பூரபி ராக ஆலாபனையை முடிப்பான். அவன் போனபின்னர் அந்தப் பெண் வந்த வழியே ஓய்ந்த நடையுடன் திரும்பு வாள். அப்புறம் இருள் உலகைக் கவிந்துகொள்ளும். அதன் குளிர்ச்சி என்மேல் படர்வதை உணர்வேன். பறவைகளின் குரல் அடங்கிவிடும். வழிப்போக்கரின் நடமாட்டமும் குறையும். காற்று எடுக்கும். மூங்கில் இலை கள் சலசலக்கும். இதைப்போல் எத்தனை நாட்கள்! தினமும் அந்தப் பேதை வந்து போவாள். இளவேனிற் காலம், ஒருநாள் பிற்பகல் மாம்பூ இணரிலிருந்து உதிரும் பருவம். இன்னோர் ஆள் வருவானே அவன் வரவில்லை. அன்று இரவு வெகுநேரம் கழித்தே அவள் வீடு சென் ருள். பனித்துளிபோல் என் புழுதி உள்ளத்தின்மீது அவள் உகுத்த இரு கண்ணீர்த்துளிகள் ஆவியாகி மறையும். அதற்கு மறுநாள் நடுப்பகல் அதே ஆலமரத் தடியில் வந்து நின்ருள் அசடி. அன்றும் அவன் வர வில்லை. இரவு வந்ததும் மெதுவாகத் திரும்பினுள். சற்று வழி நடந்ததும் அவளுக்குத் தள்ளாடியது. என் மீது சுருண்டு விழுந்தாள். முகத்தைக் கைக்குள் புதைத்து நெஞ்சுவிரிய அழத்தொடங்கினுள். 'இந்த நடு நிசியில் என்னையும் மதித்து அடைக்கலம் தேடி வருகிருயே! யாரம்மா நீ? உன்னைப் புறக்கணித்தவன் என்னைவிடக்

கல்நெஞ்சனா, மண்ணாங்கட்டியா? நீ பலதடவை அழைத்தும் திரும்பிப் பாராமல் சென்றானே! அவன் என்னைப் போல் ஊமையா! நீ நீள் வழியில் ஏங்கி எதிர்நோக்கும் ஆள் கண் இல்லாதவனா, எனக்குத்தான் இல்லையென்றால்!" என்றேன்.

அந்தப் பெண் எழுந்தாள்; நின்றாள். கண்ணைத் துடைத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினாள். வீட்டிற்குப் போய்விட்டாளோ என்னவோ? இன்றுகூட அவள் வீட்டு வேலையில் மனத்தைச் செலுத்தி தன் ஆறாத் துயரைப் போக்கிக்கொள்கிறாளோ என்னவோ? அந்தி வேளையில் வீட்டு முற்றத்தில் நிலவொளியில் வீற்றிருக்கிறாள். யாரோ கூப்பிட்டமாதிரி அவள் காதில் படுகிறது. திடுக்கிட்டு எழுந்து உள்ளே செல்கிறாள். இது என் கற்பனையே. ஆனால் அதற்குப் பிறகு இதுவரை அவளுடைய மெல்லிய காலடி என்மேல் படவில்லை.

இவ்வாறு எவ்வளவோ காலடி அரவங்கள் அடங்கிப் போயின. எல்லாவற்றையுமே நினைவில் வைத்துக் கொள்ள முடிகிறதா? அந்த மிருதுவான சதங்கை ஒலி மட்டும் இன்னும் என் இதயத்துள் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. ஆனால் நான் யாருக்காக வருத்தப்பட வேண்டும்? எத்தனையோபேர் வருகிறார்கள். எத்தனையோ பேர் போகிறார்கள்? நான் மட்டும் என்றைக்கும் இருந்து கொண்டே இருக்கிறேன்.

வெயில் என்ன காய்கிறது, அப்பா! நான் பெருமூச்சு விடும்பொழுதெல்லாம் நெருப்புப் பொறிபோல் புழுதித் திவலை நிலவானை மங்கச் செய்கிறது. ஏழை, பணக்காரன்; மூப்பு, இளமை; அழுகை, சிரிப்பு; பிறப்பு, இறப்பு; எல்லாம் என்மேல் தூசுபோல் பறந்து சென்று மறைகின்றன. ஆகவே, பாட்டைக்குச் சுகமோ துக்கமோ விருப்போ வெறுப்போ எதுவும் இல்லை. வீடு, போனதை நினைத்துப் புலம்புகிறது; நிகழ்வதைக் குறித்து யோசிக்

கிறது; வருங்காலத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறது. ஆனால் முடிவற்ற வழியான நானே ஒவ்வொரு கணமும் புதிய புதிய காலடிச் சுவடுகளை ஏந்திக்கொண்டு நிற்கிறேன். எனது மேன்மையை உணர்ந்து நிரந்தரமான சின்னத்தை என்மீது செருக்குடன் வைக்கும் வீரன் ஒருவன் இருக்கிறானா? இதோ நீ காற்றில் பெருமூச்சு விட்டுச் செல்கிறாயே! அது உனக்குப் பின்னால் நின்று உன்னை நினைத்துக்கொண்டிருக்குமா? புதிதாக வரும் பாட்டைசாரியின் அநுதாபத்தையும் கண்ணீரையும் பெற முடியுமா? காற்று எங்கேயாவது ஒரே இடத்தில் நிலைக்குமா? ஊஹூம்... வீண் முயற்சி. எதையுமே நான் நிலைத்திருக்க விடுவதில்லை. நான் மட்டும் இங்கே என்றென்றும் விழுந்து கிடக்கிறேன்; வெறும் பாதைதான் நான்!

6. கர்ம பலன்

[அன்று சதீசனின் பெரியம்மா சுகுமாரியும், பெரியப்பா சசதர் பாபுவும் வந்திருக்கிறார்கள். சதீசனின் தாய் விதுமுகி அவர்களை வரவேற்பதில் கவனமாக இருக்கிறாள்.]

விது : வா அக்கா, வா உட்கார். ஏது! அத்திம்பேர் கூட வந்திருக்கிறார்போல் இருக்கிறதே! அக்கா வராவிட்டால் உங்களைப் பார்க்க முடியுமா!

சச : இதிலிருந்தே உனக்குத் தெரியவில்லையா, உன் அக்காவுக்கு எவ்வளவு அடங்கியிருக்கிறேன் என்று! இராப்பகலாக என் மேலேயேதான் அவளுக்குக் கண்.

சுகு : ஆமாம்! இந்தமாதிரி மணியை வீட்டில் வைத்துக்கொண்டு தூங்க வேறே முடியுமா!

விது : குறட்டை அதிகமாக விடுகிறாரா?

சுகு :(சதீசன் வருவதைப் பார்த்து) சதிச்! சீச்சி! என்ன துணியடா கட்டிக்கொண்டிருக்கிறாய்! இப்படியே தான் பள்ளிக்கூடம் போகிறாயோ! விது, நான் அவனுக்கு வாங்கிக்கொடுத்தேனே, அந்த நிஜார் எங்கே?

விது : அதை என்றைக்கோ கிழித்துப் போட்டாச்சு!

சுகு : கிழியத்தான் கிழியும். குழந்தைக்கு ஒரு சொக்காய் எத்தனை நாள்தான் தாங்கும்! அது சரி, புதிதாகத் தைக்கிறதுதானே? உங்கள் வீட்டில் என்னவோ எல்லாம் தலைகீழ்ப் பாடந்தான்.

விது : உனக்குத்தான் தெரியுமே, அக்கா, சதீசனின் உடம்பில் நாகரிக உடையைப் பார்த்தாலே அவர் சீறி விழுகிறார். நான் இராவிட்டால் தம் பிள்ளைக்குக்கோவணத்தையும், தோளில் சவுக்கத்தையும் போட்டு அனுப்பியிருப்பார் பள்ளிக்கூடத்துக்கு! அடியம்மா! இதெல்லாம் எப்படித்தான் பிடிக்கிறதோ, அவருக்கு!

சுகு : இதென்ன விசித்திரமடி! ஒரே பிள்ளை - அவனை அழகாகச் சிங்காரித்துப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப இஷ்டம் இராதா? மன்மதபாபுபோல் ஒரு தகப்பனை நான் கண்டதே இல்லை. சதிச், நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. நீ எங்கள் வீட்டுக்கு வா. நான் ராம்ஸே கடையிலிருந்து உனக்கு ஒரு சூட் வரவழைக்கிறேன். பாவம், அவனும் குழந்தைதானே! ஆசையாக இருக்குமோ இல்லையோ!

சதீசன் : ஒரு சூட் இருந்தால் போதுமா, பெரியம்மா! பாதுடி பாபுவின் பிள்ளை என்கூடப் படிக்கிறான் - என்னை அவர்கள் வீட்டிலே பிங் - பாங் விளையாடக் கூப்பிட்டான். அங்கே போக நல்ல வெல்வெட் சூட் ஒன்று தை.

சச : அந்தமாதிரி இடங்களுக்கெல்லாம் கூப்பிட்டால்கூட நீ போகக்கூடாது, சதிச்!

சுகு : சரி சரி, பேச ஆரம்பித்துவிட்டீர்களோ இல்லையோ! உங்களைப்போல் வயதானதும்—

சச: அப்போது புத்தி சொல்ல வேறே ஆள் இருப்பாள். கிழப் பெரியப்பாவின் உபதேசத்தைக் கேட்கப் பொழுது இராது.

சுகு: போதுமே! உங்களுக்குப் புத்தி சொல்ல ஓர் ஆள்மட்டும் இராமல் இருக்கவேண்டுமே! தெரியுமே நீங்கள் படுகிற பாடெல்லாம்!

சச: அதையெல்லாம் பேசி என்ன லாபம்! நினைத்துக்கொண்டாலே போதும்.

சதீசன்: (உள்பக்கம் பார்த்து) வேண்டாம்! நானே வருகிறேன். இங்கே கொண்டுவராதே! (போகிறுன்.)

சுகு: சதிசன் எங்கே அவசரமாக ஓடுகிறுன், விது?

விது: தட்டிலே அவனுக்கு டிபன் கொண்டுவந்தாளோ இல்லையோ, அதுதான். உங்கள் எதிரே சாப்பிட வெட்கம்.

சுகு: பாவம், வெட்கமாய்த்தான் இருக்கும் - அடே சதிச்! கேளடா. உன் பெரியப்பா பேலெட் ஹோட்டலில் ஐஸ்கிரீம் வாங்கித் தருவார்-போ அவரோடு; அழைத்துக் கொண்டு போங்களேன்! பாவம், சின்னவன்.

சதீசன்: பெரியம்மா, எந்தமாதிரி உடுத்துக்கொண்டு போகலாம்?

விது: உன் ஜிப்பா இருக்கிறதே!

சதீசன்: அது நன்றுக இராது.

சுகு: என்னதான் சொல்லுவது? அந்த மட்டும் தகப்பனுரைக் கொண்டுவரவில்லையே பிள்ளையும்! ஜிப்பாவைப் பார்த்தால் சமையற்காரப் பையன், இல்லாவிட்டால் கூத்துக்காரனைப்போலவேதான் இருக்கும்! அது சரியான உடுப்பாகாது.

சச: இதெல்லாம்—

சுகு: மெல்லப் பேசவேண்டுமோ! ஏன்? யாருக்குப் பயப்படவேண்டும்? மன்மதபாபு அவர் இஷ்டம் போல்

பிள்ளையை வளர்க்கலாம்; நாங்கள் வாயைத் திறக்கக் கூடாதோ!

சச : அட இழவே! பேசவேண்டாம் என்று சொல்ல வில்லையே! சதிசன் எதிரிலேயே இந்த ஆலோசனை......

சுரு : சரி சரி, இப்போது அவனைப் பேலெட் ஹோட்டலுக்கு அழைத்துக்கொண்டு போங்கள்.

சதீசன் : மாட்டேன், பெரியம்மா! ஜிப்பாவைப் போட்டுக்கொண்டு நான் போகமாட்டேன், அங்கே யெல்லாம்.

சுரு : இதோ வருகிறாரே, மன்மத பாபுவே! சதிசனைப் பிடித்து வாட்டி எடுத்துவிடுவார், பார், பாவம்; அப்பா திட்டுகிற திட்டில் அவனுக்குச் சற்று நேரங்கூட மனநிம் மதி இல்லை. வாடா சதிச்! நாம் போகலாம். (போகிறாள்.)

[மன்மதபாபு வருகிறார்.]

விது : சதிசன் கொஞ்ச நாளாகக் கடிகாரம், கடிகாரம் என்று என்னை அரித்தான்—அக்கா அவனுக்கு வெள்ளிக் கடிகாரம் ஒன்று கொடுத்தாள். நான், 'கேட்டால் உங்களுக்குக் கோபம் வருமே!'' என்றேன். (போகிறாள்.)

மன் : சொல்லியிருந்தால் மட்டும் என்ன! சசதர், நீ அந்தக் கடிகாரத்தை எடுத்துக்கொண்டு போய்விடு.

சச : நல்ல ஆள்தான் நீ! நான் எடுத்துக்கொண்டு போகிறேன்; சரி. கடைசியில் வீட்டில் யார் பதில் சொல்வது?

மன் : இல்லை, சசதர், வேடிக்கை இல்லை. இதெல் லாம் எனக்குப் பிடிக்கவில்லை.

சச : பிடிக்காவிட்டாலும் பொறுத்துக்கொள்ள வேண்டுமோ இல்லையோ! குடும்பத்தில் நீ ஒருத்தன்தானா இருக்கிறாய்?

மன்: என் விஷயமானால் பொறுத்துக்கொண்டு விடுவேன். என் கண்ணெதிரே என் பிள்ளையைக் குட்டிச்

சுவராய் அடிக்க முடியாது. உதை மாத்திரம் வாங்கியோ, இல்லை, உதை வாங்குவதற்கு முன்னாலேயோ தன் எண்ணத்தையெல்லாம் தீர்த்துக்கொள்ளும் பிள்ளை ஒரு காலும் உருப்படாது. ஆசையை அடக்கத் தெரியாத பிள்ளை சுகத்தை அநுபவிக்க முடியாது. பொறுமையாக இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். கடிகாரம், செயின் எல்லாம் என்னால் செய்து தரமுடியாது!

சச: அது நல்லதுதான். நீ இஷ்டப்பட்டால்மட்டும் எல்லாம் நடந்துவிடுமா? எல்லாருக்குமே உன் குணம் இருந்துவிட்டால் பரவாயில்லையே. அது எப்போது இல்லையோ, நீ நல்லது செய்தால்கூட அது நிறைவேறாது. பெண்களின் இஷ்டத்துக்குக் குறுக்கே போனால் எல்லாம் தடங்கல்தான். அதைக்காட்டிலும் ஒதுங்கிப் போனாலே காரியம் பலிக்கும். காற்று எதிராக வீசினால் பாய்மரத்தை ஓரமாக வைக்கவேண்டும்; இல்லாவிட்டால் கப்பல் போகாது!

மன்: இதனால்தான் உன் வீட்டுக்காரியின் பேச்சுக்கெல்லாம் தலையாட்டுகிறாயா! அட கோழை!

சச: உன்னைப்போல அவ்வளவு துணிச்சல் இல்லையப்பா எனக்கு! சம்சாரத்தில் இருபத்துநாலு மணி நேரமும் நாம் அடிமைபோல் இருக்கிறோமே; வீட்டுக்காரிக்குப் பயப்படாமல் வேறு யாருக்குப் பயப்படவேண்டும்? சொந்த மனைவியிடமா வீரத்தையெல்லாம் காட்டுவது? அடித்தாலும் கஷ்டம்; அடி வாங்கினாலும் கஷ்டம். அதைவிட வாதம் செய்யும்போது வீட்டுக்காரியின் யோசனையை ஏற்றுக்கொண்டு, வேலை செய்யும்போது தன் எண்ணப்படி செய்பவன்தான் புத்திசாலி. பிடிவாதத்தால் எத்தனையோ சங்கடங்கள் நேரும்.

மன்: அதிக நாள் ஜீவிக்கிறதானால், நிதானமாக உன் யோசனைப்படி நடக்கலாம். ஆனால் நமக்குத்தான் அற்பாயுசாயிற்றே!

சு: அதனால்தான் சொல்கிறேன், நன்றாக யோசித்து நடக்கவேண்டும் என்று. கல் குறுக்கிட்டால், அதைச் சுற்றிக்கொண்டு போகாமல், தாண்டிச் செல்பவன்தான் நேரங்கழித்துச் செல்வான். ஆனால் உன்னிடம் இதையெல்லாம் சொல்வது வீண். தினசரி இடிபட்டும் உறைக்காத உனக்கு என் உபதேசமா ஏறப்போகிறது! பெண்டாட்டி ஒருத்தி இருக்கிறாள். அவளுக்கு ஓர் அதிகாரமும் இல்லை என்ற நினைவில் இருக்கிறாய்—ஆனால் அவள் இருக்கிறாள் என்பதில் உனக்குச் சந்தேகம் இருக்கக் காரணமே இல்லை.

* * *

['தாம்பத்ய கலஹேசைவ பஹ்பாடம்பே லகு க்ரியா'—அதாவது, புருஷன், மனைவி இவர்களின் சச்சரவு, பிரமாதமாக ஆரம்பித்துக் கடைசியில் ஒன்றுமில்லாமல் போய்விடும்' என்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது.

மன்மத பாபுவுக்கும் அவர் மனைவிக்கும் இடையே நடக்கும் வாதப்பிரதிவாதம் சண்டையே. அதற்கு ஆரம்பமும் பிரமாதமாக இராது; சுலபமாகவும் முடியாது. ஆடுகள் ஒன்றோடொன்று முட்டிக்கொள்வதுகூட அதற்கு ஈடாகாது.]

மன்: உன் பிள்ளைக்கு வெள்ளைக்கார உடுப்பெல்லாம் போடுவது எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

விது: இஷ்டமெல்லாம் உங்கள் ஒருத்தருடையதுதானா! இந்தக் காலத்திலே எல்லாருந்தான் தங்கள் பிள்ளைகளைத் துரைபோலச் சிங்காரிக்கிறார்கள்!

மன்: (சிரித்து) எல்லாரையும்போல் இருக்க வேண்டும் என்றால் என்னை மட்டும் ஏன் விவாகம் செய்து கொண்டாய்?

விது: நீங்கள் உங்கள் இஷ்டம்போல் நடக்கிறதென்ருல் என்னை ஏன் கல்யாணம் பண்ணிக்கொண்டீர்களாம்!

மன்: என் இஷ்டப்படி நடக்கிறதற்குக்கூட இன்னோர் ஆள் வேண்டியிருக்கிறதே; அதனுல்தான்.

விது: தன் சுமையைத் தூக்கக் கழுதை வேண்டியிருக்கிறதாம் வண்ணுனுக்கு! ஆனுல் நானென்னவோ....

மன்: (நாக்கைக் கடித்துக்கொண்டே) ராம, ராம! நீ என் சம்சாரப் பாலை வனத்தின் அரபிக்குதிரைதான்! அதிருக்கட்டும்; உன் பிள்ளையைமட்டும் துரையாக்கி விடாதே!

விது: ஏன் கூடாது? அவனை நாட்டுப்புறத்து எட்டனுக்க வேண்டுமா?

[இதைச் சொல்லிவிட்டு விதுமுகி அறையைவிட்டு வெளியே செல்கிருள். விதுவின் விதவை ஓரகத்தி அடுத்த அறைக்குள் இருந்தபடி இதைக் கேட்டுப் பெருமூச்சு விடுகிருள்.]

* * *

மன்: அதென்னடி அது! உன் பிள்ளைக்கு என்ன பூசியிருக்கிருய்?

விது: மூர்ச்சை போட்டு விழவேண்டாம். கொஞ்சம் ஸெண்ட்தான். அதுவும் சீமைச்சரக்கல்ல. உங்களுக்குப் பிடித்த சுதேசி!

மன்: அடிக்கடி சொல்கிறேனே இந்தமாதிரி வீண் ஆடம்பரமெல்லாம் அவனுக்குப் பழக்கம் பண்ணுதேயேன்!

விது: சரி, உங்களுக்கு இஷ்டமானுல் நாளையிலிருந்து அவனுக்கு விளக்கெண்ணெயையோ மண்ணெண்ணெயையோ பூசட்டுமா!

மன்: அதுவும் வீண் செலவுதான். வீண் டம்பங்களையெல்லாம் எதற்கு நியாகப் பழக்கம் செய்கிருய்?

விளக்கெண்ணெயும் மண்ணெண்ணெயுங்கூட என் வரைக்கும் வீண் தான்.

விது: உங்களுக்கு எது அவசியமோ எனக்குத் தெரியாது. ஆரம்பத்திலேயே தடை செய்யத்தான் வேண்டுமோ ?

மன்: உன்னை நிறுத்தினால் சச்சரவே நின்றுபோய் விடுமே! இவ்வளவு காலமாகப் பழகிவிட்டுத் திடுமென்று இந்த வயதில் நிறுத்திக்கொண்டால் இருக்க முடியாது! எப்படியோ, முதலிலேயே சொல்லிவிட்டேன். உன் பிள்ளையை நவாபானாலும், ஆக்கு; துரையானாலும் ஆக்கு; இல்லை இரண்டையும் கலந்து எதுவானாலும் செய். அதற்கெல்லாம் செலவு செய்ய என்றால் ஆகாது. நான் செத்தபிறகு அவனுக்கு என்ன கிடைக்குமோ, அது அவனுக்குப் போதவே போதாது.

விது: அதுவும் எனக்குத் தெரியும். உங்கள் பணத்தை நம்பினால், உங்கள் பிள்ளையைக் கோவணத் துக்குத்தான் பழக்கியிருக்கவேண்டும்!

[விதுவின் இந்த ஏளனப் பேச்சு மன்மத பாபுவை உள்ளூறப் பொத்தினாலும் அவர் சமாளித்துக்கொள் கிறார்.]

மன்: உன் அக்காள் புருஷனைத்தானே நம்பி இருக் கிறாய்! அவனுக்குப் பிள்ளை குட்டி இல்லை. உன் பிள்ளைக் குத்தான் சொத்தையெல்லாம் எழுதிவைக்கப் போகிறான்! அதற்காகத்தானே உன் பிள்ளையை நாகரிகம் கற்றுக் கொள்ள அவனிடம் அனுப்புகிறாய்? நான் ஏழைதான்! அவன் பணத்துக்கு ஏங்கி நீ நிற்பதுதான் எனக்குத் தலை இறக்கமாக இருக்கிறது.

[இது வெகு நாட்களாகவே மன்மத பாபுவுக்குத் தெரியும். ஆனால் நன்றாக இராதே என்றெண்ணி இது வரை அதைப்பற்றிச் சொல்லவில்லை. தன் ரகசிய எண்ணம் தன் புருஷனுக்குத் தெரியாது என்று விது

நினைத்துக்கொண் டிருந்தாள். ஏனென்றால், மனைவிமாரின் மனத்தைப் புரிந்துகொள்ளும் விஷயத்தில் புருஷர்கள் மூடர்கள்தாமே? ஆனால் மன்மத பாபு தன் எண்ணத்தைத் தெரிந்துகொண்டுவிட்டது விதுவுக்கு உள்ளூற வேதனையைத் தருகிறது.]

விது: (முகம் சிவக்க) பிள்ளையை அவன் பெரியப்பா வீட்டுக்கு அனுப்புவதுகூடச் சகிக்காத ஒரு மனுஷர் இருப்பார் என்று நான் எண்ணவில்லை.

விதவை ஓரகத்தி: (உள்ளே நுழைந்து) அடியம்மா! நீ மிகவும் புண்ணியம் செய்தவள்தானடி. பதினேழு வருஷமாகப் பார்க்கிறேன். இன்னும் ஓயவில்லையா உங்கள் பேச்சு! ராத்திரி வேலை போதாதே என்று பகலில்கூடக் கிச்சுமாச்சென்று ஆரம்பித்துவிட்டீர்களே! உங்கள் நாக்கின் நுனியில் எங்கேயிருந்துதான் இவ்வளவு இனிமை வருகிறதோ! கோபித்துக்கொள்ளாதே, மன்மத்! உங்கள் ரசமான பேச்சுக்குக் குறுக்கே வரவில்லை. இரண்டே நிமிஷம், விதுவிடம் தையல் தினுசு எப்படி இருக்கிறது என்று காட்டிவிட்டுப் போகவந்தேன்.

*   *   *

சதீசன்: பெரியம்மா!

விதவைப் பெரியம்மா: ஏண்டா அப்பா?

சதீசன்: இன்றைக்குப் பாதுடி வீட்டுப் பிள்ளையை அம்மா டீ-பார்ட்டிக்குக் கூப்பிட்டிருக்கிறாள். அங்கே திடுமென்று வந்து வைக்காதே!

வி. பெ: நான் அங்கே எதுக்கடா வரப்போகிறேன்!

சதீசன்: அங்கே வர இந்த உடுப்புப் போதாது... அன்றைக்கு......

வி. பெ: சதீசா, உனக்கு எதுக்கடா, அப்பா, பயம்! நான் இங்கேயே இருக்கிறேன். உன் சிநேகிதன் டீ சாப்பிடுகிறவரைக்கும் நான் வெளியிலேயே வரவில்லை.

சதீசன்: பெரியம்மா, இந்த அறையிலேதான் அவனுக்குப் பார்ட்டி கொடுக்கலாம் என்றிருக்கிறேன். நம் வீட்டிலே எதற்குமே இடம் போதாது. நிறையப் பேர் இருக்கிறோம். டீ பார்ட்டி, விருந்துக்கெல்லாம் அறை ஒன்றுகூடக் கிடையாது. அம்மாவின் படுக்கை அறை ஒரே பெட்டியும் படுக்கையுமாகக் கிடக்கிறது. அங்கே யாரையாவது அழைத்துக்கொண்டு போவதென்றால் வெட்கமாக இருக்கிறது!

வி. பெ: என் அறையில்கூடத்தான் நிறையச் சாமான்கள்.........

சதீசன்: அவைகளையெல்லாம் இன்றைக்கு ஒரு நாள் மட்டும் வெளியே எடுத்து வைத்துக்கொள்ளேன். முக்கியமாக, இந்த அரிவாள் மணை, கூடை, மரத்தட்டு எல்லாவற்றையும் மறைவாக வைத்துக்கொள்ள வேண்டும்.

வி. பெ: எதுக்கடா, அப்பா? அதனால் என்ன வெட்கம்? அவர்கள் வீட்டிலே கறிகாய் நறுக்குவதே இல்லையா?

சதீசன்: அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் டீ சாப்பிடுகிற அறையில் இப்படி இருந்தால் அழகாக இராது. நரேன் பாதுடி பார்த்துச் சிரிப்பான். வீட்டுக்குப் போய் அவன் தங்கைகளிடம் கதையாகச் சொல்வான்.

வி.பெ: கேளேன், பிள்ளை சொல்கிறதை! அரிவாள் மணையும் கூடையும் வெகு நாளாக இங்கே இருக்கிறதுண்டு. இவைகளைப்பற்றி என்ன கதை பேசுவார்களோ? நான் கேட்டதே இல்லை.

சதீசன்: இன்னொரு காரியம் செய்யவேண்டும், பெரியம்மா! நம் நந்தனைக் கொஞ்சம் பிடித்து வைத்துக் கொள்ளவேண்டும். நான் சொன்னால் அவன் கேட்கவே

மாட்டான். அம்மணமாகத் திடுமென்று வந்து நிற்பான் அங்கே.

வி. பெ: அவனைப் பிடித்து வைத்துக்கொள் கிறேன்.—சரி—உங்க அப்பா வந்து ஏதாவது திட்டினால்?...

சதீசன்: அதைப்பற்றி முன்னாலேயே யோசனை செய் தாயிற்று. அந்தப் பெரியம்மாவிடம் சொன்னேன்: அவள் அப்பாவை விருந்துக்கு அழைத்திருக்கிறாள் அவர்கள் வீட்டில். அப்பாவுக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது.

வி. பெ: அப்பா சதீச்! நீ என்னவானாலும் செய். என் அறையில் எச்சில் துப்பல் ஏதாவது...

சதீசன்: அதெல்லாம் இராதபடி சுத்தம் செய்து விடு கிறேன்.

*　　　*　　　*

சதீசன்: இனிமேல் இந்தமாதிரி இருந்தால் நடக்காதம்மா.

விது: ஏண்டா, என்ன வந்தது?

சதீசன்: அந்தப் பழைய மோஸ்தர் நிஜார் போட்டுக் கொண்டு வெளியே போக எனக்கு வெட்கமாயிருக்கிறது. அன்று பாதுடி வீட்டில் சாயங்காலம் 'பார்ட்டி' நடந்தது. இரண்டொரு பேர் தவிர எல்லாரும் சூட் போட்டுக் கொண்டு வந்திருந்தார்கள். நான் இந்த வேஷத்தோடு அங்கே போய் அசடுபோல் நின்றுகொண்டிருந்தேன். அப்பா துணிக்காகத் தரும் பணத்தில் கௌரவமாக உடுத்துக்கொண்டமாதிரிதான்!

விது: உனக்குத் தெரியுமா, சதீச்! அவர் பிடித்தது பிடித்ததுதான்—உடை எவ்வளவு ரூபாய்க்காகும்?

சதீசன்: ஒரு மார்னிங் சூட், ஒரு லவுஞ்ஜ் சூட்: இரண்டுக்கும் கிட்டத்தட்ட நூறு ரூபாய் பிடிக்கும். சாதாரணமான சாயங்கால உடுப்பு என்றால் குறைந்தது நூற்றைம்பதாவது ஆகும்.

விது: என்னடா, இவ்வளவு ரூபாயா! இதற்கா!

சதீசன்: இதுதானே உன்னண்டை! ஒன்று பிச்சைக்காரனைப் போல இருக்கவேண்டும். பெரிய மனிதர்களோடு பழகவேண்டுமென்றால் கை இழுக்கக்கூடாது. மரியாதையைக் காத்துக்கொள்ளப் பணம் செலவு செய்யத்தான் வேண்டும். அதற்கு வழி இல்லையோ, காட்டுக்கு அனுப்பி விடுகிறதுதானே! அங்கே சூட், கோட் ஒன்றும் வேண்டியதில்லையே!

விது: அது சரி, சதீச்! உன் பெரியப்பா உன் பிறந்த நாளுக்கு ஏதாவது பரிசு தருகிறாரே: இந்தத் தடவை அப்படி நல்லதாக ஒன்று கேட்டுத் தைத்துக்கொள்ளேன். பேச்சோடு பேச்சாக உன் பெரியம்மாவின் காதில் ஒரு வார்த்தை போட்டுவைத்தாலே போதுமே!

சதீசன்: அது சுலபந்தான். ஆனால் நான் அவரிடமிருந்து பணம் வாங்கிக்கொள்வது அப்பாவுக்குத் தெரிந்துவிட்டால்?

விது: அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். (சதீசன் போகிறான்.) பாதுடியின் பெண்ணைச் சதீசனுக்குக் கொடுக்க ஏற்பாடாகிவிட்டால், நிச்சிந்தையாக இருப்பேன். பாதுடி பாரிஸ்டர். நாளுக்கு இருநூறுவது வரும்படி கிடைக்கிறது. சிறுவயது முதல் சதீசனும் அங்கே போய்வருகிறான். பெண்ணுக்கும் அப்படிக் கல்நெஞ்சில்லை; கட்டாயம் என் சதீசனைப் பிடிக்கும். சதீசன் அப்பாதான் இதையெல்லாம் யோசிக்கிறதில்லை. சொல்லப் போனால் எரிந்து விழுகிறார். பிள்ளையின் வருங்காலத்தைப்பற்றி நானேதான் யோசிக்கவேண்டியிருக்கிறது!

* * *

[மிஸ்டர் பாதுடியின் வீட்டில் டென்னிஸ் ஆடுமிடம்.]

நளினி: சதீச்! எங்கே ஓடுகிறாய்?

சதீசன்: உங்கள் வீட்டில் இன்று டென்னிஸ் பார்ட்டி என்று தெரியாது. டென்னிஸ் சூட் போட்டுக்கொண்டு வரவில்லை.

நளினி: எல்லா மாடும் ஒரே மாதிரி இருக்குமா! உன்னை ஒரிஜனல் (தனி ரகம்) என்று சொல்லலாம். சரி; உனக்கு நான் ஏற்பாடு செய்கிறேன். (அங்கே இருக்கும் இன்னொரு நாகரிக புருஷரைப் பார்த்து) மிஸ்டர் நந்தி, ஒரு வேண்டு கோள்! இவருக்கு டென்னிஸ் சூட் ஒன்று வேண்டும்.

நந்தி: வேண்டுகோளென்ன! கட்டளை என்றாலே சரி. இதோ காத்திருக்கிறேனே! நீங்கள்வக்காலத்துக் கொடுத்தால் கொலை, மாயம், வீட்டைக்கொளுத்தும் குற்றங்களைக் கூட மன்னித்துவிடுவேன். டென்னிஸ் சூட் போட்டுக் கொண்டு வராததற்காக இவ்வளவு கருணை இருக்குமென்றால், என்னுடையதைக் கொடுத்துவிட்டு அவருடைய... இதன் பேரென்ன, சதீச்பாபு?... கதம்ப சூட் என்று வைத்துக்கொள்வோமே... நான் சதீச் பாபுவின் இந்தக் கதம்ப சூட்டையே போட்டுக்கொண்டு தினமும் வருவேன். வானிலுள்ள சூரிய, சந்திராதிகள் என்னை உற்று நோக்கினாலும் எனக்கு வெட்கமில்லை, சதீச் பாபு, இதைத் தர உங்களுக்கு ஆட்சேபம் இருந்தால் உங்கள் தையல்காரன் விலாசம் தாருங்கள். நாகரிக உடுப்பைவிடப் பாதுடியின் தையை எவ்வளவோ உயர்ந்தது!

நளினி: சதீச்! கேட்டுக்கொள். நாகரிகம் மட்டுமல்ல; இனிமையாகப் பேசும் பாணியைக்கூட இவரிடமிருந்து கற்றுக்கொள்ளலாம். இவரைப்போல லட்சிய புருஷர் அகப்படவே மாட்டார்கள். இங்கிலாந்தில் பிரபுக்களைத் தவிர வேறு யாருடனும் பேசமாட்டாராம்—மிஸ்டர் நந்தி! நீங்கள் இங்கிலாந்தில் இருந்தபோது கூடப் பழகிய வங்காளிகள் யார் யார்?

நந்தி: நான் அங்கே வங்காளிகளுடன் பழகுவதில்லை.

நளினி: கேட்டாயா, சதீச்? உண்மையில், நாகரிகமாக இருக்கவேண்டுமானல் எவ்வளவு உஷாராக இருக்க வேண்டும், பார்த்தாயா! ஒருவேளை உன்னுல் முடியலாம், பிரயத்தனம் செய்தால். டென்னிஸ் சூட் சம்பந்தமாக உனக்கு இருக்கும் நுண்ணறிவைக் கொண்டு அது எனக்குத் தெரிகிறது. (வேறிடம் செல்கிருள்.)

சதீசன். (பெருமூச்செறிந்து) இத்தனை நாளாக நெல்லி (நளினி)யைப் புரிந்துகொள்ள முடியவில்லை. என்னைப் பார்த்து உள்ளூறச் சிரிக்கிருளோ என்னவோ! எனக்கும் ஒரே கஷ்டமாக இருக்கிறது. இங்கே வந்தால் ஒரு நாளாவது நிம்மதியாக இருக்க முடிவதில்லை. எப்போது பார்த்தாலும் டை காலருக்கு மேலே போய்விட்டதோ என்னவோ, நிஜார் முழங்காலுக்குக் கீழே நலங்கி விட்டதோ என்னவோ என்றெல்லாம் தோன்றுகிறது. என்றைக்குத்தான் நந்தியைப்போல் உடை உடுத்துக் குஷாலாக.......

நளினி: (திரும்பி வந்து) என்ன, சதீச்? இன்னும் உன் கவலை தீரவில்லையா! டென்னிஸ் சூட் இல்லை என்ற துக்கத்தால் உன் மனம் இப்படி வேதனைப்படுகிறதே! ஐயோ பாவம்! டென்னிஸ் சொக்காய் இராத இருதயத் துக்கு ஆறுதல் எங்கிருந்து வரப்போகிறது— தையல் காரன் கடையைத் தவிர!

சதீசன்: என் மனம் மட்டும் உனக்குத் தெரிந்திருந் தால் இந்த மாதிரி சொல்லமாட்டாய், நெல்லி.

நளினி: (கை கொட்டி) பலே, நந்தி காட்டியதைப் பின் பற்ற ஆரம்பித்துவிட்டாயே! இடங்கொடுத்தால் வளரும் என்று நினைக்கிறேன். வா, ஒரு கேக் சாப்பிட்டுவிட்டுப் போ. இன்மொழிகளுக்குப் பரிசாகத் தித்திப்பு!

சதீசன்: வேண்டாம், நெல்லி. நான் சாப்பிடவில்லை. எனக்கு உடம்பு ஒரு மாதிரி...

நளினி: சதீச், என் பேச்சைக் கேள். டென்னிஸ் சூட் இல்லை என்று வீணாக வருந்தி உடம்பைப் பாழாக்கிக் கொள்ளாதே. கோட்டும் நிஜாரும் உலகத்தில் முக்கியமான பொருள்கள் தாம்; சந்தேகமில்லை. ஆனால் இந்த உடம்பு இருந்தால்தானே போட்டுக்கொண்டு உலாவ முடியும்?

* * *

சச: பார், மன்மத்! சதீசனை நீ அதிகமாகக் கண்டிக்கிறாய்! இப்போது அவனை அந்த மாதிரியெல்லாம் கண்டிப்பது தவறு.

விது: சொல்லுங்களேன், அத்திம்பேரே! நான் சொல்லி அவருக்கு உறைக்கிறதா?

மன்: இரண்டு பழியா ஒரே சமயத்தில்! ஒருவர் இளகாத மனசு என்கிறார். இன்னொருத்தி புரிந்துகொள்ளத் தெரியவில்லை என்கிறாள். நான் யாரிடம் புத்தி கேட்டு நடந்துகொள்கிறேனோ அவள் சொல்வதைப் பொறுத்துக்கொள்ளத் தயார். அவள் அக்கா சொல்வதற்கும் குறுக்குச் சொல்லவில்லை.- ஆனால் அதற்காக அவள் அத்திம்பேர் முதற்கொண்டு... என்னால் சகிக்க முடியாது. என் நடத்தையில் என்ன கடுமையைக் கண்டுவிட்டீர்கள், சொல்லுங்கள்?

விது: பாவம், சதீசனுக்குக் கொஞ்சம் உடுப்புப் பைத்தியம் பிடித்திருக்கிறது. நாலு இடங்களுக்குப் போய்ப் பழகுகிறான். பழைய மோஸ்தர்...

மன்: நான் அப்படி ஒன்றும் உடுத்தச் சொல்லவில்லையே! வெள்ளைக்காரன் உடுப்பு என் கண்களுக்கு விஷம்போல் படுகிறது!. சால்வை, ஜிப்பா, கோட் போட்டுக் கொள்ளட்டுமே! அதில் என்ன தலையிறக்கம்?

சச: இதோ பார், மன்மத்! இந்த வயதில் சதீசன் தன் ஆசையைத் தீர்த்துக்கொள்ளாவிட்டால், கிழ வயசில் அதை ஒழுங்கு பண்ணிக்கொள்வது நன்றாக இருக்

குமா? இன்னும் எவ்வளவு கெட்டுப்போயிருக்குமோ! இன்னும் ஒன்று: நாம் சின்ன வயதிலிருந்து நாகரிகம் என்று கற்றுக்கொண்டு வருகிறோமே, அதை நம்மால் மீற முடியுமா!

மன்: நாகரிக புருஷனாக விரும்புகிறவன் அதற்கு வேண்டிய செலவுகளைத் தானே சம்பாதித்துக்கொள்ள வேண்டும். தவிர, உங்கள் நாகரிகம் வரும் இடத்திலிருந்து பணம் வரவில்லையே! இங்கிருந்துதானே அந்தப் பக்கம் போகிறது!

வித: உங்களால் முடியாது, அத்திம்பேரே! தேசத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டால் அவர் ஓயமாட்டார்!

சச: அப்பா மன்மத், அதெல்லாம் எனக்கும் தெரியும். ஆனால் பையன் கேட்பதையும் தராமல் இருக்க முடியுமா? சதீசன், பாரிஸ்டர் பாதுடியுடன் கலந்து பழகுகிறான். அதற்கு ஏற்ற உடை இராவிட்டால் அவனுக்கு எவ்வளவு அசௌகரியமாயிருக்கும். நான் பஜாரில் அவனுக்காக......

[வேலைக்காரன் சில உடுப்புகளுடன் வருகிறான்.]

வேலை: பாரிஸ்டர் துரை வீட்டிலிருந்து இதெல்லாம் வந்திருக்குங்க.

மன்: போடா வெளியிலே! எடுத்துக்கொண்டு போ, இதையெல்லாம்! (விதுவைப் பார்த்து) பார், சதீசன் மட்டும் இதையெல்லாம் போட்டுக்கொண்டிருப்பது என் கண்ணில் பட்டதோ வீட்டில் அவன் இருக்கக்கூடாது. 'மெஸ்' ஸுக்கு அனுப்பிவிடுவேன். அங்கே அவன் இஷ்டம் போல் திரியட்டும். (விரைவாக வெளியே போகிறார்.)

சச: இதென்ன வேடிக்கை!

வித: அத்திம்பேரே! என்ன சொல்கிறது? நான் வாழ்ந்து என்ன பலன்! சொந்தப் பிள்ளையிடம் இந்த மாதிரி எந்தத் தகப்பனாராவது இருப்பாரா?

சச: என்னிடம் அவன் நடந்துகொண்டதுகூட நன்றாக இல்லை. அஜீரணம் ஏதாவது இருக்கும். நான் சொல்வதைக் கேள்: அவனுக்கு ஒரேமாதிரியாகப் பருப்பும் சாதமும் போடாதே. அவன் என்ன சொன்னாலும், நடு நடுவே மஸாலா கலந்த சாப்பாடும் போடவேண்டும். வாய்க்கும் ருசிக்கும். அஜீர்ணமும் வராது. கொஞ்ச நாள் அவனுக்கு நன்றாகச் சாப்பாடு போடு. அப்புறம் நீ சொல்வதை அப்படியே கேட்பான். இந்த விஷயத்தில் உன் அக்கா உன்னைவிட எவ்வளவோ மடங்கு தெரிந்துகொண்டு இருக்கிறாள். (போகிறார். விது அழுகிறாள்.)

விதவை ஒரகத்தி: (உள்ளே நுழைந்து, தனக்குள்) ஒரு சமயம் சிரிப்பு, ஒரு சமயம் அழுகை! எத்தனை விதமாகக் கொஞ்சுகிறாளோ அதற்கு ஓர் எல்லை இல்லை. நன்றாயிருக்கிறது! (பெருமூச்சு விடுகிறாள்.)

* * *

நளினி: சதீச், உன்னை எதற்காகக்கூப்பிடனுப்பினேன தெரியுமா! சொல்கிறேன், கோபித்துக்கொள்ளாதே!

சதீசன்: நீ கூப்பிட்டால் கோபித்துக்கொள்ள நான் அவ்வளவு முரடனா என்ன!

நளினி: அந்தக் கதையெல்லாம் கிடக்கட்டும். எல்லாச் சமயத்திலும் நந்தியைப் பின்பற்றாதே! என் பிறந்த நாளுக்கு ஏன் இவ்வளவு விலையுயர்ந்த வஸ்துவை வாங்கிவந்தாய்?

சதீசன்: இது எந்த விஷயத்தில் உனக்கு அப்படி உயர் வாகப் படுகிறது?

நளினி: திரும்பவும் நந்தியைப்போல் பேசாதே!

சதீசன்: வேண்டுமென்றா நந்தியைப் போல் பேசுகிறேன்? அவர்மேல் பட்சபாதம்......

நளினி: அப்படியென்றால், இனிமேல் உன்னோடு பேச மாட்டேன், போ!

சதீசன்: சரி, மன்னித்துவிடு! வாயை மூடிக்கொண்டு கேட்கிறேன், இனிமேல்.

நளினி: சதீச், நந்திதான் முட்டாள்தனமாக எனக்கு விலையுயர்ந்த 'பிரேஸ்லெட்' அனுப்பினார் என்றால் நீ முழு முட்டாளாக இருக்கிறாயே! அதைவிட விலை மதிப்புள்ள ஒரு 'நெக்லேஸ்' அனுப்பியிருக்கிறாயே; எதற்கோ?

சதீ: முன் பின் தெரியாமல் ஒரு காரியத்தில் நுழைந்துவிடும் நிலை உனக்குத் தெரியாது. அதுதான் இப்படிச் சொல்கிறாய், நெல்லி.

நளினி: எனக்கு அது தெரிந்து ஆக வேண்டியது ஒன்றுமில்லை. ஆனால் அந்த 'நெக்லேஸை' நீ திருப்பி வாங்கிக்கொள்.

சதீ: திருப்பியா விடுகிறாய்?

நளினி: கட்டாயமாக. போட்டி போட்டுக்கொண்டு பெருமைக்காகக் கொடுத்த பரிசுக்கு அர்த்தமே இல்லை.

சதீ: நீ சொல்வது அநியாயம், நெல்லி.

நளினி: அநியாயமாக ஒன்றும் சொல்லவில்லை நான். நீ எனக்கு ஒரு பூச் செண்டு கொடுத்திருந்தால்கூட நான் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பேன். நீ இப்போதெல்லாம் அடிக்கடி எனக்கு விலையுயர்ந்த பொருள்களை அனுப்பி வருகிறாய். உனக்கு ஏதாவது குறை ஏற்படப் போகிறதே என்று நான் கம்மென்றிருந்தேன். ஆனால் வர வர அளவு அதிகமாகிக்கொண்டே வருகிறது. இனிமேல் நான் சும்மா இருப்பது சரியல்ல. இந்தா, பிடி, உன் 'நெக்லேஸ்.'

சதீ: வேண்டுமானால் இதை வீசி எறிந்து விடு தெருவில். ஆனால் இதை நான் வாங்கிக்கொள்ள மாட்டேன்.

நளினி: சதீச், உன்னை எனக்குச் சிறு வயதிலிருந்தே நன்றாகத் தெரியும். என்னிடம் ஒளிக்காதே. உண்மையைச் சொல்: உனக்கு நிறைய ரூபாய் கடன் இல்லையா?

சதீ: உனக்கு யார் சொன்னது? நரேந்திரனா என்ன?

நளினி: ஒருத்தரும் சொல்லவில்லை. உன் முகத்தைப் பார்த்ததுமே தெரிந்துகொண்டேன். எனக்காக ஏன் இவ்வளவு வீண் செலவு செய்கிறாய்?

சந்: இடம், ஏவல் பார்த்துத் தகுந்த ஆட்களுக்காகத் தன் உயிரைக்கூட விடுவான் மனிதன். உயிரை விடத்தான் இப்போது சந்தர்ப்பம் வாய்ப்பதில்லையே! கடன் பட்டாவது உனக்கு ஏதாவது வாங்கித் தந்தேன் என்ற சுகத்தைக்கூட அநுபவிக்கக் கூடாதா நான்? யாராலும் செய்ய முடியாததை உனக்காகச் செய்கிறேன். நெல்லி! இதிலும் நந்திபாபுவைப் பின்பற்றுகிறேன் என்றால், எனக்கு அது உள்ளூற வேதனையைத் தரும்.

நளினி: சரி. நீ செய்ய வேண்டியதைச் செய்தாயிற்று உன் தியாகத்தை ஏற்றுக்கொண்டேன். நான் தருகிறேன்: இந்தா வாங்கிக் கொள்.

சந்: அதை வாங்கிக்கொண்டுதான் ஆகவேண்டுமென்றால், அதையே சுருக்காக மாட்டிக்கொண்டு சாவது மேல்.

நளினி: எப்படி உன் கடனை அடைப்பாய்?

சந்: அம்மா தருவாள்.

நளினி: சிச்சி! எனக்காகத்தான் தன் பிள்ளை கடன் படுகிறான் என்றல்லவா அவள் எண்ணிக்கொள்வாள்?

சந்: அதெல்லாம் ஒன்றுமில்லை. அவளுக்கு என் குணம் தெரியும்.

நளினி: சரி; இன்றையிலிருந்து விலையுயர்ந்த பொருள் ஒன்றும் தருவதில்லை என்று சத்தியம் செய். அதிகமாகப் போனால் பூச் செண்டு தவிர வேறு ஒன்றும் தரக்கூடாது.

சந்: சரி, அப்படியே ஆகட்டும்.

நளினி: சரி, இப்போது உன் நந்திபாபுவின் பாடத்தை ஆரம்பி. முகஸ்துதியில் எவ்வளவு தேறியிருக்கிறாய் பார்ப்போம்.— என் காதின் நுனியைப்பற்றி என்ன சொல்ல முடியுமோ, சொல். ஐந்து நிமிஷம் தருகிறேன்.

சந்: நான் சொல்வதனால் அந்தக் காதின் நுனி சிவந்து விடுமே!

நளினி: பலே! பீடிகை நன்றாகத்தான் இருக்கிறது. போதும்! பாக்கி இன்னொரு நாள். இப்போதே காது வலிக்க ஆரம்பித்துவிட்டது.

* * *

விது: என்னைக் கோபித்துக்கொண்டாலும் சரி, வேறென்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். பையனை மட்டும் ஒன்றும் பண்ணாதீர்கள். உங்கள் காலில் விழுகிறேன். இந்தத் தடவை மட்டும் அவன் கடனைத் தீர்த்து விடுங்களேன்.

மன்: நான் எதற்குக் கோபித்துக்கொள்ளப் போகிறேன்? என் கடமையை நான்செய்துதானே தீரவேண்டும்! எத்தனையோ தரம் சதீசனுக்குச் சொல்லியாகிவிட்டது, கடன் பட்டால் அடைக்கும் பொறுப்பு என்னுடையதல்ல என்று; ஒருதரம் நான் சொன்னது சொன்னதுதான்.

விது: இப்படிச் சொன்னதை மீறாமல் நடக்கும் தர்மபுத்திரராகிவிட்டால் குடும்பம் நடக்குமா? அவனுக்கு டிபன் செலவுக்காக நீங்கள் தரும் பணத்தைப் பார்த்தால் கடன் வாங்காமல் என்ன செய்வான்?

மன்: எவ்வளவு சாத்தியமோ, அதற்குமேல் அவன் வேஷம் போட்டால் நடக்குமா — பக்கிரியானாலும் சரி பாதுஷாவானாலும் சரி?

விது: அப்படியானால் அவன் ஜெயிலுக்குப் போக வேண்டும் என்கிறீர்களா?

மன்: அவன் போவதற்கு ஒரு வழி தேடி, அதற்கு நீங்களும் ஏற்பாடு செய்தால், நான் எப்படிக் குறுக்கே நிற்பது! (போகிறார்.)

[சசதார் உள்ளே வருகிறார்.]

சச: நான் இங்கே வருவதைக் கண்டால் மன்மத

னுக்குப் பயமாக இருக்கிறது. கறுப்பு பிஜார் தயார் செய்யப் பையனின் அளவு எடுக்க இங்கே அளவை-டேப்புடன் வருவதாக நினைக்கிறான். அதனால்தான் கொஞ்ச நாளாக வரவில்லை. இன்று உன் கடிதம் கிடைத்ததும் சுகு அழுது ஆர்ப்பாட்டம் செய்து என்னை வெளியே துரத்தினாள்.

விது: அக்கா வரவில்லையா?

சச: இதோ வந்துவிடுவாள். என்ன நடந்தது?

விது: எல்லாந்தான் தெரிந்திருக்குமே! இப்போது பிள்ளையை ஜெயிலுக்கு அனுப்பாவிட்டால் அவர் மனம் நிலைக்காதுபோல் இருக்கிறது. அவன் போடுகிற உடுப்பெல்லாம் அவருக்குப் பிடிக்கவில்லை! ஜெயில் உடுப்புத்தான் நாகரிகமென்று அவருக்குத் தோன்றுகிறது.

சச: நீ என்னதான் சொல்; அவனுக்குப் புத்திசொல்ல என்னால் ஆகாது. அவன் பேச்சு எனக்குப் புரியவில்லை. நான் சொல்வது அவனுக்கு ஆகவில்லை. கடைசியில்......

விது: எனக்கு அது தெரியாதா என்ன? நீங்கள் அவர் சம்சாரமல்லவே, எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள? ஆனால், இந்த ஆபத்தை எப்படித் தீர்ப்பது?

சச: உன்னிடம் ஒன்றும்.........

விது: ஒன்றுமே இல்லை. சதீசனின் கடனைத் தீர்க்க நகைகளை எல்லாம் அடகு வைத்தாயிற்று. கையில் இந்த ஜோடி வளையல்தான் பாக்கி.

[சதீசன் வருகிறான்.]

சச: அடே சதீச்! கொஞ்சம் யோசனை பண்ணிச் செலவு செய்யக்கூடாதா? இப்போது என்ன தொல்லையில் வந்து மாட்டிக்கொண்டிருக்கிறாய் பார்.

சதீ: எனக்கு ஒன்றும் தொல்லையாகத் தோன்றவில்லையே!

சச: ஏதாவது பணம் இருக்கிறதா? ஒளிக்காமல் சொல்.

சதீ: கொஞ்சம் இருக்கிறது.

சச: எவ்வளவு?

சதீ: அபினி வாங்கப் போதும்.

விது: (அழுது) சதீச், என்னடா இது! எவ்வளவோ கஷ்டப் பட்டாயிற்று. என்னை இன்னமும் படுத்தாதேடா!

சச: சிச்சி! இந்த மாதிரியெல்லாம் தோன்றினால்கூட, அம்மாவிடம் சொல்லலாமா! அநியாயம்!

[சுகுமாரி வருகிருள்.]

விது: அக்கா, சதீசனைக் காப்பாற்றேன். என்ன பண்ணிவிடப் போகிருனே என்று பயந்து சாகிறேன். இன்றைக்கு அவன் சொன்னதைக் கேட்டால் இன்னமும் என் உடல் நடுங்குகிறது!

சுகு: என்னடி சொன்னுன்?

விது: அபினி வாங்கித் தின்னப் போகிருனும்.

சுகு: என்னது! அடே சதீச்! சத்தியமாகச் சொல். இந்தமாதிரி மனசிலேகூட நினைக்கக்கூடாது. என்ன சும்மா இருக்கிருய்? உங்கம்மா, பெரியம்மா சொல்வதைக் கேளடா!

சதீ: ஜெயிலுக்குப் போய்க் கஷ்டப்படுவதைவிட, இந்த வெட்கக்கேட்டை வெளியிலேயே தீர்த்துக் கொண்டுவிட்டால் தேவலை, இல்லையா!

சுகு: நாங்கள் இருக்கும்போது உன்னை யாரடா ஜெயிலுக்கு இழுத்துக்கொண்டு போவார்கள்?

சதீ: கடன்காரன்தான்.

சுகு: பார்க்கலாமே, அவன் எவ்வளவு பெரியவன் என்றுதான்! (சசதரரைப் பார்த்து) அந்தப் பணத்தை வீசி எறியுங்களேன்! பாவம், சின்னவன். அவன் மனசை எதற்காக அலையவைக்கவேண்டும்!

சச: பணத்தை வீசி எறிந்துவிடலாம். ஆனல் மன்மதன் என் தலைமேலே செங்கல்லை வீசி எறிவானே!

சதீ: பெரியப்பா, கல் உங்கள் தலைமேல் விழாது

என் தலையில்தான் விழும். முதலாவது, பரிட்சையில் தவறிவிட்டேன். தவிரக் கடன் வேறு. அதையும் தவிர ஜெயிலுக்குப் போக நல்ல சந்தர்ப்பம் வாய்த்தபோது, அது மண்ணுகிவிட்டால் அவர் எப்படித்தான் பொறுப் பார் அதை?

விது: நிச்சயந்தான், அக்கா. சதீசனுக்கு அவன் பெரியப்பா பணம் தருவது தெரிந்தால் வீட்டை விட்டே துரத்திவிடுவார்.

சுகு: துரத்தட்டுமே! அவனுக்கு வேறு எங்கேயுமே விடில்லையா? அடி விது, எனக்குக் கொடேண்டி சதீசனே! எனக்கோ பிள்ளை குட்டி இல்லை. நான்தான் வளர்க் கிறேனே அவனை — என்ன சொல்கிறீர்கள்!

சச: அதுவும் நல்லதுதான். ஆனால் சதீசன் புலிக் குட்டியாயிற்றே! அவனை இழுக்கப் போய்ப் புலியின் வாயில் அகப்பட்டுக்கொண்டு தவிப்பாயே!

சுகு: புலிதான் தன் குட்டியை ஜெயில் அதிகாரியின் கையில் கொடுத்தாயிற்றே! நாம் அவனை விடுவித்து வளர்த்தால் அது ஒன்றும் சொல்லமுடியாது.

சச: பெண் புலி என்ன எண்ணுகிறது? குட்டியின் அபிப்பிராயம் என்ன?

சுகு: அவர்கள் எண்ணமெல்லாம் எனக்குத் தெரி யும். இனிமேல் கேட்க வேண்டாம். கடனை அடைத்து விடுங்கள்.

விது: அக்கா!

சுகு: அக்கா, அக்கா என்று அழாதே. உன் தலையை வாரிப் பின்னிவிடுகிறேன். இவ்வளவு அழகான தங்கை புருஷர் எதிரே வரவே வெட்கமாக இருக்கிறது.

[சகோதரரைத் தவிர மற்ற எல்லாரும் போகி ருர்கள். மன்மதபாபு உள்ளே நுழைகிருர்.]

சச: மன்மத்! கொஞ்சம் யோசித்துப் பார்!

மன்: யோசனை செய்யாமல் நான் எதுவுமே செய்வதில்லையே !

சச: உனக்குப் புண்ணியமுண்டு. நன்ருக யோசனை செய். பிள்ளையை ஜெயிலுக்கா அனுப்பப் போகிருய்? அதனல் நல்லது ஏதாவது உண்டா?

மன்: நல்லது, கெட்டதெல்லாம் கடைசிவரைக்கும் சொல்ல முடியுமா, அப்பா? எனக்குத் தெரிந்தது இவ்வளவுதான். அடிக்கடி சொன்ன பிற்பாடும் ஒருவன் தப்புச் செய்தால் அதன் பலனை அவன் அநுபவித்தே ஆகவேண்டும். நாம் குறுக்கே விழுந்து தடுக்காமல் இருந்தால் இயற்கையின் தண்டனையைப் பெற்றுத் தாளுகவே திருந்தக்கூடும்.

சச: இயற்கையின் கடுமையான தண்டனை ஒன்று மட்டுமே ஒருவனை மனிதனுக்க முடியுமென்ருல் தாய் தகப்பன்மார் உள்ளத்தில் ஏன் அன்பு என்று ஒன்று இருக்கிறது? மன்மத்,நி நாளெல்லாம் 'கர்ம பலன்' 'வினைப் பயன்' என்று அடித்துக்கொள்கிருயே! அதை நான் நம்பாதவன. இயற்கை நம்மிடம் கர்மபலனை வட்டியும் முதலுமாகக் கறந்துவிடுகிறது! ஆனல் அதற்கு மேலேயும் ஒரு கர்த்தா இருக்கிருனே, அவன் நடுவில் புகுந்து எவ்வளவோ குறைத்துவிடுகிருன்! இராவிட்டால் கர்மபலனை அநுபவிப்பதிலேயே நம் வாழ்வெல்லாம் போய்விடுமே! விஞ்ஞானத்தின்படி வினைப்பயன் உண்மை தான். ஆனல் அதற்கு மேலும் ஒரு சாஸ்திரம் இருக்கிறதே! அங்கே அன்பின் பலாபலன்கள் இயல்பானவை. கர்மபலன் சாதாரணமானது. மன்னிப்பு அதற்கும் மேற்பட்ட தத்துவமல்லவா!

மன் : அசாதாரணமானவர்கள் என்ன வேண்டுமானலும் செய்யலாம். நானே சாதாரணமானவன்; கர்மபலனை முற்றும் நம்புபவன்.

சச: சரி, சதீசனின் கடனை நான் அடைத்துவிடு கிறேன் என்று வைத்துக்கொள்! என்ன செய்வாய் அவனை?

மன்: நான் துறந்துவிடுவேன். சதீசனை எப்படி முன்னுக்குக் கொண்டுவர நினைத்தேனே, அதை முதலி லிருந்தே நீங்கள் விலக்கிவிட்டீர்கள். ஒரு பக்கம் அடக்கி ஆள்வதும் இன்னொரு புறம் ஆதரவுமாகப் பெற்று அவன் குட்டிச் சுவராகிவிட்டான். பிச்சைக்கு எதிர் பார்த்து மானம் மரியாதையை அடியோடு மறந்தான். நீங்கள் குறுக்கிட்டு இதை அவனுக்குச் சொல்லாமற் போனால், அவனைத் துறக்காமல் நான் வேறு என்ன செய்ய முடியும்? உங்கள் எண்ணப்படியே அவனைப் பெரிய மனிதன் ஆக்கலாம். இரண்டு இடத்தில் கால் வைத்துத் தான் அவனுக்குக் கஷ்டமெல்லாம் வந்திருக்கிறது.

சச: அதென்ன, அப்படி சொல்கிறாயே, மன்மத் உன் பிள்ளை......

மன்: சசதர், என் எண்ணப்படி பிள்ளையை நான் என் னைப்போல் வளர்க்க முடியும். வேறு வழி எனக்குத் தெரி யாது. அது முடியாதென்று தெரிந்துவிட்டது. அப்புறம் தகப்பன் என்ற உரிமைதான் எதற்கு! என்னால் முடிந்த தற்கு மேல் ஒருபோதும் செய்யமாட்டேன். (போகிறான்.)

சச: என்ன செய்வது! பையனையோ ஜெயிலுக்கு அனுப்ப முடியாது.

* * *

மிஸஸ் பாதுடி: கேட்டீர்களா, சதீசன் அப்பா திடீ ரென்று போய்விட்டாராமே!

பாதுடி: ஆமாம்; கேள்விப்பட்டேன்.

மி: அவர் தம் சொத்தையெல்லாம் ஆஸ்பத்திரிக்கு எழுதி வைத்துவிட்டாராமே? சதீசன் அம்மாவுக்கு மட்டும் உயிரோடு இருக்கும் வரைக்கும் மாசம் எழுபத்தைந்து

ரூபாய் தர ஏற்பாடு செய்திருக்கிறாராம். என்ன செய்வது இப்போது?

பா: உனக்கேன் இவ்வளவு கவலை?

மீ: நன்றாயிருக்கிறதே நீங்கள் சொல்வது! உங்கள் பெண்தான் சதீசன்மேல் காதல் கொண்டிருக்கிறாளே! அது உங்களுக்குத் தெரியாதா என்ன? அவர்களுக்குக் கல்யாணம் செய்துவைப்பதாகக்கூடப் பேசிக்கொண்டு இருந்தீர்களே! இனிமேல் என்ன செய்வீர்கள்?

பா: நான் மன்மத பாபுவின் சொத்துக்காகச் சொல்லவில்லையே!

மீ: அப்படியானால் பையனின் அழகையும் குணத்தையும் பார்த்து மயங்கினீர்களாக்கும், சாப்பாடு, துணியெல்லாம் அவசியமில்லையோ?

பா: அவசியமில்லையென்று யார் சொன்னது? சதீசனுக்கு ஒரு பெரியப்பா இருக்கிறார், தெரியுமா?

மீ: அதனால் என்ன! எத்தனையோ பேர்களுக்குத் தான் பெரியப்பன்மார் இருக்கிறார்கள்!

பா: அவர் என் கட்சிக்காரர்—ஏராளமான சொத்து. பிள்ளைகுட்டி இல்லை. வயசும் குறைச்சல் இல்லை. சதீசனைத் தான் வளர்ப்புப் பிள்ளையாக வாங்கிக்கொள்ளலாம் என்றிருக்கிறார்.

மீ: அப்படியானால் நல்லதாச்சு! சட்டுப்பட்டென்று முடித்துவிடுவதுதானே? கொஞ்சம் அவசரப்படுத்துங்களேன்.

பா: நானகைப் போய்த் தூண்டவேண்டியதில்லை. அவர் வீட்டுக்குள்ளேயே அதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். எல்லாம் ஏறக்குறைய முடிந்தாற்போலத்தான். இப்போது ஒரே ஒரு சட்டந்தான் குறுக்கே நிற்கிறது: ஒரே பிள்ளையை ஸ்விகாரம் எடுத்துக்கொள்ள முடியுமா, முடியாதா என்பதுதான். தவிர, சதீசனுக்கும் வயசு அதிகமாகிவிட்டது.

மீ: சட்டமெல்லாம் உங்கள் கையில்தானே இருக்கிறது! கண்ணை மூடிக்கொண்டு ஓர் ஏற்பாடு செய்துவிடுங்களேன்.

பா: அவசரப்படாதே! - ஸ்விகாரம் வாங்கிக்கொள்ளாமற் போனாலும் இன்னொரு வழி இருக்கிறது.

மீ: பிழைத்தேன். எப்படிச் சமபந்தத்தை விடுவது என்று யோசித்தேன். நம் நெல்லி பிடிவாதக்காரியாச்சே! என்ன செய்துவைப்பாளோ, யார் கண்டது!— ஆனால் அதற்காக ஏழையின் கையில் பெண்ணைக் கொடுப்பதா! அழுது அழுது உங்கள் பெண்ணின் கண் குதறிக் கிடக்கிறது. நேற்றுச் சாப்பிட உட்கார்ந்தாள். அதே சமயம் சதிசனின் அப்பா செத்துப்போன சமாசாரம் வந்தது. அதைக் கேட்டதும் எழுந்து போய்விட்டாள்.

பா: சதீசன்மேல் நெல்லிக்கு ஆசை என்று தோன்றவில்லையே! அவனை அழவைத்து வேடிக்கையல்லவா செய்கிருள்? நந்தியைத்தான் பிடித்திருக்கிறது என்று நினைத்தேன்.

மீ: உங்கள் பெண்ணின் சுபாவமே இப்படித்தான். யார்மேல் ஆசையோ அவர்களையே அழ மூட்டுவாள். அந்தப் பூனைக்குட்டியை வைத்துக்கொண்டு என்ன 'லூட்டி' செய்கிருள் தெரியுமா! - ஆனால் அவளை யாரும் ஒன்றும் சொல்வதில்லையே! இதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

[நளினி வருகிருள்.]

நளினி: அம்மா, சதீச் பாபுவின் வீட்டுக்கு ஒருதரம் போய்விட்டு வரட்டுமா? அவர் அம்மா அழுதுகொண்டே இருக்கிருளாம். அப்பா, அங்கே போய்வருகிறேன்.

* * *

சதீசன்: நான் இங்கே சௌக்கியமாகத்தான் இருக்கிறேன் என்று என் உடுப்பைப் பார்த்தாலே தெரியவில்லையா! ஆனால் பெரியப்பா என்னை ஸ்வீகாரம்

எடுத்துக்கொள்ளாதவரையில் நான் நிச்சிந்தையாக இருக்கமுடியாது. உனக்கு மாதம் வரும் பணத்தினால் எனக்குத் தம்பிடி உபயோகமில்லை. வெகு நாளாகத் தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்; ஆனால் செய்கிற வழியாக இல்லை. ஒரு வேளை இனிமேல் குழந்தை பிறக்கும் என்று நம்புகிறாரோ என்னவோ?

விது: அதுவும் வீணாகவில்லையடா; அப்பா சதீச்!

சதீ: என்ன சொன்னாய்!

விது: இருக்கிற நிலையைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது.

சதீ: உங்கள் ஜோஸ்யமெல்லாம் பொய்யாவது கூட உண்டே!

விது: இல்லை, சதீச்! கட்டாயம் இந்தத் தடவை உனக்குத் தம்பி பிறப்பான்.

சதீ: நீ சொல்வதுகூட நிச்சயமில்லையே. தம்பிதான் பிறக்கவேண்டுமோ! தங்கையாக இருந்தாலும் இருக்கலாமே!

விது: அக்காவின் உடம்பைக் கவனித்தால் பெண் பிறக்காது என்று தோன்றுகிறது. பெண்ணானால் என்ன, பிள்ளையானால் என்ன! நமக்கு இரண்டும் ஒன்றுதான்.

சதீ: இத்தனை வயது கழித்து முதல் குழந்தை ... இதற்குள் எத்தனையோ கஷ்டங்கள்......

விது: சதீச், நீ ஒரு வேலை தேடிக்கொள்ளடா, அப்பா.

சதீ: அதெல்லாம் முடியாது. பரீக்ஷை பாஸ் செய்ய முடியவில்லை. வேலை செய்யும் வழக்கம் என்றைக்கோ விட்டுப் போய்விட்டது. ஆனால் என்னதான் சொல்லு: இது அநியாயந்தான்! இத்தனை நாள் அப்பாவின் சொத்தானால் எனக்குக் கிடைத்திருக்கும். அது கிடைக்காமல் ஏமாந்தேன். திரும்பவும் இன்னொரு... ..

விது: பின் என்ன, சதீச்! இந்தப் பக்கம் உன்னை வீட்டில் வைத்துக்கொண்டே, அந்தண்டை டாக்டரிடம்

மருந்து வேறு சாப்பிட்டு வருகிறாள். சொந்தத் தங்கை பிள்ளை, உன்னிடமா இந்த வஞ்சகம்! கடைசியில் தயாள் டாக்டரின் மருந்தும் பலித்துவிட்டது. வேண்டாம்; மன நிம்மதியாக இரு. பகவான் இருக்கிறார். அவரிடம் எந்த வைத்தியன் மருந்தும் செல்லாது. அவர் மட்டும் ...

சதீ: அவர் மட்டும் இப்போது ...... இன்னும் காலம் இருக்கிறது. இவர்களிடம் நாம் நன்றியுடன் இருக்க வேண்டியதுதான். ஆனால் அநியாயம் செய்துவிட்டார்கள் என்பதை மறக்க முடியவில்லையே! இவர்களுக்கு ஏதாவது கஷ்டம் வரக் கூடாதா என்று ஏங்குகிறதே என் மனசு! அவர் தயை செய்து...

விது: அப்படியே நடக்கட்டும்! இல்லாமற் போனால் உனக்கு வழி இல்லையே! சதீச், எனக்கும் அதே கவலை தானடா பகவானே! தயை செய்து......

சதீ: இது மட்டும் நடக்காமல் இருக்கட்டும். கடவுளை நான் நம்பவே போகிறதில்லை. பத்திரிகைகளில் நாஸ்திகத்தைப் பிரசாரம் செய்வேன்.

விது: அடேடே, அந்தமாதிரியெல்லாம் பேசாதேடா! அவர் தயாள குணமுள்ள அவர்மனசு வைத்தால் என்ன தான் நடக்காது! சதீச்,நீ இன்றைக்கு இவ்வளவு ஜோராக உடுத்துக்கொண்டிருக்கிறாயே! எங்கே போகிறாய்? உயர்ந்த காலர் போட்டுக்கொண்டு தலை தூக்கிக் கொண்டே இருக்கிறாயே! தலை எப்படியடா குனியும்?

சதீ: இப்படிக் காலர் போட்டுக்கொண்டு, தலை நிமிர்ந்து நடக்க முடிகிறவரையில் நடக்கட்டுமே! தலை குனியும் காலம் வரும்போது இவைகளை எறிந்துவிடலாம். அவசரமான வேலை இருக்கிறது. அப்புறம பேசிக்கொள்ளலாம்.

[அவன்போகிறான்.]

விது: எங்கே வேலை இருக்கிறது என்று எனக்குத் தெரியாதா! அடியம்மா! பிள்ளையைப் பிடித்து வைத்துக்

கொள்ள முடிகிறதா! இந்தக் கல்யாணம் நடக்கத்தான் போகிறது. என் சதீசன் அதிருஷ்டம் அவ்வளவு குறைவா! எத்தனை இடைஞ்சல்கள் வந்தாலும் கடைசியில் அவனுக்கு நல்லதுதான் வருமென்று எனக்குத் தெரியாதா? எனக்குத் தெரிந்து நான் ஒரு தவறும் செய்யவில்லை. அதனால் அக்காவுக்கு இந்தத்தடவை கட்டாயம்.........

சுகு: சதீச்!

* * *

சதீ: என்ன, பெரியம்மா!

சுகு: நேற்று எவ்வளவு சொன்னேன், குழந்தைக்குத் துணி வாங்கி வா என்று! உனக்கு அலட்சியமாக இருந்ததாக்கும்!

சதீ: அலட்சியம் என்ன, பெரியம்மா! நேற்றுப் பாதுடி என்னைக் கூப்பிட்டார். அதனால்தான்.........

சுகு: பாதுடி துரையின் வீட்டுக்கு நீ அடிக்கடி போக என்ன அவசியமோ எனக்குத் தெரியவில்லை! அவர்களெல்லாம் பெரிய மனிதர்கள். உன்னைப் போல் சாதாரணப் பேர்வழி அவர்களுக்குச் சமமாக வேஷம் போட முடியுமா? உன்னை அவர்களெல்லாம் இப்போது அண்டவில்லை என்று கேள்வி. அப்படியும் துரைபோல் அங்கே போகவேண்டுமாக்கும்! கொஞ்சங்கூட மானம், மரியாதை இல்லையா உனக்கு! அப்படித்தான் இருக்கட்டும். ஒரு வேலைக்குப் பிரயத்தனம் செய்யக்கூடாதா? வேலை என்றால் கோபம் பொங்கிக்கொண்டு வருகிறது. அதைப் பார்த்தால் அவரை இந்த வீட்டுக் கணக்குப் பிள்ளை என்று யாராவது எண்ணிக்கொள்வார்கள். சர்க்கார்கூடத் தேவலை. அவராக உழைத்துச் சாப்பிடுகிறார்.

சதீ: என்னால் முடியும், பெரியம்மா! நீயாகத்தானே......

சுகு: கடைசியில் பழி எல்லாம் என்மேல்தானே! உங்கப்பன் உன்னைத் தெரிந்துகொண்டிருந்தான். இப்போது தான் எனக்குப் புரிகிறது. போனால் போகிறது சின்னவ

ஞயிற்றே என்று வீட்டில் இடங்கொடுத்தேன். கஷ்டப்படு கிருயே என்று காப்பாற்றினேன். கடைசியில் என்மேல் தானே தப்பெல்லாம்!. இதைத்தான் நன்றி என்பார்கள். சரி, நான் செய்ததுதான் தப்பு. என் வீட்டில் இருக்கிற வரைக்கும் இரண்டு வேலை செய்து கொடுத்துவிட்டுப் போகிருய்! இதைப் போல் யாருமே செய்யவில்லையா! இதில் இழிவு என்ன?

சதீ: ஒன்றுமில்லை. என்ன செய்யவேண்டும், சொல்லு: செய்து தருகிறேன்.

சுகு: குழந்தைக்காக ஏழரை கஜம் பஞ்சவர்ணப் பட்டுத் துணி. ஒரு சூட் (சதீசன்போகப் பார்க்கிருன்.) அடே கேளடா! அவன் அளவை எடுத்துக்கொண்டு போடா. பூட்ஸ் வேண்டும். (சதீசன் மீண்டும் போக முயல்கிருன்.) என்ன அவசரம் என்கிறேன்? தெளிவாகக் கேட்டுக் கொண்டுதான் போயேன். இன்றைக்குக்கூடப் பாதுடி துரையின் பிஸ்கோத்தும் ரொட்டியும் சாப்பிடப் போக வேண்டுமா? குழந்தைக்கு ஒரு ஹாட்! கைக்குட்டைகளும் ஒரு டஜன் வேண்டும். (சதீசன் போகிருன். அவனைத் திரும்பவும் கூப்பிட்டு) அடே சதீசா, ஒரு சமாசாரம். உன் பெரியப்பாவிடம் ஒரு சூட் வேண்டுமென்று சொல்லி எனக்குத் தெரியாமல் பணம் வாங்கிக்கொண்டாயாமே! சுயமாகச்சம்பாதிக்கும் திறமை வந்ததும் தாம் தூமென்று செலவழி. பிறத்தியார் துட்டில் பாதுடியைப் பிரமிக்கச் செய்ய உன் பெரியப்பாவை நச்சரிக்காதே! அந்தப் பணத்தைத் திருப்பித் தா! எங்களுக்கு இப்போது பண இழுப்பு.

சதீ: இதோ கொண்டுவந்து தருகிறேன்.

சுகு: இப்போது கடைக்குப் போ. அந்தப் பணத்திலேயே வாங்கு மீதியைக் கொடுத்துவிடு. ஒரு கணக்கு வைத்துக் கொள். (சதீசன் போகக் கால் எடுக்கிருன்) கேள் சதீச்: இந்தச் சில சாமான்களை வாங்குவதற்காக வண்டிச் சத்தம் இரண்டரை ரூபாய் என்று ஆக்காதே.

இதுதான் உன்னிடம் ஏதாவது வாங்கிவரச் சொல்லவே பயமாக இருக்கிறது. இரண்டு அடி எடுத்து வைப்பதற்குள் உனக்கு யோசனைகள் வந்துவிடுகின்றன. ஆண் பிள்ளை இப்படி இருந்தால் நடக்குமா! — உங்கப்பா. தினமும் காலையில் நடந்துபோய்ப் புது பஜாரிலிருந்து கறிகாய் வாங்கிக்கொண்டு வருவாரே — ஞாபகம் இருக்கிறதா? கூலிக்காக அவர் காலணா கொடுத்ததில்லை.

ச: நீ சொல்வது நினைவிருக்கும்—நானும் தரமாட்டேன். இன்றையிலிருந்து உனக்குக் கூலி, வேலைக்காரன் சம்பளம் எல்லாம் குறைக்கப் பார்க்கிறேன்.

* * *

ஹரேன்: அண்ணா ரொம்ப நாழியாக என்னவோ எழுதுகிறாயே; யாருக்கு எழுதுகிறாய், சொல்லமாட்டாயா?

சதீசன்: போடா, உனக்கென்ன அதைப்பற்றி! விளையாடுடா!

ஹ: என்ன எழுதுகிறாய் காட்டேன் — எனக்கு இப்போது நன்றாகப் படிக்கத் தெரியுமே!

ச: ஹரேன், தொந்தரவு பண்ணாதே! போ, சொல்வதைக் கேள்.

ஹ: கா வன்னா கா, த வன்னா த, ல். காதல்! என்ன அது? உனக்குக்கூடப் பேரிக்காய் பிடிக்குமா! எனக்குக் கூடப் பிடிக்குமே!

ச: போடா, ஹரேன்! கூச்சல் போடாதே! அப்படி எல்லாம் ஒன்றும் எழுதவில்லையே நான்.

ஹ: ஊம் - பொய்யைப் பார். நான் பார்த்தேனே: காவன்னா கா, த, ல் - காதல். அம்மாவைக் கூப்பிடறேன்-காட்டேன்-நான சொல்றது சரியா, தப்பான்னு!

ச: அடேடே! அம்மாவைக் கூப்பிடாதே; என் கண்ணோ இல்லையோ! போய் விளையாடுடா. இதோ இதை முடித்துவிடுகிறேன்.

ஹரேன்: இதென்ன அண்ணு! பூச்செண்டுதானே - எனக்குத் தாயேன்.

சதீசன்: அதில் கையை வைத்துவிடாதே! பூ கசங்கி விடும்.

ஹரேன்: மாட்டேன். கசக்க மாட்டேன். எனக்குத் தா.

சதீசன்: இன்றைக்கு வேண்டாம். நாளைக்கு உனக்கு நிறையப் பூ தருகிறேன்.

ஹரேன்: அண்ணு,இது நன்ருயிருக்கு. நான் எடுத்துக் கப் போறேன்.

சதீசன்: அடே, இது யாருதோடா; உனக்குத் தர முடியாது.

ஹரேன்: போ. நீ பொய்யெல்லாம் சொல்றே! நான் உன்னைப் பப்பரமிட்டு வாங்கிவான்னேன்; நீ பூ வாங்கி வந்திருக்கேயே!

சதீசன்: ஹரேன் டேய், கொஞ்சம் சும்மா இரு. இதோ இதை முடித்துவிட்டு வருகிறேன். நாளைக்கு உனக்கு நிறையச் சாக்கலேட் வாங்கிக்கொண்டு வருகிறேன்.

ஹரேன்: அப்போ என்ன எழுதினேன்னு காட்டு.

சதீசன்: சரி; முதலிலே எழுதி முடித்துவிட்டு அப்புற மாகக் காட்டுகிறேன்.

ஹரேன்: சரி, அப்படின்ஞ நானும் எழுதறேன். (பலகையை எடுத்துக்கொண்டு உரக்க) காவன்ஞ கா-தவன்ஞத-ல்...காதல்.

சதீசன்: உஸ், அடே, நிறுத்துடா.

ஹரேன்: அப்போ எனக்குப் பூ தா.

சதீசன்: இந்தா, எடுத்துக்கொள். கசக்கிவிடாதே. அடே என்னடா அது! பிய்த்துவிட்டாயே! என்னடா தரித்திரம்! (பூவைப் பிடுங்கிக்கொண்டு ஹரேனின் முதுகில் அறைந்து) சனியனே! போடா!

[ஹரேன் உரக்க அழுகிருன்; சதீசன் வெளியே போ 7

போய்விடுகிருன். விதுமுகி பரபரப்புடன் உள்ளே நுழைகிருள்.]

விது: சதிசன் ஹரேனை அழமூட்டினுனே என்னவோ! அக்காவுக்குத் தெரிந்தால் அமளிகுமளியாகுமே! ஹரேன்! என் கண்ணே இல்லையோ! அழாதேடா!

ஹரேன்: (அழுதுகொண்டே) அண்ணு என்னை அடிச்சானே! ஏ-ஏ-ஏ!

விது: சரி சரி, அழாதேடா, நான் அண்ணுவை நன்ருக அடிக்கிறேன். வரட்டும் அவன்!

ஹரேன்: பூவைப் பிடுங்கிக்கொண்டுட்டான், அண்ணு-ஆ-ஆ.

விது: இதோ அதைப் பிடுங்கி வந்து தருகிறேன். (ஹரேன் அழுகிருன்.) இப்படி அழுகிற குழந்தையைப் பார்த்ததே இல்லை. செல்லங் கொடுத்துக்கொடுத்துக் குழந்தையைக் குட்டிச்சுவராக அடிக்கிருள், அக்கா. கேட்டதை அப்போதே கொடுத்தாக வேண்டும்; நவாபு பிள்ளை தான். சிச்சி! சொந்தப் பிள்ளையை இப்படி நாசமாய் அடிக்கலாமா! (மிரட்டி) அடே மூடுகிருயா இல்லையா-பூச்சாண்டி வருகிருன்; அழாதே!

[சுகுமாரி வருகிருள்.]

சுகு: என்னடி அது,விது! இப்படிக்கூட என் பிள்ளைக்குப் பயம் காட்டலாமா? வேலைக்காரர்களைக்கூட அதட்டியிருக்கிறேன்,பயங்காட்டாதே என்று. நிசித்தியாயிருந்துங்கூட அந்தக் கைங்கரியத்தைச் செய்துவைக்கிருய். ஏண்டியம்மா? உனக்கு என்னடி, பண்ணிஞன், என் பிள்ளை? அவனைக் கண்ணுலே பார்க்க உனக்கு ஆகவில்லையே!— தெரியுமடி எனக்கு. உன் பிள்ளையைச் சொந்தப்பிள்ளை போல் வளர்த்தேனே; அந்தக் கடனை இப்படித் தீர்த்து வைக்கிருயாக்கும்!

விது: (அழுதுகொண்டே) அப்படியெல்லாம் சொல்

லாதே, அக்கா. எனக்குச் சதீசன் வேறு, ஹரேன் வேறேயா!

ஹரேன்: என்னை அண்ணா அடிச்சான், அம்மா!

வித்: சீ பைத்தியம்! பொய் சொல்லக் கூடாது. உங்க அண்ணா இங்கே இல்லவே இல்லையே!

ஹரேன்: ஐய! அண்ணா இங்கேதானே கடுதாசி எழுதிண்டிருந்தான். அதிலேகாவன்னா கா-தவன்னா-த-ல்-காதல்னு எழுதினானே, அம்மா. நீ எனக்குப் பப்பரமிட்டு வாங்கிண்டுவான்னு துட்டு கொடுத்தியே, அண்ணா வண்டே; அதுலே அவன் பூ வாங்கிண்டு வந்தான். அதைத் தொட்டுட்டேன்னு என்னை அடிச்சான், அம்மா!

சுரு: நீங்கள் அம்மாவும் பிள்ளையுமாக என் பிள்ளையைக் கொல்கிறீர்களாக்கும்! அவனைக் கண்டாலே உங்களுக்கு ஆகவில்லை! அதுதான் பார்க்கிறேன். புட்டிபுட்டியாக டானிக் குடித்தும் துரும்பாக இளைத்துப் போகிறான். இன்றைக்குத்தான் எல்லாம் புரிகிறது!

* * *

சதீசன்: உன்னிடம் விடை பெற்றுக்கொள்ள வந்திருக்கிறேன், நெல்லி!

நளினி: ஏன், எங்கே போகிறாய்?

சதீசன்: நரகத்துக்கு.

நளினி: அங்கே போக விடை பெற்றுக்கொள்ள வேண்டுமா என்ன? அதற்கு வழி தெரிந்தவன், வீட்டில் உட்கார்ந்துகொண்டே அங்கே போய்விடலாமே! இன்று உன் போக்கு என்னவோபோல் இருக்கிறது. 'காலர்' பாஷன்படி அமையவில்லையோ?

சதீசன்: நாளெல்லாம் 'காலரை'ப்பற்றியே எனக்குக் கவலை என்றுதானோ நீ நினைக்கிறாய்?

நளினி: அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. அதுதான் உன்னைப் பார்த்தால் திடீரென்று ஏதோ கவலையில் இருப்பவன்போல் தோன்றுகிறது.

சதீசன்: பரிகாசம் செய்யாதே, நெல்லி. என் மனசு மட்டும் உனக்குத் தெரிந்திருந்தால்......

நளினி: அத்திப்பூவும் பாம்புக்கு ஐந்து காலும் எனக்குத் தெரியும்.

சதீசன்: நீ மிகவும் துஷ்டி, நெல்லி! திரும்பவும் வேடிக்கையா! நிச்சயமாகத்தான் விடை பெற்றுக்கொண்டு போக வந்திருக்கிறேன், நெல்லி.

நளினி: கடைக்குப் போகவேண்டுமா?

சதீசன்: நெல்லி. உன்னை வேண்டிக்கொள்கிறேன். ஏளனம் செய்து எனக்கு எரிச்சல் மூட்டாதே! இன்றைக்கு நான் கடைசித் தடவையாக விடை பெற்றுக்கொள்கிறேன்.

நளினி: அதற்கு ஏன் இவ்வளவு அவசரம்?

சதீசன்: உண்மையைச் சொல்கிறேன். நான் மிகவும் ஏழை. உனக்குத் தெரியாது.

நளினி: அதற்காக நீ பயப்படுவானேன்! உன்னை நான் கடன் கேட்கவில்லையே!

சதீசன்: உனக்கும் எனக்கும் விவாகம் செய்து வைக்கப் போவதாகப் பேச்சு நடந்தது......

நளினி: அதற்குள் ஒட்டமா- கல்யாணம் ஆவதற்குள்ளே?

சதீசன்: என் நிலைமை தெரிந்து உன் அப்பா அதை நிறுத்திவிட்டாராம்.

நளினி: அந்த மன வருத்தம் தாளாமலா ஓடுகிறாய்? இவ்வளவு மானம் உள்ள ஆளுடன் பழகவே கூடாது.

சதீசன்: நெல்லி, அப்படியானால் இன்னும் நம்பிக்கொண்டிருக்கச் சொல்கிறாயா?

நளினி: உன்மேல் ஆணை, சதிச்! இந்த மாதிரி நாவலில் வருவது போல் பேசாதே! எனக்குச் சிரிப்பாக வருகிறது. நான் உன்னை எதற்காகக் காத்திரு என்று சொல்லப்

போகிறேன்? நம்புபவன் தனக்காகக் காத்திருந்து போகிறான்!

சதீசன்: அது சரிதான், நீ ஏழையை அவமதிப்பாயா என்பது எனக்குத் தெரியவேண்டும்.

நளினி: எனக்குப் பிடிக்கவே பிடிக்காது- அதுவும் ஏழைமையை மறைக்க வேஷம் போடுபவனைக் கண்டால்!

சதீசன்: நெல்லி, இவ்வளவு காலம் பழகிய சுகத்தை விட்டு என் போன்ற ஏழையின் வீட்டில் விளக்கேற்றுவாயா?

நளினி: அதெல்லாம் நாவல் சமாசாரம்.

சதீசன்: அந்த மாதிரி...!

நளினி: சதீச், நீ எந்தப் பரிக்ஷையிலும் தேறமாட்டாய். மிஸ்டர் நந்தியேகூட இந்தமாதிரிப் பேச்சை எடுத்திருக்க மாட்டார்; உங்களுக்கெல்லாம் கொஞ்சங்கூட இடங் கொடுக்கக் கூடாது.

சதீசன்: இன்றுகூட உன்னைப் புரியவில்லை; நெல்லி, எனக்கு!

நளினி: எப்படிப் புரியும்? நான் உன்னுடைய இந்தக் காலத்து 'பாஷன்' டையுமில்லை; காலரும் இல்லையே! நீ இராப்பகலாக எதை நினைக்கிறாயோ அதுதானே உனக்குப் புரியும்!

சதீசன்: நெல்லி, வேண்டிக்கொள்கிறேன். இன்று என்னைக் குத்திக் காட்டாதே, இந்த மாதிரியெல்லாம்! நான் எதைப்பற்றி யோசிக்கிறேன் என்று உனக்குத் தெரிந்தால்-?

நளினி: உன்னைப்பற்றி எனக்குத் தெரிந்தது இவ்வளவுதான் என்று தீர்மானம் செய்யாதே- இதோ அப்பா வருகிறார். என்னை இங்கே பார்த்தால் வீணுக்குக் கோபம் கொள்வார். நான் வருகிறேன். (போகிறாள்.)

சதீசன்: மிஸ்டர் பாதுடி, விடை பெற்றுக்கொள்ள வந்திருக்கிறேன்.

பாதுடி: சரி, இப்போது இன்று......

சதீசன்: போகுமுன் ஒரு விஷயம் இருக்கிறது.

பாதுடி: ஆனால் எனக்குப் பொழுதில்லையே! வெளியே போகவேண்டும்.

சதீசன்: கொஞ்சம் கூட வரலாமா?

பாதுடி: நீ வருவாய். ஆனால் என்னால் முடியாது. தவிர எனக்குத் துணை இல்லையே என்று நான் ஏங்கவில்லை.

* * *

சசதரர்: என்னது? உனக்குப் பைத்தியமா என்ன?

குமாரி: நான் ஒன்றும் பைத்தியமில்லை-உங்களுக்குத் தான் கண் தெரியவில்லை!

சச: இரண்டும் நடக்கக் கூடியவை தான்...ஆனால்......

கு: ஹரேன் பிறந்தது முதல் அவர்கள் முகம் இருக்கிற விதத்தைப் பார்த்தீர்களா? சதீசனைக் கவனித்தாலே தெரியவில்லையா?

சச: எனக்கு அவ்வளவு தூரம் கவனிக்கச் சக்தி இல்லை என்றுதான் உனக்கே தெரியுமே! மனம் கண்ணுக்குத் தெரியாத வஸ்து என்று நான் சிறு வயது முதலே நம்பி வருபவன். நடந்தது தெரிந்தால் ஒரு வேலை புரியலாம்.

கு: சதீசன் மறைவில் உங்கள் பிள்ளையைப் பார்த்தால் அடிக்கிறான் - போதாக்குறைக்கு விதுவும் வந்து பயம் காட்டுகிறாள்.

சச: சின்ன விஷயத்தையெல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்கிறாய். சதீசன் அப்படி எப்போதாவது குழந்தையை......

கு: அதை உங்களால் பொறுத்துக்கொள்ள முடியும். என்னால் முடியாது. நீங்கள் சுமந்து பெற்றெடுக்கவில்லையே அவனை?

சச: அது சரிதான்—உன் அபிப்பிராயந்தான் என்ன?

சுகு: நீங்கள் படிப்பைப்பற்றிப் பிரமாதமாகப் பேசுகிறீர்களே! ஹரேனை எப்படி இருக்கவேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ அதற்கு நேர் எதிராக அவன் சித்தி செய்கிறாள். சதீசனின் விஷயங்களில் அவள் எப்படி இருந்தாள் என்றுகூட யோசிக்க வேண்டியிருக்கிறது.

சச: நீ இவ்வளவு யோசிக்கிறாயே; நான் என்ன யோசிக்கவேண்டும், இதற்கு மேல்? இப்போது என்ன செய்யவேண்டும், சொல்.

சுகு: நான் சொல்வதைச் சதீசனுக்குச் சொல்லுங்கள். அவன் தன அம்மாவிடம் இருந்துகொண்டு வேலைக்குப் பிரயத்தனம் செய்யட்டும். பிறத்தியான் பணத்தில் தாம் தூமென்று ஆடம்பரமாகத் திரிவது நன்றாக இல்லை!

சச: அவன் அம்மாவுக்கு வரும் பணம் சதீசனுக்குப் பேர்தாதே!

சுகு: ஏன்? வீட்டு வாடகை என்னவோ கிடையாது! மாசம் எழுபத்தைந்து ரூபாய். என்ன குறைச்சலா?

சச: சதீசன் நிற்கிற நிலையைப் பார்த்தால், எழுபத்தைந்து ரூபாய் அவன் சிகரெட்டுக்கே போதாது. அம்மாவிடம் இருந்த நகை நட்டெல்லாம் என்றைக்கோ போய் விட்டன! இப்போது சாப்பிடும் சாதத்தை நிறுத்தினால் கூடக் கடனைத் தீர்க்க முடியாது.

சுகு: திறமை இல்லாதவனுக்கு ஏன் இவ்வளவு தடபுடல்?

சச: மன்மதன் இதைத்தான் சொன்னான். நாமேதான் சதீசனுக்கு வேறு விதமாகப் புத்தி சொன்னோம்.— இப்போது அவன் பேரில் எப்படிக் குற்றம் சொல்வது?

சுகு: இல்லை, அவன் பேரில் தப்பே இல்லை! எல்லாம் நாம் செய்ததுதான்! உங்கள் கண்ணுக்குப் பிறத்தியார் தப்பெல்லாம் படுவதில்லை. நம் தவறுதான் அதிகமாகத் தெரியும்.

சச: ஏண்டி இப்படிக் கோபித்துக் கொள்கிறாய்! நானுந் தான் தப்புச் செய்தவன்!

சுகு: இருக்கலாம். உங்கள் பேச்சு உங்களுக்குத்தான் தெரியும். ஆனால், 'உன் பெரியப்பா வீட்டில் கால்மேல் கால் போட்டுக்கொண்டு மீசையைத் தடவு' என்று நான் சொல்லவில்லையே! ஈஸிசேரில் உட்கார்ந்து என் பிள்ளை யின்மேல் எரிந்து விழு என்றும் நான் சொல்லவில்லை.

சச: இல்லையடி; இப்படி எல்லாம் நீ அவனிடம் சொல்லி வாக்கு வாங்கிக்கொள்ளவில்லை. உன் பேரில் தப்பில்லை. என்ன செய்யவேண்டும்? சொல்லேன்.

சுகு: உங்கள் இஷ்டம், செய்யுங்களேன். ஆனால் சதீசன் இந்த வீட்டில் இருக்கிறவரையில் குழந்தையை வெளியில் போக விட முடியாது. டாக்டர் குழந்தைக்கு நல்ல காற்று அவசியமென்று சொன்னார். ஆனால்வெளியே போனால், தனியாகச் சதீசனின் கையில் மாட்டிக்கொள் வான். எனக்கு நிம்மதியே இல்லை. என் சொந்தத் தங்கை பிள்ளைதான் அவன். ஆனால் அவனை ஒரு நிமி ஷங்கூட என்னால் நம்ப முடியவில்லை. இதோ பச்சையாகச் சொல்லிவிட்டேன்.

[சதீசன் வருகிறான்.]

சதீ: யாரை நம்பவில்லை,பெரியம்மா? என்னைத்தானே? சமயம் வாய்த்தால் உன் பிள்ளையின் மென்னியைத் திருகிக் கொன்றுவிடப் போகிறேனே என்றுதானே உனக்குப் பயம்! அப்படிக் கொன்றாலும், உன் தங்கை பிள்ளைக்குச் செய்தாயே அந்தத் தீங்குக்கு ஈடல்ல இது. என்னைக் குழந்தைப் பருவமுதல் வளர்த்துவிட்டு, இன்று என்னைத் தெருவில் ஆண்டியாக நிற்கவிட்டது யார்?— அப்பாவின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்து உலகத்தின் ஆசை அவலங்களை அநுபவிக்க விட்டது யார்?- யார் என்னை.....

சுகு: கேட்டீர்களா? உங்கள் எதிரே என்னை இப்படி அவமானம் செய்கிறானே! அவனே சொன்னானே, கேட்டீர்

களா? உன் குழந்தையின் மென்னியைத் திருகிக் கொல்வேன் என்றானே! என்ன பேச்சு! அடியம்மா! கரு நாகத்தைப் பாலும் பழமும் கொடுத்து வீட்டில் வளர்த்து விட்டேன்.........!

சதீ: என் வீட்டில்கூடத்தான் பழமும் பாலும் இருந்தன. ஆனால் என் ரத்தம் அதனால் விஷமாகி யிராது. என்னைவஞ்சித்தது நீதானே? இப்போது எல்லாம் விஷமாகி விட்டன. உண்மையில் என்னைக் கண்டு பயப்பட வேண்டியதுதான்.

[விதுமுகி வருகிறாள்.]

விது: அடே, என்னடா அது! உன்னைக் கண்டாலே பயமாக இருக்கிறதே! ஏன் அப்படி உற்றுப் பார்க்கிறாய் என்னை! நான் உன் அம்மாடா! என்னைத் தெரியவில்லையா?

சதீ: அம்மாவாம் அம்மா! உன்னை எந்த வாயால் அம்மா என்று கூப்பிடுவேன்! அம்மாவாக இருந்தும் ஏன் என்னை அப்பாவின் கட்டுக்குள்ளிருந்து விடுவித்தாய்? என்னை ஏன் ஜெயிலுக்குப் போகாமல் தடுத்தாய்?- அது பெரியம்மா வீட்டைக்காட்டிலும் பயங்கரமான இடமா? நீங்கள் 'தேவி, தாயே' என்றெல்லாம் அழைக்கிறீர்களே, அந்தத் தேவி உன்னைப்போல் இருந்தால் அவள் ஆதரவு எனக்கு வேண்டாம். என்னை அவள் நரகத்தில் தள்ளட்டும்!

சச: அடே சதீச்! வாடா! என்ன உளறுகிறாய்? வெளியே என் அறைக்கு வா. நிதானமாகப் பேசலாம். நாங்கள் செய்தது தப்புஎன்று எங்களுக்குத் தெரியாதா? -உன் பெரியம்மா ஏதோ கோபத்தினால் சொல்லுகிறாள். அதை அப்படியே எடுத்துக்கொள்ளலாமா? வா, முதலில் செய்த தவறுக்குப் பரிகாரம் செய்யாமல் இருப்போமா! நீ கவலைப் படாதே!

சதீ: பெரியப்பா, பெரியம்மாவுடன் எனக்கு இருக்கும் உறவைப் பார்த்தால் உங்கள் வீட்டுச் சோறு இனி என்

தொண்டைக்குள் போகாது. இதுவரையில் உங்களுக்கு எவ்வளவோ பணம் செலவாகியிருக்கும். அதைத் தீர்க்காவிட்டால் செத்தும் நிம்மதி இராது. எனக்குப் பரிகாரம் ஏதாவது செய்ய வேண்டுமென்ருல் என் கையில் இருக்கிறது; நீங்கள் என்ன செய்வீர்கள்?

சச: சதிச், கேளேன் கொஞ்சம் நிதானமாக. உன் கடமை பிற்பாடு இருக்கவே இருக்கிறது. உனக்குச் செய்த தவறுக்காக நான் பிராயச்சித்தம் செய்தாக வேண்டும். என் சொத்தில் ஒரு பாகம் உனக்கு எழுதித் தருகிறேன். உனக்குச் சேரவேண்டியது அது; தானமில்லே. நான் எல்லாம் செய்து விடுகிறேன். நாளை வெள்ளிக்கிழமை ரிஜிஸ்தர் செய்து விடுகிறேன்.

சதீ: (சசதரரின் பாததூளியை ஏற்று) பெரியப்பா! என்ன சொல்வேன் நான்! உங்கள் அன்பால்.........

சச: போதுண்டா, அப்பா! உன் அன்பு கின்பெல்லாம் எனக்குத் தெரியாது. அதில் பிடித்தம் ஒன்றும் இல்லே. கடனை எப்படியாவது தீர்த்துக்கொள்ளவேண்டும்.; அவ்வளவுதான். எட்டரையாகி விட்டது. நீ சினிமா போவதாகச் சொன்ருயே. போ, சதிச். ஒரு விஷயம் சொல்லி வைக்கிறேன். உயில் மிஸ்டர் பாதுடியைக் கொண்டே எழுதி விடுகிறேன். உன்மேல் அவருக்குப் பிடித்தம் இருப்பது தெரிந்தது. நான் திரும்பும்போது என்னிடம் சதீசன் ஏன் இப்போது வருவதில்லே இங்கே என்றுகூடக் கேட்டார் (சதீசன் போகிருன்.) அடே ராமசரண்! அம்மாவைக் கூப்பிடு.

[சுகுமாரி வருகிருள்.]

சுகு: என்ன நிச்சயம் செய்தீர்கள்?

சச: ஒரு நல்ல திட்டம் போட்டிருக்கிறேன்.

சுகு: தெரியுமே உங்கள் திட்டமெல்லாம், எவ்வளவு தூரம் நன்ருக இருக்குமென்று! எப்படியோ சதீசனே வீட்டைவிட்டு விரட்ட வழி தேடியாச்சோ இல்லேயோ?

சச: அது செய்யாவிட்டால் திட்டம் எதற்கு? என் சொத்தில் மாணிக்கபுரத்தைச் சதீசன் பேருக்கு எழுதி வைக்கலாம் என்றிருக்கிறேன். அது இருந்தால் அவன் நிம்மதியாகக் காலந் தள்ளுவான்.

சுகு: உங்கள் திட்டமும், நீங்களும்! ரொம்ப அழகு தான்! போதுமே, இந்தமாதிரி பைத்தியக்காரன் போல் செய்து வைக்காதீர்கள்!

சச: பார், ஒரு நாள் நம் சொத்தையெல்லாம் அவனுக்கே கொடுப்பதாக இருந்தோமே!

சுகு: அப்போது என் ஹரேன் பிறக்கவில்லை, அது தவிர, உங்களுக்கு இனிமேல் குழந்தை பிறக்காது என்று எண்ணுகிறீர்கள்?

சச: இதோ பார் சுகு, நாம் செய்வது தப்பு. உனக்கு இரண்டு பிள்ளை என்றுதான் எண்ணிக்கொள்ளேன்.

சுகு: அதெல்லாம் எனக்குத் தெரியாது. இந்தமாதிரி செய்துவைத்தீர்களோ சுருக்குப் போட்டுக்கொண்டு சாவேன். இதோ சொல்லிவிட்டேன். (சுகுமாரி போகிறாள்.)

[சதீசன் வருகிறான்.

சச: என்ன சதீச், சினிமாவுக்குப் போகவில்லையா?

சதீ: இல்லை, பெரியப்பா. இனிமேல் சினிமா எதற்கு? இதோ வெகுநாள் கழித்துப் பாதுடி துரை என்னை அழைத்திருக்கிறார்—எல்லாம் உங்கள் உயிலின் பலன்—எனக்கு உலகமே கசத்துவிட்டது. உங்கள் ஜமீன் எனக்கு வேண்டாம்.

சச: ஏன், சதீச்?

சதீ: மாறு வேஷத்தில் உலகத்தில் சுகம் அநுபவிக்க எனக்கு இஷ்டமில்லை. எனக்கு ஏதாவது மதிப்பு இருந்தால் அதைக் கொண்டு எவ்வளவு கிடைக்குமோ, அதுவே போதும்; மேலே ஒரு காசுகூட எனக்கு வேண்டாம். அது தவிர, உங்கள் சொத்தில் பங்கு தருவதாகச்

சொன்னீர்களே - பெரியம்மாவின் சம்மதத்தைக் கேட்டீர்களா?

சச: இல்லை. அவள் அதை... அதாவது, எப்படியாவது ஒரு விதத்தில் ஆகும். சட்டென்று சம்மதிக்காமல் போனாலும்...

சதீ: நீங்கள் சொன்னீர்களா அவளிடம்?

சச: ஆஹா! சொல்லாமல் என்ன?- அவளிடம் சொல்லாமலா...!

சதீ: அவள் சம்மதித்தாளா?

சச: சம்மதித்துவிட்டாள் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் தெளிவாகச் சொல்லி...

சதீசன்: பெரியப்பா, இதெல்லாம் வீண்தான். அவள் சம்மதமிராமல் உங்கள் சொத்தை வாங்கிக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. இன்றுவரை அவள் எனக்குப் போட்ட சாதத்தை வாங்கி எடுக்காவிட்டால் என் உயிர் நிற்காது. அவள் கடனை வட்டியோடு அடைத்தால்தான் நான் நிம்மதியாக மூச்சுவிட முடியும்.

சச: அதெல்லாம் அவசியமில்லை, சதீச்! யாருக்கும் தெரியாமல் கொஞ்சம் ரொக்கம்...

சதீசன்: பெரியப்பா, வேண்டாம். கடனை அதிகமாக்காதீர்கள். ஒரே ஒரு வேண்டுகோள்: உங்களுக்கு ஓர் ஆபீஸ் துரை தெரியுமென்றீர்களே! அவரிடம் சொல்லி ஒரு வேலை பார்த்துக் கொடுங்கள்.

சச: முடியுமா உன்னால்?

சதீசன்: இதற்கப்புறம் முடியாவிட்டால், பெரியம்மாவின் உப்பைத் தின்பதே தகுந்த தண்டனை.

* * *

சுகுமாரி: சதீசன் எப்படிக் கஷ்டப்பட்டு வேலை செய்கிறான், பார்த்தீர்களா! இவ்வளவு பெரிய 'துரை' இன்று பழைய நாள் அல்பாகா கோட்டின்மேல் மடித்த அங்க

வஸ்திரம் போட்டுக்கொண்டு சரியாக ஆபீசுக்குப் போகிருர்!

சச: நம் பெரிய துரை சதீசனை மிகவும் புகழ்கிருர்.

சுகு: நீங்கள் மட்டும், உங்கள் ஜமீனைக் கொடுத்திருந்தால் டை, காலர், பூட்ஸ், சிகரெட்டென்று அதைப் பறக்க விட்டிருப்பான்; நல்ல காலம், நான் சொன்னதைக் கேட்டீர்கள் - அதனுல்தான் சதீசனும் நாலுபேரைப் போல மனுஷனுனன்.

சச: பகவான் எனக்குப் புத்தி இல்லை என்று தெரிந்து தான் ஒரே மனைவியைத் தந்து, அவளுக்குப் புத்தியையும் படைத்து என்னைப் போன்ற முட்டாள் புருஷனை அவள் கையில் தள்ளி இருக்கிருனே- எனக்குத்தானே வெற்றி!

சுகு: போதுமே, உங்கள் பரிகாசமெல்லாம்! அதுகிடக் கட்டும். இத்தனை நாள் சதீச்ன் வாரி இறைத்தானே அந்தப் பணமெல்லாம் இருந்தால்...?

சச: என்றைக்காவது ஒரு நாள் உன் கடனையெல்லாம் அடைத்துவிடப் போவதாகச் சதீசன் சொல்கிருன்.

சுகு: போதுமே! அவன் அப்படித்தான் வாய் நீளமாகப் பேசுவான். அடைத்தாற்போலத்தான்! அதற்குத் தான் காத்திருக்கிறீர்களாக்கும்!

சச: இவ்வளவு நாள் நம்பிக்கொண்டுதான் இருந்தேன். நீ சொல்கிருயே, சரி - இதோ விட்டுவிடுகிறேன்.

சுகு: கொடுத்தால் உங்களுக்கு அவ்வளவாக நஷ்டமில்லை. சொல்வேன். இதோ உங்கள் சதீச் பாபு வருகிருர். வேலை ஆனதிலிருந்து ஒரு தடவைகூட நம் வீட்டுப் படியைக்கூட மிதிக்கவில்லை. இப்படி இருக்கிறது அவர் நன்றி. நான் வருகிறேன்.

[சதீசன் வருகிருன்.]

சதீசன்: பெரியம்மா, ஓடவேண்டாம். என் கையில் கத்தி, கித்தி ஒன்றுமில்லை— கொஞ்சம் நோட்டுதான்.

சச: அடே! இவ்வளவு நோட்டுகளா! ஆபீஸ் பணத்தை

யெல்லாம் இப்படி எடுத்துக்கொண்டு திரிவது நன்ருக இல்லை!

சதீ: இனிமேல் எடுத்துக்கொண்டு திரிய வேண்டியதில்லை. பெரியம்மாவின் கால்களில் தள்ளி விடுகிறேன். நமஸ்காரம், பெரியம்மா. எவ்வளவோ கருணை காட்டினுய். அப்போது கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்று எண்ணவில்லை. கடனைத் தீர்ப்பதில் தப்பு கிப்பு இருக்கலாம். இதோ 15,000 ரூபாய். எண்ணி வாங்கிக்கொள். உன் குழந்தைக்குப் பச்சடி, பரமான்னத்தோடு குறையாமல் சாதம் போடு.

சச: இதென்ன கூத்துடா, சதீச்? இவ்வளவு ரூபாய் ஏது?

சதீ: ஏதோ சரக்குப் பிடித்து விற்றேன். அது விலையேறிவிட்டது. அதனுல் வந்த லாபம் இது

சச: இது சூதாட்டம் அல்லவாடா, சதீச்!

சதீ: இதோடு விளையாட்டெல்லாம் முடிந்துவிட்டது. அவசியமில்லை இனிமேல்.

சச: உன் பணத்தை எடுத்துக்கொண்டு போ. எனக்கு வேண்டாம்!

சதீ: உங்களுக்குத் தரவில்லையே நான். பெரியம்மாவின் கடனை அடைத்தேன். உங்கள் கடனை என்னுல் தீர்க்கவே முடியாது.

சச: என்ன சுகு, இந்த ரூபாயை......

சகு: எண்ணிப் பெட்டியில் வைக்கச் சொல்லுங்கள், குமாஸ்தாவை இங்கேயே இறைந்து கிடக்க வேண்டுமா என்ன?

சச: சதீச், சாப்பிட்டுவிட்டாயோ?

சதி: வீட்டுக்குப் போய்ச் சாப்பிடுவேன்.

சச: அதென்னடா, அது! பொழுதோ ஏறிவிட்டது. இன்றைக்கு இங்கே சாப்பிட்டு விட்டுப் போடா.

சதீ: இனிமேல் சாப்பாடா, பெரியப்பா! ஒரு தடவை

தீர்த்தேன். இனிமேல் சோற்றுக் கடன் வைக்க எனக்கு இஷ்டமில்லை. (போகிறான்.)

சுகு: அப்பனிடமிருந்து காப்பாற்றி, இவ்வளவு நாள் வளர்த்தேனே, இன்று கையில் இரண்டு காசு வந்து விடவே தலைகால் தெரியவில்லை. நன்றியிருக்கிறதா பாருங்கள்! எல்லாம் கலிகாலம்!

* * *

சதி: பெரிய துரை கணக்குகளையெல்லாம் நாளைக்குப் பார்ப்பார். சனால் பணம் கையில் வந்து விடும், எடுத்ததைப் போட்டுவிடலாம் என்று எண்ணினேன். ஆனால் விதியோ படுத்துவிட்டது. ஜெயிலுக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை. சின்ன வயது முதல் அங்கே போகத்தானே வழி செய்து வருகிறேன். ஆனால் என் விதியை ஏமாற்றுவதா! இதோ இந்தப் பிஸ்தலில் இரண்டு வேட்டுக்கள் நிரப்பியிருக்கிறேன். இதுவே அதிகம்.- நெல்லி. அந்தப் பெயர் எதற்கு? அவள்வேண்டாம். அப்புறம் என்னால் சாக முடியாது. அவளுக்கு உண்மையாகவே என்மேல் அன்பிருந்தால் அதை நானேதான் சிதைத்துவிட்டேன். என் உள்ளத்தையெல்லாம் கொட்டிவிட்டேன், எழுதிய கடிதத்தில். இந்த உலகத்தில் என்மேல் அன்பு கொண்டிருப்பது இந்தப் பிஸ்தல் ஒன்றுதான்; இது என் அந்தியகாலத்தின் காதலி. உன் முத்தத்தை நெற்றியில் ஏற்றுப் பிறகுதான் கண்களை மூடிக்கொள்வேன். பெரியப்பாவின் இந்தத் தோட்டம் நானே வளர்த்தது. அகப்படாத மரங்களை எங்கிருந்தெல்லாமோ கொண்டு வந்து நட்டேன். ஒரு நாள் இது என் கைக்குவருமென்று நினைத்தேன். என் விதியாருக்காகவோ இவைகளை நடச் செய்தது. அது அன்று எனக்குத் தெரியாது. இருக்கட்டும்; இதோ, இந்தக் குளத்தின் ஓரமாக இருக்கும் சீமைக்கொடிவீட்டில் என் கடைசி மூச்சை விடுகிறேன். இங்கே காற்று வாங்க யாரும் வருவதில்லை.

பெரியப்பாவை நமஸ்காரம் செய்து அவருடைய பாத தூளியை ஏற்றுக்கொள்ளவேண்டும் போல் இருக்கிறது! இந்தத் தூளியை ஏற்றுச் சென்றால் என் வாழ்வு பய னுற்றதாகும். ஆனால் அவர் சாயங்கால வேளையில் பெரியம்மாவுடன் இருப்பார். இந்த நிலையில் பெரியம் மாவைக் காண எனக்குத் துணிச்சல் இல்லை.முக்கியமாகப் பிஸ்தலும் நிறைந்து இருக்கிறது! சாகும்போது எல்லா ரையும் மன்னித்துவிட்டுச் சாகவேண்டுமென்று சாஸ்திரம் சொல்லுகிறது. ஆனால் என்னால் மன்னிக்க முடியவில் லையே! நான் சாக வேண்டியகாலம் இன்னும் வரவில்லை.எ வ்வளவோ இன்பக் கனவுகள் எல்லாம் கண்டேன். இந்தச் சொற்பவருஷங்களுக்குள்ளேயே எல்லாம் துகள் துகளாகி விட்டன.என்னைவிட எவ்வளவோ முட்டாள்களுக்குக்கூட எதிர்பாராமல் சுகங்கள் கிடைத்திருக்கின்றன. எனக்கோ கிடைத்தும் கிட்டாமல் போய்விட்டது. இதற்கு யார் உடந்தையோ அவர்களை மன்னிக்கவேமுடியாது.முடியவே முடியாது! நான் சாகும்பொழுது தரும் சாபம் அவர்கள் உயிருடன் இருக்கும்வரை அவர்களை வாட்டட்டும்.அவர் களுடைய சுகத்தையெல்லாம் கெடுக்கட்டும்.

சக: ஐயோ! எல்லாம் புலம்பல்.— வெறும் ஓலந்தான்! சாபத்திற்கு வலிமை கிடையாது. என் சாவு என்னை மட் டுந்தான் நாசமாக்கிவைக்கும். ஐயோ! அவர்கள் என் வாழ்வையே நாசமாக்கிவிட்டார்களே!செத்தும் அவர்களை ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறேனே! அவர் களுக்குக் குறைவு ஒன்றும வராது. அவர்கள் சுகமாகவே இருப்பார்கள். டல் தேய்ப்பது முதல் கொசுவலை உதறுவது வரையில் சின்னக் காரியங்கூடக் கெடாது. சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்களின் ஒளி சட்டென்று என்வரைக்கும் அணைவதுதான் பாக்கி. என் நெல்லி— ஐயோ! அவள் பேர் எதற்கு? அது யார்! ஹரேனு? சாயங் காலமாக உலாவ வந்திருக்கிறான்? அப்பா அம்மாவை

ஏமாற்றிவிட்டுப் பேரிக்காய் திருடித் தின்னவந்திருப்பான். அவன் ஆசை இந்தப் பேரிக்காய்க்குமேல் எட்டவில்லை. இந்த மரத்தின் அடிக்கிளையிலேயே அவன் வாழ்வின் சுகமெல்லாம் இருக்கிறது. அவன் வாழ்ந்து உலகத்திற்கு என்ன பலன்? மரத்தில் இருக்கும் ஒரு பேரிக்காய் போலவேதான் அவன் வாழ்க்கையும்! அதைவிட எந்த விதத்தில் உயர்ந்தது? இப்போதே அவனை அகற்றிவிட்டால் வாழ்வில் அவன் என்னைப் போல் அவலப்பட வேண்டியதில்லை!— என் பெரியம்மா— உம்... அவள் புரண்டழுவாள். ஐயோ என்ன செய்வது கையை? சரியான சமயம், சரியான இடம். என் கையைத் தடுக்க முடியவில்லையே— என்ன செய்வது கையை? (தடியால் சதீசன் மரங்களையெல்லாம் அடிக்கிறான். தன் மனக் கொதிப்பு அதிகமாகவே கடைசியில் தன் கையையே அடித்துக் கொள்கிறான். வலி ஒன்றும் தெரியவில்லை. கடைசியில் பைக்குள்ளிருந்து பிஸ்தலை எடுத்துக்கொண்டு ஹரேனை நோக்கி விரைகிறான்.)

ஹரேன்: (திடுக்கிட்டு) யார்? அண்ணாவா, உன்காலிலே விழுகிறேன். அப்பாவண்டைச் சொல்லிடாதே, அண்ணா!

சதீசன்: (உரத்த குரலில்) பெரியப்பா! பெரியப்பா! உன் குழந்தையைக் காப்பாற்றிக்கொள். காப்பாற்றிக்கொள்.

சந்நூர்: (விரைந்து வந்து) என்ன, சதீச்? என்ன?

சுகு: (ஓடிவந்து) என்ன வந்துவிட்டது என் கண்மணிக்கு?

ஹரேன்: ஒண்ணுமில்லையம்மா.—அண்ணா உன்னண்டை விளையாட்டுக்குச் சொன்னான்,

சுகு: விளையாட்டைப் பார்க்கவில்லை! என்ன அநியாயம்! இன்னும் என் மார்பு படக் படக் என்று அடித்துக்கொள்கிறது பாருங்களேன்! குடித்துவிட்டாயா என்ன, சதீச்!

சதீசன்: ஓடிப்போ உன்பிள்ளையோடு. இல்லாவிட்டால் போ 7.

பிழைக்கமாட்டாய். (ஹரேனே எடுத்துக்கொண்டு சுகுமாரி ஓடி விடுகிறுள்.)

சச: சதீச், ஏன் இவ்வளவு கூச்சல்? என்ன நடந்தது சொல்? ஹரேனே யாரிடமிருந்து காப்பாற்றக்கூப்பிட்டாய்?

சதீ: என் கையிலிருந்துதான். (பிஸ்தலேக் காட்டி) இதோ பாருங்கள், பெரியப்பா, இதோ!

[அவசரமாக விதுமுகி நுழைகிருள்.]

விது: என்ன அநியாயம் செய்துவிட்டாயடா நீ! சொல்லேன். ஆபிஸ் துரை போலீஸாரோடு வந்து நம் வீட்டைச் சோதனே போடுகிறுரே. ஓடுவதாக இருந்தால் இப்போதே ஓடிவிடு; ஐயோ பகவானே! நான் ஒரு பாவமும் செய்யவில்லேயே! எதற்காக இவ்வளவு கஷ்டத்தை என் தலேயில் எழுதியிருக்கிறுய்!

சதீசன்: பயப்படவேண்டாம்—ஓட வழி என் கையிலேயே இருக்கிறது.

சச: அப்படியானுல் நீ...?

சதீசன்: அதேதான், பெரியப்பா; சந்தேகப்பட்டாயே அதேதான். நான் திருடிப் பெரியம்மாவின் கடனேத் தீர்த்தேன். அம்மா, நான் திருடன். கேட்டுச் சந்தோஷப்படம்மா! நான் திருடன். நான் கொலேகாரன். அழாதே, போ. என் கண்ணெதிரே நிற்காதே—எனக்கு எரிச்சலாக வருகிறது!

சச: சதீச்! நீ என்னிடமும் கடன்பட்டிருக்கிறுயே! அதைத் தீர்த்துவிட்டுப் போ.

சதீசன்: சொல்லுங்கள், எப்படித் தீர்க்க வேண்டும்? என்னுல் ஏதாவது தர முடியுமா? என்ன வேண்டும்?

சச: இந்தப் பிஸ்தலேக் கொடு.

சதீசன்: இதோ. நான் ஜெயிலுக்கே போகிறேன். போகாவிட்டால் என் பாவம், கடன் எதுவும் தீராது.

சச: பாவத்தின் கடன் தண்டனேயால் தீராது, சதீச்! காரியத்தால்தான் தீரும். உனக்குத் தெரியும்: நான்

சொன்னால் உன்னைப் பெரிய துரை மன்னித்து விடுவார். இன்றுமுதல் வாழ்க்கையைச் சரிவர நடத்திப் பிழைத்திரு.

சதீசன்: பெரியப்பா, இனி நான் உயிரோடு இருப்பது எவ்வளவு கடினமென்று உங்களுக்குத் தெரியும். சாகத் துணிந்துதான் எல்லாவற்றையும் உதறித் தள்ளினேன் எதைக் கொண்டு உயிர் வாழ்வது இனிமேல்?

சச: இருந்தும் நீ உயிருடன்தான் இருக்கவேண்டும். என் கடன் நீ உயிரோடு இருந்தால்தான் தீரும். என்னை ஏமாற்றிவிட்டு ஓடமுடியாது உன்னால்!

சதீசன்: அப்படியே ஆகட்டும்.

சச: இன்னொரு விஷயம்: உன், அம்மா, பெரியம்மா இவர்களை மனமார மன்னித்து விடு.

சதீசன்: என்னை நீங்கள் மன்னிக்கும்போது, நான் யாரைத்தான் மன்னிக்க முடியாது, இந்த உலகத்தில்! (நமஸ்காரம் செய்து) அம்மா, ஆசிர்வாதம் செய். எதையும் பொறுத்துக்கொள்ள முடியும்படி ஆசிர்வாதம் செய். என் குற்றங்களை மன்னித்து எப்படி என்னை ஏற்றுக் கொள்கிறாயோ, அதேபோல உலகை நான் ஏற்றுக்கொள்ளும் சக்தி எனக்கு வர ஆசிர்வாதம் செய்.

விது: அப்பா, என்ன சொல்வது! அம்மாவாகி நான் உனக்கு ஆதரவையே கொடுத்தேன். நல்லது ஒன்றும் செய்ய முடியவில்லை என்னால்! பகவான் உனக்கு அருள் புரியட்டும். அக்காவிடம் போய் உனக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். (போகிறாள்.)

சச: வா சதீச், இன்று என் வீட்டில் நீ சாப்பிட வேண்டும்.

[வேகமாக நளினி உள்ளே நுழைகிறாள்.]

நளினி: சதீச்!

சதீசன்: என்ன, நளினி!

நளினி: இதன் அர்த்தம் என்ன? ஏன் இந்தக் கடிதம் எழுதினாய் எனக்கு?

சதீசன்: உனக்கு என்ன தோன்றியதோ அதேதான். உன்னை ஏமாற்றிக் கடிதம் எழுதவில்லை. நம்பிக்கை இல்லாவிட்டால் சபதத்தை நிறைவேற்ற இன்னும் பொழுதிருக்கிறது!,

நளினி: என்ன பைத்தியம் போல் உளறுகிறாய், சதீச்! நான் என்ன தவறு செய்தேன், நீ அந்தமாதிரி கொடுமையாக........?

சதீசன்: அதற்காகத்தான் இந்தமாதிரி தீர்மானம் செய்தேன்; நான் துளிகூட மறைக்கவில்லை. என்மேல் உனக்கு மதிப்பு உண்டா?

நளினி: மதிப்பா, சதீச்! இதற்காகத்தான் உன்மேல் எனக்குக் கோபமாக வருகிறது. இதோ என் நகைகளையெல்லாம் கொண்டுவந்திருக்கிறேன்: இவை இன்னும் என் சொத்தாகி விடவில்லை; அப்பா அம்மாவின் சொத்து. அவர்களுக்குத் தெரியாமல் நான் கொண்டுவந்திருக்கிறேன். அவைகளின் மதிப்பு எவ்வளவு இருக்குமோ, தெரியாது. ஆனால் அவைகளைக் கொண்டு நீ மீள முடியாதா?

சச: முடியும். இந்த நகைகளுடன் இன்னும் ஒரு மதிப்பற்ற தனம் கொடுத்திருக்கிறாயே, அதனாலேயே சதீசன் மீளலாம்.

நளினி: இதோ...சசதர் பாபுவா!—மன்னிக்கவேண்டும். அவசரத்தில் உங்களை......

சச: அதற்காக வெட்கப்படுவானேன், அம்மா. பார்வைக் குறைவு என்போல் கிழவர்களுக்கு மட்டும் உண்டாகும் என்பதில்லை உன் வயசில் என்னைப்போன்ற கிழவர்கள் சட்டென்று கண்ணில் படுவதில்லை.... சதீச், உன் ஆபீஸ் துரை வந்துவிட்டார். நான் அவருடன் பேசிவிட்டு வருகிறேன் நீ எனக்காக அதுவரையில் விருந்தாளியை உபசாரம் செய், அம்மா. இந்தப் பிஸ்தல், இப்போது உன் பொறுப்பிலேயே இருக்கட்டும். [போகிறார்.]

A.5413